மாசி - 2022

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



**காற்றுவெளி**
கலை இலக்கிய இதழ்

மாசி - 2022

படைப்புக்கள் அனுப்ப :
Neythal34@gmail.com
Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


## வணக்கம்,

காற்றுவெளியின் மாசி மாத (2022)இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.

தை மாத இதழ் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழாக வெளிவந்து பலரையும் சென்றடைந்தமையும்,பல படைப்பாளர்களின் படைப்புக்களால் இதழ் சிறப்படைந்ததும் நன்றிக்குரியவையே.அனைவரும் கைகோர்த்து நம்முடன் பயணிப்பதில் மகிழ்ச்சியே.

அனைத்து இதழ்களையும் தொகுத்து முழு இதழாகச் சொல்லிய ஆலோசனைகளை வரவேற்கிறோம்.அதே வேளை காற்றுவெளி பதிப்பகம் மூலம் நாம் வெளியிட்ட 'இலக்கியப்பூக்கள்' கட்டுரைகளின் தொகுப்பு தந்த அனுபவமும்,கையைச் சுட்டுக்கொண்டமையுமே தயக்கத்திற்காக காரணமாகும்.ஓரிருவர் தருகின்ற நம்பிக்கை வார்த்தைகளோ,அதிகமான வாசகர்கள் விரும்புகிறார்கள் என்பதற்காவோ இதழை மாதா மாதம் அச்சில் கொண்டுவரவும் முடிவதில்லை.

காற்றுவெளியில் வெளிவந்த சிறுகதைகளைத் தனித்த தொகுப்பாகவும்,மொழிபெயர்ப்புச் சிறுகதைகளைத் தனியான தொகுப்பாகவும் (இரண்டு மொழிபெயர்ப்பு சிறப்பிதழ்களை காற்றுவெளி கொணர்ந்தமை குறிப்பிடத்தக்கது)கொண்டுவரும் இவ்வாண்டு வெளியிடவேண்டும் என்கிற கனவும் உள்ளது. ஆங்காங்கே புதிய படைப்பாளர்களின் வருகையும்,அழகிய வடிவமைப்புக்களுடன் நூல்கள் வருகின்றமையும் மகிழ்வைத் தருகிறது. வாழ்த்துவோம். கொறோணா அச்சுறுத்தலுடன்,யுத்த அச்சமும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கிறது.

இந்தப் புதிய ஆண்டில் யாவரும் சுபீட்சத்துடன் வாழ பிரார்த்திப்போம்.

நம்பிகையுடன்,

சோபா.

*வானத்தின் வசீகரங்களை வாரியிறைத்துக் கொண்டு*
*நட்சத்திர பூக்கள் இரவுக்கு கட்டியம் கூறின*

*தென்றலின் குளிர் நெடுமரங்களை தாலாட்ட*
*மீன்கள் நிலவின் விம்பத்தை இரையென்று பிடிக்க ஓடின*

*ஊளையிட முடியாத நாய்கள் தெருவோரத்தில் ஒடுங்கின*
*தெருவிளக்கின் வெளிச்சம் இருளை விரட்ட போதுமானதாக இல்லை*

*வறண்டு போன நதியிலிருந்து புதுவெள்ளம்*
*கடலை நோக்கி நுரைத்துக்கொண்டு பாய்ந்தது*

*தவளைகளும் நண்டுகளும் கடற்கரையில்*
*ஒன்றையொன்று விரட்டிக் கொண்டிருந்ததன*

*வைகறையின் வரவுக் காத்திருந்த வளமான பெண்கள்*
*உறக்கத்திற்கு கண்களை தரவில்லை*

*இரவில் கணவனுக்காக காத்திருந்த மகளீர்*
*கண்களை சிமிட்டாமல் வைத்திருந்தனர்*

*இராக் கோழிகளின் ரீங்காரம் இரவை நீட்டித்தது*
*மேட்டுக்குடி மக்களுக்கும் நடைபாதை வாசிகளுக்கும்*
*சந்திரன் பாரபட்சமின்றி சமமாக வெளிச்சத்தை பகிர்ந்து கொண்டிருந்தான்*

*மனிதர்கள் நிறபேதங்களில் சிக்கி வெறுப்பு அரசியலை நாடெங்கும்*
*பரப்பு அரசியலாக்கி வேதனைகளில் குளிர் காய்ந்தனர்*

*ஆமென்*

▸ மஜினா உமறு லெவ்வை, இலங்கை.

## விம்மி அழும் பூமித்தாய்



கொரோனா கொடுமையால்
பூமித்தாயும் அழுகிறது
சிறிய கிருமியால்
மனசும் துடிக்கிறது
பட்டினியால் வயிறும்
காய்ஞ்சி கிடக்கிறது
காலம் கடந்த பின்னும்
அவலம் தொடர்கிறது

உறவையும் பார்க்கவில்லை
தனிமையில் தடுத்து வைப்பு
உடல் வலி வந்தாலும்
உதவிக்கும் யாருமில்லை
மரணத்தை நினைத்து நினைத்து
நித்தம் நித்தம் பரிதவிப்பு
கொரோனா வந்ததால்
கொடுமையும் அதிகரிப்பு

கடைகளில் ஏறிச் சென்றால்
பொருட்களும் நிறுத்தி வைப்பு
கொரோனா கொடுமைகளை
மனசும் வெறுக்கிறது
பெத்தவளின் உயிரையும்
கண்முன்னே பரித்துச் சென்று
பெத்த புள்ள பார்க்காமல்
உடலும் எரித்து வைப்பு

மனசெல்லாம் நோகுதய்யா
கொரோனா கொடுமை எண்ணி
கண்ணீரும் சுரக்குதய்யா
வாழ்வின் அவலம் எண்ணி

என்று இது அழிந்திடுமோ
மனசும் ஏங்குதய்யா
கொரோனா கிருமியினை
அழிக்க ஒன்றினைவோம்
நித்தம் நித்தம் பிரார்த்தனைதான்
கையேந்திக் கேட்டுக்
கொள்வோம். ●

ஞா. முனிராஜ்

உதிர்ந்திடும் பூக்களில்
என்ன உண்டோ?
இதழோடு இதழாக
அள்ளியெடுத்து சேர்க்கிறாய்
இதழாக நானிருக்க
ஆசைப்பட்டேன்
வரமொன்றுகொடுப்பாயா?

மேகத்தில் ஊர்ந்திடும்
வெண்ணிலவே
இரவுகள் மட்டும்
சிரிக்கின்றன
அப்பிய இருளில்
அசைந்தாடுகிறாய் நீ..!

நின்முகம் பார்த்திட
குளமொன்று ஏங்கிட
தொட்டணைத்து அசைகிறாய்
இரவெல்லாம் பூக்கிறதே
குளமெல்லாம்குலுங்கியதே...!

ஏதேதோ செய்கிறாய்...!
என்முன்னே நகர்கிறாய்
பனிவிழும் பொழுதினில்
குழி விழும் கண்ணத்தில்
குட்டிக் குட்டிப் புன்னகையில்
விழச்செய்கிறாய்
மதியற்று நனைகிறேன்...!

ஆடைகட்டிய பூவும்
விழத்தொடங்கியதே
அசைந்திடும் காற்றில்
இதழ்களை உதிர்க்கிறதே
மெல்ல வாய்திறந்து
உன்னோடு பேசிடவே...!

தரையினில் வீழ்ந்து
மணங்களை உதிர்த்து
மெல்லுடலை
ரணமாக்கிய பூவிதழ்கள்
சென்றடைகிறதே
நின் பாதம்..
பாதம்தொட்ட மலர்கள்
கேசத்தில் ஒதுங்கி
கருங்குழல் கூந்தலை
மயக்கியதே..
மயங்கும் வண்டினமும்
குதிக்கிறதே தேனுண்டு..!

வார்த்தையில்
சொல்லாமல்
கண்ணிமைத்து
விழிமூடிய கயல்விழியே...!
நின் கை பிடித்து
நான் நடக்கும்
கடைவீதியும்
கனவினில் தான்
அறங்கேறியதே..!

விழி நனைத்து
நடக்கிறேன்
விழிகொடுத்து
உயிர்த்தெழுவாய்
வழிதிறந்து ஒளியிடு
நெஞ்சத்தில் தங்கிடு..!
திறக்கட்டும் ஒலியெழுப்பி
இதயக்கோயில்கள்..!

ரகுநாத் வ, மதுரை



## கனவோவியம்

நினைவுகளின் நற்சாயமேற்றி
தேவதையின் பாதசுவடுகளில்
துவங்கப்பட்டதுதான் இவ்வோவியம்.

கலங்கல்களற்றக் காற்றை கொஞ்சம்குழவி
எண்ணச்சிலையை
வடியவிட்டு உலகோர் மெச்ச
செதுக்கிக் கொண்டிருக்கிறேன் அவளை.

கற்பனைத் திறத்தால்
உருண்டேறிய மார்பகங்களை
அவள் கூந்தல் எனும் மேலுறை
கொண்டு போர்த்துகிறேன்.

இமைதனை மேவிய பொழுதுகளில்
கருவிழியில் கடவுளைக் காண
வைரத் தூரிகையால் வெண்குழிக்குள்
புதைகிறேன்.

வதனமேனி வஞ்சியவளின்
மெய்யதனை பிரம்மக்கவிப் பேழையில்
முத்துப்பால் திரண்ட சந்திரபானையென
வடித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு நுகர்ப்பிலும்
ஒரு துணுக்கு மெருகேறி
கொண்டேயிருக்கும் அவளை
மனதின் ஒவ்வொரு மூலையிலும்
மூளையின் ஒவ்வொரு நினைவிலும்
நாற்றங்கால் வாழையாய்
பதியமிடுகிறேன்.

செதுக்கிக் களைத்து முன்னின்ற
பளிங்கவளைத் தீண்டத் துடிக்கும்
விரலரவங்கள் நெளிய
இக்கனவோவியம் தூரிகையினால்
குழைந்து முற்றுப்பெற
போவதில்லை என்பதை
மட்டும் தீட்டி உணர்கிறேன்!

மு.முபாரக்

புத்தனின் வேடமிட்டவன்
தனக்கு கிடைத்த பரிசொன்றை
அம்மாவிடம்
காட்டும் ஆசையில்
விரைந்துகொண்டிருக்கிறான்..
ஊரை நோக்கி!

▸

தேவதையின் வீடு
எப்படியிருக்குமென கேட்கிறாய்..
உன் காலடி படும்
எல்லா வீடுகளும் தேவதையின்
வீடென்பதை அறியாமல்!

▸

குழந்தைகள்
விளையாடுமிடங்களுக்கு
சென்றுவிடுகிறான் இறைவன்,
கோவில்களில்
தேடிக்கொண்டிருக்கிறார்கள்..
பக்தர்கள்!

▸

ஐந்து நிமிட பிரார்த்தனைக்குள்
ஐநூறு பிரச்சனைகள் ஊடுருவிக்
கொண்டிருக்கின்றன
இதயத்தில்,
ஊசலாடுகிறது..இறைபக்தி!

▸

சிறகால் வானை அளக்கும்
பறவையாய் வாழ்வதொன்றும்
அத்தனை சுலபமில்லை..
காடுகளையும் மரங்களையும்
அழித்துக்கொண்டிருக்கும் உலகத்தில்!

▸

கையில் பணமிருந்தும்
இல்லையென
கைவிரிக்கும் மனதோடு
பிறக்கா வரம் கேட்கிறான்..
யாசகன்!

▸

உன்னையும் என்னையும்
யாராலும்
பிரிக்க முடியாதென சொன்னவர்கள்
தனித்தனியே
வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்..
அந்த இடைவெளிக்குள்
வாழ்ந்துகொண்டிருக்கின்றன,
முகமறியா முகங்கள்!

▸

பொம்மையோடு
விளையாடும் குழந்தை,
பொம்மையாக
வரம் கேட்கிறாள்..
குழந்தை பேறில்லா பெண்!

▸

எல்லாம் கிடைக்கிறது..
கூகுளில்,
சிறு வயதில் தொலைத்துப்போன
அம்மாவைத்
தேடிக்கொண்டிருக்கிறான்..
அனாதை சிறுவன்!

▸

இறந்த அப்பாக்கள்
நட்சத்திரமாகிவிடுவார்களென
யாரோ சொல்ல கேட்ட
இரவொன்றில்,
தேடிக் கொண்டிருக்கிறேன்
வானமெங்கும்,
என்னைத் தேடி வாசலில் வந்து
நிற்கிறான்..மகன்!

●

## சிறு வெளிச்சம்

*இருளை எறிகிறேன்
இன்னதென இல்லாத இலை முகங்கள்
வளைந்து நெளிந்து
நீண்டு மருளும் பிசுபிசுப்புக்குள் வழியும்
வெளியின் பிழை அது
எடுத்து அப்பிக் கொண்ட
இன்னிசையென இனம் காணவே
இயலாத எதிர் நீச்சலும் அது
துகள் துகளாக தூண் தூணாக
பின்
பெரும் பாறையென அசையும் இரவுக்கு
யானை கால் நினைப்பு
பிராண்டித் திரியும் கீறல்களோடு
மூழ்கித் திரியும் மர்மத்தின் மறுபக்கமும்
துளிகூட அனிச்சை இல்லாத
வேண்டுமானாலும் மீண்டும்
கீறிப் பார்க்கலாமென இருளின் மூச்சு
நகரும் ஒரு பெரும் வளைவில்
மூச்சடைத்து கழுத்துடைந்து
உடல் விரிந்து பெருக பெருக பெருகுகிறது
இரவென்று எவனோ எழுதிய
சிறு வெளிச்சம்...!*



▸ காவிரிமைந்தன்
பம்மல் – சென்னை

## காலச் சக்கரம்..

*அலைமுதல் கடல்வரை ஓயாமல்
இயங்கிநிற்க
மலைமுதல் மண்வரை மாற்றத்தைத்
தாங்கிநிற்க
காலமும் நேரமும் கடுகளவும் மாறாமல்
கடமை ஆற்றுகின்ற காலச் சக்கரமே!!*

*அக்கினிப் பிழம்பினில் அவதரித்த
பூமியன்றோ?
அதனால்தான் இன்னமும் அனலிங்கே
பறக்கிறதோ!*

*ஆண்டுபல கோடி ஆனதென்றபோதிலும்
-காலச்சக்கரந்தான்
ஒருபோதும் நிற்பதில்லை!*

*தட்பவெப்பம் தடுமாறி நிலைமாறும்
பூமியில்
உற்பத்தி விகிதங்கள் உருமாறிப் போகிறது!*

*இயற்கையில் தீப்பற்றிக் காடுகள்
அழிகிறது
செயற்கையின்விளைவினால் ஓசோன்
கிழிகிறது!*

*அண்டார்டிக் பகுதியில் பனிக்கட்டி
வழிகிறது
அண்டமெங்கும் பலமாற்றம் அங்கங்கே
தொடர்கிறது!*

*அணுசக்தி விஞ்ஞானம்
அதிசயமாய் வளர்கிறது
ஆபத்தும் அருகிருந்து
ஆட்டிப் படைக்கிறது!*

*முதலும் முடிவுமாய்
வாழ்வெனும் வட்டம்!
முன்னேற்றம் பெற்றிட என்னதான்
திட்டம்!*

*ஒவ்வொரு நொடியிலும் துடிப்புகள்
உண்டு!
ஒவ்வொரு நாளிலும் மாற்றங்கள் உண்டு!*

*மானுடப் பிறப்புக்கு
மகத்துவம் உண்டு
உயிர்வாழ நலம்செய்தால்
எல்லோர்க்கும் நன்று..*

*சக்கரத்தின் சுழற்சியிலே எல்லாம்
தலைகீழாய் மாறுது! - காலம்
நலம் செய்யும் எனும் நம்பிக்கையில்தான்
வாழ்க்கையே வாழுது..*

●




## பெத்தவன் - இமையம்.

விருத்தாலம் (விருத்தாச்சலம் அருகே சாதியைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு அலையும் ஒரு கிராமத்தில் நடந்த நிஜ சம்பவமாகத்தான் இந்த கதை நீள்கிறது. பழனி என்பாரது மகள் பாக்கியம் கீழ்சாதிக் கார இளைஞனை காதலித்து மூன்றுமுறை வீட்டை விட்டு ஓடியிருக்கிறாள். மூன்று முறையும் ஊரார் அவளை தடுத்ததோடு மட்டுமிலாது அடித்தும், மானத்தைக் கெடுத்தும் அவமானப்படுத்தியுள்ளார்கள்.



அதாவது தண்டனை என்றபெயரில் சாணியைக் கரைத்து அவள் வாயில் ஊத்தியதும், மயிரை அறுத்ததும், இருபது முப்பது இளந்தாரிங்க தன் ஆண் உறுப்பைக் காட்டி "இதுக்காகத்தானே அலையிர.. வாடி.."னு காட்டியெதெல்லாம் சாதிய ஆணவத்தின் நீட்சியாகவே பார்க்க முடிகிது. கதையாக கேட்கும்போதே மனம் சஞ்சலம் அடைகிறது.

இரண்டுமுறை பாக்கியத்திற்கு பழனி

திருமண ஏற்பாடுகள் செய்தும் தூக்குப்போட்டும், விசம் அருந்தியும் அத்திருமணத்தை தடுக்கிறாள் பாக்கியம். இதனால் வெகுண்டெழுந்த சாதிய ஆணவ மயிர்கள் ஊர் கூடி பஞ்சாயத்து செய்வதாக கதை தொடங்குகிறது.



கட்சிக்காரன் முதல் கடையன் வரை தன் ஆணவ சாதிமயிற்றை யாரும் மழித்துவிடக்கூடாது. அதற்காக எத்தனை தலை உருண்டாலும் பரவாயில்லை, யாருடைய குடி அழிஞ்சாலும் பரவாயில்லை.. என கொம்பு சீவி விடுவதாகவே அந்த பஞ் சாயத்தை நீட்டிக்கிறார்கள். அதுவும் தன் சாதிப் பெருமையை ஒரு பொட்டச்சி கெடுக்க விடறதா..! என உசுப்பி அப்பனையே மகளை விசம் வைத்துக் கொல்லச்சொல்வதாக பஞ்சாயத்து முடிகிறது. பாக்கியத்தை காதல் செய்தவன் கீழ்சாதியா இருந்தாலும் அவன் படிச்சி போலீஸ் ஆனதால தன் சாதி ஆணவம் எதுவுமே செய்ய முடியாத இயலாமையை வெட்டவெளிச்சமாக்கி கதை நகர்கிறது.

ஊர் சபை முன்னால் தன் மகளை விசம் வைத்துக் கொல்லும் உத்தரவுக்கு இசைந்த பழனி தன் வீட்டிற்குச் செல்கிறான். மனைவி சாமியம்மாளையும், அம்மா துளசியையும், இளைய மகள் செல்வராணியையும் (கதையில் கால் ஊனமுற்றவளாக காட்டப்பட்டிருக்கிறாள்) வாய்க்கு வந்த வார்த்தைகளில் திட்டுகிறார். தன் மூத்த மகள் பாக்கியத்திற்கு தன் கையாலயே உணவு கொடுத்ததும் அனைவரும் அதை விசம் என்றுதான் நினைத்து ஒப்பாரி வைக்கிறார்கள். மூன்று வருடங்களாக பேசாத அப்பா உணவு தருவதை விசமென்றாலும் மகிழ்ச்சியோடு வாங்கியுன்னும் மகளைக் கண்டு பழனியும் அழுகிறார்.

கையில் இருக்கும் பணத்தையும், நகை நட்டுகளையும் பாக்கியத்திடம் கொடுத்துவிட்டு "நீ விரும்பிய பையலயே கட்டிக்கோ! " என்பது போல சொல்கிறார் பழனி. பாக்கியம் நான் உங்க கூடயே இருந்துக்கிறேன் என்கிறாள். இப்படியான மல்லாடுதலில் அனைவருமாக பாக்கியத்தை அனுப்பிவைக்க முயல்கிறார்கள்.

சாமியம்மாள் ஜாதகம் பார்த்தை கதை நினைப்பும், வௌக்கு அணைந்த சகுணமும், பல்லி கத்தும் சைனமும் கதையின் இறுதி வடிவமாக மாறுதா, இல்லையா என்பது ஒரு பார்வை என்றாலும்.. சாதி ஆணவத்திற்கு பின்பாக ஆண்கள் செய்யும் கழிசடை வாழ்வியலுக்கு கண்ணு மூக்கும் முளைப்பதில்லை என்பதையும், பெண்கள் நடத்தையே அந்த குடும்பத்திற்கு மட்டுமல்லாது சாதிக்கும் பெருமை என்ற முட்டாள் தனத்தையெல்லாம் சொல்லாமல் வெளிப்படுத்தியுள்ளார் எழுத்தாளர் இமையம்.

கதையின் ஊடாக பாலூரில் ஒரு மேலைச் சாதி பொண்ணும் கீழ்சாதி பையனும் திருமணம் செய்ததால் இரண்டு சமூகங்களுமே இணைந்து காதில் விசம் ஊற்றிக்கொண்டதையும், நல்லூரில் ஆதிக்க சாதி ஆண் ஒருவன் கீழ் சாதிப் பெண்ணை மணம் முடித்ததால் அந்த பெண்ணை மானபங்கம் செய்து கொன்றதையும் பதிவு செய்திருக்கிறார்.

சாதிப் பெருமையில் சிக்கிய பாவத்திற்காக இறுதியில் பழனி செத்துக் கிடக்கிறார்.. நாய் குட்டி வாலாட்டிக்கொண்டிருக்கிறது.

●

▸ மு. ஆறுமுகவிக்னேஷ்



# அ:

முதன்முதலில்
'அ' எழுதிப் பார்க்கிறான்
அகரமுதல்வன்

'அ' என்றால் வெறும் 'அ' மட்டும் அல்ல
அதில் இருக்கிறார்கள்
அம்மாவும் அப்பாவும்
அதில் இருக்கின்றன
அன்பும் அறமும்


'அ' எழுத
முதலில் வட்டமாக சுழிக்கும் போது
அந்தப் பூஜ்ஜியத்தில்
ராஜ்ஜியம் செய்ய வந்தது சூரியன்

பின்பு பிறையாக வளைக்கும் போது
அதில் வீசுகிறது
முத்துச்சுடர் போலே
மூன்றாம் பிறையின் நிலவொளி

அதன் பின்பு வரையும் நீள்வட்டம்
கோள்கள் சூரியனைச்
சுற்றி வரும் பாதையாகிறது

அதற்கு அப்புறம்
நேர்கோடு ஒன்று
பாதசாரியின் பயணமாய் நீள்கிறது
பின்னர் குறுக்குக்கோடு ஒன்று
இலக்காக வந்து
பயணத்தை நிறைவு செய்து வைக்கிறது. ●

புசல்லாவை கணபதி



## இரவும் நாயும்

இரவை
குரைத்து விரட்டும்
முயற்சியில்
முற்றத்து நாய்

சப்தங்களை
தின்று தீர்த்த
நிசப்த இரவில்
நாயின் குரைப்பு மட்டும்
குறையவில்லை

இரவின்
கருமையை - நாய்
எதிரியாகவே
எழுதிக்கொண்டது

குரைப்புக்கு
தலை குனியா இரவு
தன்பாட்டில்
கொள்கையில் குறியாயிருந்தது


களைத்துப்போன நாய்
அசதியில் கண்ணயர்ந்தது
இரவு - மீள்
ஜனனத்துக்காய்
மரித்தது

திடுக்கிட்டெழுந்த நாய்
முன்பைவிட பலமாய்
குரைத்தது
அங்குமிங்குமோடி
களித்தது

இரவை விரட்டியதாய்
இறுமாப்புக் கொண்டது

நாய்க்கு
கடைசிவரை தெரியாது
இன்றும் - இனியும்
இரவுக்காக
குரைத்துக்கொண்டே
இருக்குமென்று...

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்




## மழைப்பசி

மாலை வேளையிலே மழையும் பெய்திடிச்சி
மனதில் மகிழ்ச்சி வெள்ளமாய்ப் பொங்கிடிச்சு
பசியும் வந்து வயிற்றைக் கிள்ளிடிச்சி
குசினி உள்ளே வேலை வந்துருச்சு
சுள்ளி விறக நாலா உடைச்செடுத்து
சோக்காத்தான் செம்மண் அடுப்ப மூட்டி
சட்டிய வெச்சு ராசாத்தி நீ ரொட்டிய சுடுகையிலே
வேகும் மணமோ எங்கோ போகுது
நாக்கும் ஊறியே எச்சிலும் வருகுது
நடையோ சமையலறை நோக்கி இழுக்குது
தேங்காயப் பூப்போல துருவித்
தேசிக்காயப் பாதிய பிளிஞ்சு விட்டு
செத்தல் மிளகா வறுத்திடித்து
சந்தியெல்லாம் மணக்க சம்பல அரைச்சி
சூடான ரொட்டியும் தேங்காய்ச் சம்பலும்
தொட்டுச் சாப்பிடத்தான் சுகமாய் இருக்குது
சொர்க்கலோகம் வந்து நாவில் அமருது
கண்கள் சொருகி தூக்கம் வருகுது
மச்சி செஞ்ச ரொட்டியோ மனசில நிக்குது
மழைப்பசிக்கொரு மருந்தாய் ஆகுது.



## சுழற்ச்சி

தங்கைக்குப் பாதி தனக்குப்
பாதியென ஒடிக்கப்பட்டது ஒரு
முழுநீள சிலேட்டுக் குச்சி
அண்ணனுக்கு சற்று
அதிகமாய் போனதென
அடித்தொண்டை போட்டு
தரையில் வீழ்ந்தழுவாள் தங்கை
அப்பாவின் சிறு அதட்டலோடு
கனப்பொழுதில் கைமாற்றப்படும்
என் சிலேட்டுக்குச்சி அவளிடத்தில்
என்னை வென்றிட்ட மகிழ்ச்சியில்
அவளது முகம் ஜொலிக்கும் ஒரு
பௌர்ணமியாய்
கால சுழற்சியில் பருவ வயதடைந்து
திருமணம் முடித்து தாயாகிப்போனாள்
இரு குழந்தைகளுக்கு
வார விடுமுறை தினமொன்றில்
அவளை நலம் விசாரிப்பதற்காக
கைப்பேசியில் அழைக்கிறேன்
ஓ.! வென்ற அழுகுரல் சத்தம்
மட்டும் அவள் கைப்பேசியில்
கேட்கிறது
பதறிப்போனவனாய்
என்னவென விசாரிக்க முற்படுகையில்
அவளே முந்திக்கொண்டு
சொல்கிறாள்
உடைக்கப்பட்ட ஒரு சிலேட்டுக் குச்சிக்கு
தன் குழந்தைகளிரண்டும்
சண்டையிட்டுக் கொள்வதாக. ●



# கால பயணம்

முன்னுரை :

காலபயணம் என்றால் நம் மனதிற்கு வந்து நிற்பது ஒரு எந்திரமும் அதன் வழியே மனிதர்கள் காலத்தை கடந்து பயணம் செய்வதாக நாம் படித்த சில கதைகளும், சில படங்களும் மட்டுமே... ஆனால், இந்த வார்த்தை எழுச்சி அடைய பல காரணிகளும், பல அறிவியல் அறிஞர்களும் அத்துடன் சில முன்னோர்களும் நம் மனதில் நிற்க வேண்டி உள்ளது.. நாம் இவ்வளவு தொழில்நுட்ப வளர்ச்சியினை சந்திக்கும் போதே நாம் கால பயணம் என்ற வார்த்தையை ஒரு வியக்கத்தக்க கற்பனையில் காண்கின்ற சொல்லாகவே பார்க்கிறோம், ஆனால் நம் சங்க நூல்களில் சிலவற்றில் கால பயணம் செய்து வந்ததாக சில வார்த்தைகளை காண முடியும் உதாரணத்திற்கு "முக்காலம் உணர்ந்தவர்" என சில முனிவர்களை குறிப்பிடுவதை படித்திருப்போம், அந்த கூற்றின்படி கால பயணம் செய்திருக்கலாம் என நம்ப முடிகிறது... இப்போது, இந்த கால பயணத்தை பற்றி தெரிந்து கொள்வதற்க்கு நாமும் ஓர் அறிவியல் பயணம் இந்த கட்டுரையின் வழியாக செல்லலாம்...

## கால பயணம் சிறுகுறிப்பு :

*கால பயணம் என்ற தலைப்பை வாசித்ததும், நாம் சில விசயங்களை யோசித்திருப்போம், உங்களை கட்டுரை உலாவிற்க்கு அழைத்து செல்லும் எனக்கு அதனை பற்றிய சில தகவல்களை கூற வேண்டிய கட்டாயமும் கடமையும் உள்ளதல்லவா?? "காலம் பொன் போன்றது" என்ற பழ மொழியை வைத்து பார்த்தாலே நமக்கு தெரிந்திருக்கும் காலம் எவ்வளவு முக்கியம் என்று, காலத்தை நம்மால் ஒரு போதும் திரும்ப பெற முடியாதென்பதே நாம் இந்த பழமொழியின் மூலமாக அறிந்து இருக்கிறோம். ஆனால், முடியும் என்று பழமொழியை மறுத்து கூறிய அந்த சொல்லே "கால பயணம்". அதாவது, ஒரு மனிதனோ அல்லது பொருளோ எப்பொழுது தான் வாழும் காலத்தை விடுத்து அதற்கு முந்தைய காலத்திற்கோ அல்லது பிந்தைய காலத்திற்கோ செல்ல முடியும் என்று கூறுகிறோமோ அதனை தான் நாம் கால பயணம் என்று கூறிகிறோம்... காலம் என்ற சொல்லின் உண்மையான அர்த்தம் என்னவென்று அறிய வேண்டி உள்ளது, நேரம் என்ற சொல்லுக்கும் காலம் என்ற சொல்லுக்கும் என்ன வேறுபாடு, ஆங்கில மொழியில் உச்சரித்தால் "டைம் ட்ராவல்" என்ற சொல் அல்லவா, அப்படியென்றால் தமிழில் அதை நாம் ஏன் நேர பயணம் என்று அதனை கூறாமல் கால பயணம் என்கிறோம், இதுவே தமிழ் மொழியின் மற்றும் ஒரு சிறப்பு, ஏனெனில், நேரம் என்ற சொல் காலத்திற்க்கு ஏற்றார் போல பல விதமாய் பிற்காலங்களில் மாறுபட்டுள்ளது, நேரத்தை விடுத்து காலத்தை நாம் பயன்படுத்தியுள்ளோம்... நாம் இன்று பயன்படுத்தும் நாட்காட்டிகள் கூட முற்காலங்களில் வேறு சில மாற்றங்களோடு இருந்துள்ளன, இப்போது நாம் பயன்படுத்தும் நாள்காட்டி கூட கிரிகாரியன் வகை நாள்காட்டி என கேள்வியுற்றிருப்போம்...*

## கால இயந்திரம் :

*கால பயணம் என்றால் என்ன என்பதை குறித்து சிறு தகவலினை அறிந்தோம், ஆனால் இப்பொழுதும் அந்த கால பயணம் பேசு பொருளாகவே உள்ளது, இதை பற்றிய ஆராய்ச்சிகள் பலவாறு சென்று கொண்டு தான் இருக்கிறது. இந்த பயணத்தை சாத்திய படுத்த காரணமாக இருப்பதாக நாம் நம்பி கொண்டிருக்கும் ஒரு பெரிய கருவியே இந்த கால இயந்திரம், இந்த இயந்திரம் இருப்பதற்கான ஆதாரங்கள் நம்மிடம் இல்லாத போதும் கூட இப்படி ஒரு இயந்திரம் இருந்தால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று யூகித்து அதனை சில நூல்களாகவும், படங்காளாகவும் எடுத்து அதனை வெளியிட்டும் உள்ளனர்... ஆனால், அவை எல்லாம் ஒரு கற்பனை கதையாகவே நம்மால் காண முடியுமே தவிற அதனை எப்போது காண்கிறோமோ அப்போது தான் அதனை பற்றிய செயல்பாடுகளை மற்றும் அதன் விளைவுகளை பற்றியும் நாம் உணர முடியும்... இப்படி ஒரு இயந்திரத்தை உருவாக்கவும் பல விஞ்ஞானிகள் முயற்சி செய்கின்றனர், ஆனால் அதனை கண்டு பிடிக்கும் வரை இந்த கால இயந்திரம் பற்றிய சிந்தனை நம் மனதில் வளர்ந்து கொண்டே தான் இருக்கும்...*

## எப்படி கால பயணம் சாத்தியம்? :

*ஏற்கனவே நான் கூறியதை போல கால பயணத்தை பற்றி புகழ் பெற்ற மேல் நாட்டு விஞ்ஞானிகளான அல்பர்ட் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் ஹாக்கிங் மற்றும் இன்னும் சிலர் எழுத்து வடிவமாக கூறியுள்ளனர்... ஏற்கனவே கூறியதை போல நம் தமிழ் முனிவர்களான அகத்தியர் மற்றும் பலர் கால பயணத்தை செய்துள்ளனர் என சில நூல்களின் மூலம் அறிய முடிகின்றது... ஆனால், இவை அனைத்தும் எழுத்து வடிவமாக உள்ளதால் நாம் அதனை நிகழ்காலத்தில் நம்ப முடியாத நிலையில் உள்ளோம், ஆனால், இதனை செயல் வடிவமாக மாற்றுவதற்கு*

ஒருவேளை முடியும் என்ற நிலை ஏற்பட்டாலே தவிற இதற்கான விடை தெளிவுறாது... கால பயணம் சாத்தியமா என கேட்டால், சிறிதளவு சாத்தியமே என நம்மால் கூற முடியும், ஏனெனில் நாம் விமானத்தில் பயணிக்கும் போது மிக சிறிய விநாடிகளில் கால பயணம் மேற்கொள்கிறோம் என்று அறிவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.

## அண்டமும், கால பயணமும் :

கால பயணத்தை பற்றிய ஒரு செய்தியை படித்திருந்தாலே அதனோடு அண்டத்தை பற்றிய சில தகவல்களையும் சேர்த்து படிக்கவோ கேட்கவோ நேரிடும், கால பயணத்தை பற்றிய பலரது கருத்தே அண்டத்தோடு தொடர்பு உடையதாகவே இருக்கும். காரணம் என்னவென்றால் காலம் என்ற சொல்லை நாம் எதனை அடிப்படையாய் கொண்டு கணக்கிடுகிறோம் நாட்கள் மற்றும் நேரம், நாம் முன்பே அறிந்திருப்போம் 365 1/4 நாட்கள் என்பது சூரியன் பூமியை சுற்றி வரும் கால அளவு,இதில் இருக்கும் ரு என்ற அளவு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை லீப் ஆண்டு என்று கணக்கிடுகிறோம்... அதிலும் குறிப்பாக “கருந்துளை” என்ற வார்த்தை கண்டிப்பாக இடம் பெற்றிருக்கும், கருந்துளை வழியாக கால பயணம் சாத்தியம் என்ற கருத்தே இந்த வார்த்தைகள் வெளி வர காரணம்... கருந்துளை எப்படி தோன்றும் என்றும் நாம் அறிந்ததே ஒரு நட்சத்திரம் தன் ஆயுள் காலம் முடியும் போது அது பெரும் ஒளியும் சத்ததுடனும் வெடிக்கும், அதனால் ஏற்படும் ஈர்ப்பு விசையினால் அனைத்து பொருட்களும் அதனுள் ஈர்த்து கொள்ளும் அதின் ஒளியும் கூட அடங்கும் இதனை நாம் கருந்துளை என்போம்...

## ஒளியும், பயணமும் :

அதே போல கருந்துளை என்ற வார்த்தைக்கு அடுத்த படியாக “ஒளி” என்ற வார்த்தையும் பார்க்க நேரிடும், இதற்கான காரணம் என்னவென்றால், ஒளியின் வேகம் நாம் அனைவரும் அறிந்ததே ஒலியின் வேகத்தை விட பன்மடங்கு அதிகம் இதை பற்றி நாம் அறிந்திருப்போம்... அத்தகைய வேகத்தை உடைய ஒளியே சூரியனிடமிருந்து பூமியை வந்தடைய சுமார் 8 நிமிடம் வரை எடுத்து கொள்ளும் என்று கூறுவார்கள். மேலும் சிறு துளையின் வழியாக கூட உள்புகுந்து செல்ல முடியும் ஒளியினால், அந்த ஒளியின் வேகத்தை விட அதிகமான வேகத்தில் பயணித்தால் கால பயணம் சாத்தியம் என்ற சிலரின் கூற்றே இந்த வார்த்தை அடிக்கடி கால பயணத்தோடு தொடர்ந்து வருவதற்கான காரணம்... ஆனாலும், நாம் ஒளியின் வேகத்தில் பயணித்தால் கால பயணத்தின் மூலமாக பிற்காலத்திற்கு பயணிக்க முடியுமே அன்றி முற்காலம் என்பது சாத்தியம் அல்ல... நாம் காணும் நட்சத்திரம் மற்றும் வானில் காணும் பொருட்கள் நாம் காண்பது மட்டுமே முற்காலத்திய நிகழ்வு அதுவும் ஒளி நம் கண்களை வந்து அடைவதற்க்கு ஏடுத்து கொள்கின்ற கால தாமதம்.

## முடிவுரை :

கால பயணத்தை பற்றிய ஒரு சிறிய விஷயங்களையும், அத்தோடு கால பயணம் பற்றி நாம் ஓர் பயணமும் சென்று வந்துள்ளோம். பயணம் விரும்பியவர்களாக இருந்தாலும், கால பயணம் நினைத்தபடி சென்று வர முடியாது, இருக்கின்ற நடைமுறை வாழ்க்கையை நலமாக வாழ்ந்தாலே எதிர்கால பயணம் நல்லதாக முடியும் என்பதே தற்போது உள்ள உண்மை ஆனாலும் கூட உங்களுடன் கால பயண எந்திரத்தை எதிர் பார்த்து கொண்டிருக்கும் நான் உங்கள் அருகில் ஒரு பயணி...

●

அய்யனார் ஈடாடி



## “ஆடைகளற்ற அலைகடல் அவள்”

புல்லாங்குழலை மூச்சிறைக்க ஊதிக்கொண்டே
நீண்ட கடற்கரையினோரம்
கலங்கரை விளக்கத்தின் வெளிச்சத்தை மெல்ல
தொட்டுக்கொண்டிருக்கிறேன்;
வர்ணம் பூசப்பட்ட வானவில்கள்
முகத்தினருகே வந்து விழுகிறது;
வாசற்கதவினை தட்டும்
வண்ணநிலவு உமிழ்கின்ற வெளிச்சங்கள்
மருதாணிக் கோலங்களாய்
கைகளில் பூப்பதற்போல்
என்னருகில் பூத்து மிளிர்கிறது;
இருளை வெளிச்சங்கள்
அணைத்துச் செல்வதாய்
ஆடைகளற்ற அலைகடலாய்
அவள் வந்து
என்னை இழுத்துச்
சென்று விட்டால்
ஆழ்கடலுக்குள்..

## ஒளிர்கின்ற விளிம்புகளில்..

அந்தக் குரல்
என் செவிகளில் மெலிதாய்
ஒலித்துக் கொண்டிருக்கிறது.
உன் பின்னால்
திரிவதை நிறுத்த முடியவில்லை
என்னால்.
இதோ இப்பெருமழை
சிறிது நேரப்பொழிவிற்குப்பின்
நின்றுவிடலாம்.
இப்போதந்த குரல்
என் செவிகளில்
பலமாய் ஒலிக்கிறது.
பின்தொடர்ந்தவன்
மிக அருகில்
நெருங்கிவிட்டான்.
இப்பெருமழை
நான் நினைத்தது போலவே
முற்றிலுமாய்
நின்றுபோன தருணத்தில்
இப்போதந்த குரல்
சருகுகளில் சலசலத்தோடும்
அரவமாய்
என் செவிகளுக்குப் பக்கத்தில்
பிசிறு தட்டாமல்
தெள்ளத் தெளிவாகக் கேட்கிறது.
அந்நேரம் என் புஜங்களின் மேல்
சிம்மாசனமிட்டு
அமர்ந்திருக்கும் மழலையாய்
அவளென்னிதயச் சிருஷ்டிக்
கூட்டிலிருந்து இறங்க மறுக்கிறாள்.

▸

உடைந்த
கண்ணாடித் துகள்களில்
சிதறிக் கிடக்கிறது
வாய்ப் பிளந்த ஆகாயம்.
சிதறுற்றுக் கிடக்கிறேன்
அந்த ஆகாயம் போலவே
நானும்.
எ(து)வர் உடைந்தாலும்
சிதறித்தான் போவார்
ஆகாயம் போலவும்
என்னைப் போலவும்.
ஒற்றைப் பனித்துளி
நூறாய்த் தெரிய
உடைந்த கண்ணாடியின்
ஒளிர்கின்ற விளிம்புகளில்
ரசம் பார்த்துச் சிரிக்கும்
ஆதவன் மட்டும்
அடங்கவில்லை.
ரசம் தின்னத் தின்ன
வடுக்கள் மறைய வெளுத்து
வாடிக்கொண்டிருக்கிறது
பல நிலைக்கண்ணாடிகளின்
முகங்கள்.

▸



உறக்கம்
பிடிக்காத நானும்,
தூக்கம்
தொலைத்த நடுத்தர வயது
ஒரு பெண் பைத்தியமும்,
இருளை மென்றுதுப்ப
வழியின்றி
நட்சத்திரச் சுள்ளிகளை
கூடை நிறைய பொறுக்கி வந்து
விடிய விடிய
எண்ணிக் கொண்டிருந்தோம்.

▸

வேர்வை முத்துக்கள்
உடைய முதுகில் சுமந்த
அரிசி மூட்டையின் அரிசியில்
சற்று உவர்ப்பிருக்கலாம்.
சிரசிலிருந்து
பொல பொலவென வழியும்
பின்கழுத்து
வேர்வை பட்டு
மூட்டையின் கழுத்துவரை
நனைந்திருக்கிறது.
கடைசி மூட்டையை
நான் சுமக்கும் தருணம்
முதல் மூட்டையில் வேர்வை ஈரம்
அற்றுப்போயிருக்கலாம்
என்றாலும்
உவர்ப்பிருக்கும்.
இன்றைய பொழுது பசிக்கு
கிடைத்த கூலி போதுமானது.
நாளைக்குப் பருப்பையோ
சர்க்கரையையோ
அரிசியையோ
காய்கறி மூட்டையையோ
சுமக்க என் உழைப்புமிருக்கும்
நானுமிருப்பேன். ●



▸ க. புனிதன்

## பாஷோவின் பழைய குளம்

அமைதியான
குளத்தில்
சின்ன கல் எறிந்து
சின்ன வட்டத்தை
உருவாக்குபவன்
சின்ன வன்முறையாளன்

பெரிய கல் எறிந்து
பெரிய வட்டத்தை
உருவாக்குபவன்
பெரிய வன்முறையாளன்


●

▸ கண்ணன்

## பெருந்தாகம்

அம்மாவ மூணு நாளாகக் காணம்
அண்ணனிடமிருந்து அழைப்பு
கடந்த முறை
கடலிருந்து கரை சேர்த்த
மீனவர்கள் நினைவிலாட
பணி முடித்து திரும்புகையில்
அனுமன் முகம் கண்ணில் பட
வழக்கறிஞர் நண்பனுடன்
காவல் நிலையத்தில்
விண்ணப்பம் எழுதுகையில்
அலைபேசியில் அழைப்பு
பேப்பர்ல வந்திருக்கு
அம்மாவின் சாயலுடன்
வழியெங்கும் அம்மாவின் முகம் தேடி
மருத்துவமனை சேர
தீரா நதிகுடித்து
உப்பிப்போய் பிணவறையில்
ஐயோ...

●




## தமிழ்நாடு
## (நூற்றாண்டுகளுக்கு முந்தைய பயணக் கட்டுரைகள்)
## திரட்டித் தொகுத்தவர்: ஏ.கே. செட்டியார்

*சென்னையில் டி.டி.கே. சாலையில் தற்போது நாரதகான சபா அமைந்திருக்கும் இடத்தில் ஒரு நூற்றாண்டிற்கு முன்பு ஏ.கே. செட்டியார் அவர்கள் ஒரு அச்சுக் கூடம் அமைத்து "குமரி மலர்" எனும் மாத இதழை நடத்தி வந்தவர். அவர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்பும் பலரால் எழுதப்பட்டு பத்திரிக்கைகளில் வெளிவந்த தமிழகத்தின் அரிதான பயணக் கட்டுரைகளை சிரமமேற்கொண்டு தேடி அலைந்து தொகுத்த தொகுப்பின் மறுபதிப்பு நூலே இது. பதினெட்டாம் நூற்றாண்டிற்கு மேற்பட்டும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலும் எழுதிய பயண அனுபவங்கள் பெரும்பாலும் இக் கட்டுரைத் தொகுப்பு நூலில் இடம் பெற்றிருக்கின்றன. நடை பயணங்களும், குதிரை,எருது, ஜட்கா, மற்றும் மனிதர்கள் இழுக்கும் வண்டிப் பயணங்களும் அதிக புழக்கத்தில் இருந்திருக்கின்றன. ரயில் வண்டி பயணங்கள் மற்றும் விமான பயணங்கள் மீது சாதாரண எளிய மக்களின் ஆரம்பகால மதிப்பீடு கொண்ட கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கிறது. ஜட்கா, குதிரை,எருது வண்டிகளில் செல்லும் எளிய பயணங்களிலும் அக்காலத்தில் வண்டியின் பட்டை அறுந்து விழுந்து விபத்து நேர்ந்து*

பின் பக்கமாக வண்டி சாய்வதும், உணவு பற்றாக்குறையால் வாடியபடி வண்டி இழுக்கும் குதிரைகள் கால் மடங்கி முன்னே விழுந்து வண்டி சாய்வதும், குழந்தைகள் வண்டியின் முன் தவறி விழுந்து விபத்து நேர்வதும் வாடிக்கையாகவே இருந்திருக்கிறது.

ரயில் வண்டி வந்த புதிதில் அதன் அறிமுகமாக,"நூறு வருடங்களுக்கு முன்பு நீராவி இயந்திரம் என்கிற பெயர் இந்த தேசத்தில் தெரியவே தெரியாது. தூரதேச பயணமாக காசி, ராமேஸ்வரம் போன்ற இடங்களெல்லாம் சென்று வந்தால் உலகமெல்லாம் சுற்றி வந்ததாக நினைப்பார்கள். இப்பொழுதோ நீராவி இயந்திரத்தில் இருப்புப்பாதை மூலமாக 15 தினத்தில் காசி, ராமேஸ்வரம் போய் வரலாம். அப்போது நதிகளைக் கடந்து போக பாலங்களும் இல்லை. நிலங்களில் செப்பனிட்ட பாதையும் இல்லை.

முற்காலத்தில் பெரிய தனவான்களும் பாதி உடம்பு வெளியே இருக்கும்படி தேர் போன்று அமைந்திருக்கும் நெருக்கமான வண்டிகளிலேயே பயணம் செய்தனர். தற்போது உடம்பு அசையாமல் ஏறிப்போக தகுந்ததாக நான்கு சக்கரம் உள்ள வில் வண்டிகள் நிறைய வந்துவிட்டன."என்ற அறிமுகங்களெல்லாம் தற்போது புல்லட் ரயில் பற்றி பேசிக் கொண்டிருக்கும் நமக்கு நாம் எதிலிருந்து வந்தோம் என்பதையெல்லாம் நினைவுபடுத்துவதாக இருக்கிறது.

ஐரோப்பியர்கள் தமிழகத்தில் மிகுந்திருந்த அக்காலத்தில் பெரும்பாலும் அவர்களைப் பற்றி உள்ளூர் மக்கள் "நாகரீகம் மிகுந்தவர்கள்" என்று உயர்வாகவே எண்ணி இருந்திருக்கிறார்கள். "விடுமுறை நாட்களின் போது சென்னை மெரினா கடற்கரையில் ஐரோப்பியர்கள் ஓய்வெடுக்க மிகுதியாக காணப்படுவார்கள். விளக்கு ஒளியில் கடற்கரை மிக அழகாக இருக்கும் என்று வர்ணித்திருக்கிறார்கள்". நீலகிரி, கொடைக்கானல் போன்ற மலை வாசஸ்தலங்களில் சென்னையிலிருந்து பெரும்பாலான ஐரோப்பிய மக்கள் கோடைகாலங்களில் அங்கு கழிப்பார்கள் எனவும், செடிகள் பூக்கள் என வீட்டில் மிக அழகாக பராமரித்து பார்வைக்கு குளிர்ச்சியாக இருப்பதை பெருமையாக வர்ணித்தும் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். பின்னாளில் ஆங்கிலேயரிடம் அடிமைப் பட போகிறோம் என்பதை உணராத காலமாக இருந்திருக்கிறது. ரயில் பயணங்களில் ஐரோப்பிய பெண்களுக்கும் தமிழகத்தில் வசிக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையே ஏதாவது சச்சரவு ஏற்பட்டால் ரயில் அதிகாரிகள் ஐரோப்பியர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நியாயம் வழங்குவதை சுட்டும் விதமாக சுதேசமித்திரன் பத்திரிகையில் சுப்பிரமணிய பாரதியார் எழுதிய ஒரு கட்டுரை இடம்பெற்றிருக்கிறது.

அக்காலங்களில் ஜாதிகளை அடிப்படையாகக்கொண்டு பேசும் பழக்கம் மிக அதிகமாக இருந்திருப்பது போல் தெரிகிறது. கோவில்கள் நிறைந்திருக்கும் நகரங்களுக்கு பிராமணர்களால் பெரும்பாலான பயணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. கீழ்ஜாதி மக்களுக்கு உள்ளூர் கோவில்களுக்குள் செல்லவே அனுமதி கிட்டாத பொழுது வெளியூருக்கு பயணப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. அவர்களது குறைந்த வருமானமும் இந்த வாய்ப்பினை அவர்களுக்கு அளிக்காமல் இருந்திருக்கலாம்.

வண்டி பூட்டி நம்மவர்கள் மேற்கொண்ட நூற்றாண்டுகளுக்கு முந்தைய பயணத்தில் உணவு சமைப்பதற்கான பொருட்களையும் சுமந்தே சென்றிருக்கிறார்கள். வழிநெடுக அங்கங்கே இருக்கும் சத்திரங்களில் இரவுப் பொழுது தங்கி உறங்கி விட்டு மீண்டும் பயணத்தை தொடங்கியிருக்கிறார்கள். பாதைகள் பெரும்பாலும் சேறும் சகதியுமாக களிமண்ணால் அமைந்து கடினமான பயணத்தையே மேற்கொண்டிருக்கிறார்கள். வெளிச்சத்திற்கு அவர்கள்

கைகளில் இருக்கும் லாந்தர் விளக்குகள் மட்டுமே இருந்திருக்கிறது. வழியில் திருடர்கள் பயம் இருந்தாலும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்காக எருது வண்டிகளில் பயணம் செய்யும் பெண்கள் நகைகள் அணிந்து செல்வதையும் தவிர்க்கவில்லை. காவலுக்கு முன்பின்னாக ஆண்கள் அமர்ந்து கொண்டு பயணம் மேற்கொள்வதை பாதுகாப்பாக உணர்ந்திருக்கிறார்கள்.

செஞ்சிக்கோட்டையில் ஆட்கள் நடமாட்டமில்லாத அவ்விடத்தில் புலிகள், கரடிகள், மயில்கள், மான்கள், குரங்குகள் என ஏராளமாக குடியேறி இருக்கின்றன என்பது செய்தியாக பதிவாகியிருக்கிறது. தற்போது அங்கு குரங்குகள் மட்டுமே இருப்பது பிற விலங்குகள் தனது எண்ணிக்கையில் குறைந்து விட்டதை நமக்கு அடையாளப்படுத்துகிறது. திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்தின் போது மக்கள் கூடுகையில் அங்கு ஏராளமான மாடுகளும், மயில்களும், மயில் குஞ்சுகளும் விற்பனைக்கு வந்திருந்தன என்று அறியும் பொழுது, தற்போது ஒரு சில மயில்களை அபூர்வமாக கண்ணில் கண்டாலே பரவசப்படும்படி அரிதாகிவிட்டதே என வருத்தப்பட வைக்கிறது. வேதாரண்யத்தின் மற்றுமொரு பெயராக "திருமறைக்காடு" என்று அழைக்கப்பட்டதற்கு காரணமாக அங்கு மறை மான்கள் அதிகமாக வாழ்ந்தது என்பது ஒருபுறமிருந்தாலும், இந்த நூலில் நான்மறைகளும் ஓதி ஈசனே இங்கு பூஜித்த காரணத்தினாலேயே இத்தளத்திற்கு திருமறைக்காடு என்ற பெயர் ஏற்பட்டுள்ளதாக புராணங்களிலிருந்தும் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது.

கோடிக்கரை பற்றி கல்கி அவர்கள் எழுதிய கட்டுரையில் நிறைய மான்கள் கூட்டமாக செல்வதை தன் வாழ்நாளில் என்றும் காணாத ஒன்றாக பதிய வைத்திருக்கிறார். கல்கியின் கோடிக்கரை பயணத்தில் உடன் சென்றவர் அவரிடம்,"உங்கள் பொன்னியின் செல்வன் கதையில் சரடு விடுகிறீர்களே! அது முழுதும் சரடு அல்ல; உண்மையும் சிறிது இருக்கிறது. அதோ இடிந்து கிடக்கும் பழைய லைட் ஹவுஸை பாருங்கள்!."என்கிறார். அதற்கு கல்கி அவர்கள்,"அவர் காட்டிய இடிந்த கட்டிடம் சுந்தர சோழர் காலத்து கலங்கரை விளக்கமாக இருக்க முடியாது. ஆனால் அதிலிருந்து கோடிக்கரையில் நெடுங்காலமாக ஒரு லைட்ஹவுஸ் இருந்திருக்க வேண்டும் என்று மட்டும் தெரிய வந்தது." என்கிறார்.

கங்கைகொண்டசோழபுரம் பற்றிய இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய கட்டுரையில், " ஊர்களும் அருகருகே இல்லாமல், மனிதர்களும் அதிகம் இல்லாமல், சோழதேசம் என்று சொல்வதற்கான நதி, சோலை முதலிய ஏதுமில்லாமல், செடி கொடிகள் அடர்ந்த தேசமாக காணப்படுகிறது எனவும். இந்த இடத்தில் முன்பு உன்னதமான மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் அமைந்த மணிமாட வீதிகளும், சோலைகளும் நிரம்பியிருந்து, அதனைச் சுற்றி மதில்களும் அரண்களும் இருந்ததாக தெரிகிறது எனவும், தற்போது அவ்விடங்களில் இடிந்த சுவர்களும் மணல் மேடுகளும் காணப்படுகின்றன." என்றும் அப்போது இருந்த நிலைமையை பதிய வைத்திருக்கிறார்கள். அங்கிருந்த கோவிலின் முன் பக்கம் இருந்த கோபுரம் இடிந்திருப்பதையும், அதனுள் செல்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் வழியில் நுழைந்து சென்றால் தஞ்சாவூர் ராஜராஜேஸ்வரர் கோவிலிலுள்ள சிவபெருமானை ஒத்த 30 அடி உயரமுள்ள சிவலிங்கம் இரண்டாக பிளவுபட்டு இருப்பதாகவும், அதற்கு காரணமாக இடி விழுந்து இரண்டாக போயிற்று என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வரலாற்று சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்தில் கோவில்கள் தற்போது புதுப்பிக்கப்பட்டு விழா எடுத்ததையெல்லாம் உணரும் பொழுது அந்த நற்செயலை செய்து வரலாற்றுச் சின்னங்களை காத்த தற்காலத்தில் வாழ்ந்து வரும் மக்கள் போற்றுதலுக்குரியவர்கள் என்ற எண்ணம் வருகிறது.

நமது தமிழக மக்களின் நல்ல பழக்கவழக்கங்களாக தற்போது அருகியிருக்கும் சிலவற்றை

இக்கட்டுரைகளின் பதிவில் அறிய முடிகிறது. ரயில் பயணமாக பாலத்தின் வழியே பாலாற்றை கடக்கும் பொழுது பயணம் செய்து கொண்டிருக்கும் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்த சிறுவன் அது பாலாறு என்று அறிந்தவுடன் வணங்குவதை அறியும் பொழுது இந்த பழக்கமெல்லாம் தற்போது அறுபட்டு போய்விட்டதனால் தானோ என்னவோ கழிவுகளை ஆற்றில் கலக்க விட்டு மாசடையச் செய்து கொண்டிருக்கிறோமென குற்றமாக உணர வைக்கிறது.. தொடக்க காலங்களில் இயற்கையை மட்டுமே வழிபட்ட நாம் அதனை அப்படியே தொடர்ந்திருந்தால் இப்படி அழிய விட்டிருக்க மாட்டோம் என கவலை கொள்ள வைக்கிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் அடங்கிய இந்த தொகுப்பு நூலில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய கட்டுரைகளும் மற்றும் அவரது துணைவியார் செல்லம்மாள் அவர்கள் எழுதிய சுதேசமித்திரன் பத்திரிகையில் இடம்பெற்ற இரண்டு பயணக் கட்டுரைகளும் இடம்பெற்றிருக்கிறது. “இந்தியர்களுக்காக அல்ல” என குறிப்பிட்டிருக்கும் உயர்ரக ஐரோப்பிய விடுதிகளும், கூட்டத்தில் நெருக்கமாக பயணம் கொள்ளும் இந்தியர்களின் மூன்றாம் வகுப்பு ரயில் பயண சிரமங்களும், சென்னையில் அவ்வப்போது காட்சியாக காணப்பட்ட யானையின் மீது அம்பாரியில் அமர்ந்து பயணம் கொள்ளும் அரசர்களும் என பலரது பயணங்களை அறிமுகப்படுத்தி, இக்காலத்தில் அனைவருக்கும் சமமாக எளிதாக அமைந்திருக்கும் பயணங்களை மேற்கொள்ள ஊக்கப்படுத்துவதாக இப்புத்தகம் அமைந்திருக்கிறது. நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழகத்திற்குள் பல இடங்களுக்கு பயணத்தை மேற்கொள்ளச் செய்து பல விதமான அனுபவங்களை நமக்கு அளிக்கும் அரிதான புத்தகம் இது.

பிரேமா

பதிப்பகம். சந்தியா பதிப்பகம்

பக்கங்கள். : 368

●

---

## மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் பற்றி:

வணக்கம்,

காற்றுவெளி மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் மிக மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. எவ்வளவு வேற்று மொழிப் படைப்புகள்!..எத்தனை எத்தனை தேர்ந்த மொழிபெயர்ப்புப் படைப்பாளர்கள்!! பறவைகளுக்கான வேடந்தாங்கல் வெளி போல் காற்றுவெளி பல்வேறு மொழிகளுக்கான வியாபித வெளியாய் அற்புதமாய் தகவமைத்துக் கொண்டுள்ளது..சென்றிடுவீர் திக்கெட்டும் கலை ( இலக்கிய )ச் செல்வமிங்கு கொணர்ந்து சேர்ப்பீர் என்றார் மகாகவி.. எங்கும் செல்லாமலே இருந்த இடத்தினின்றே அத்தனை மொழி இலக்கியத் திரவியத்தையும் வாசகர்களும் எங்கும் செல்லாமலே தம் வரவேற்பறையினின்றே வாசித்தனுபவிக்கும் வரம் போன்ற வாய்ப்பளித்துள்ள தங்கள் அரிய முயற்சி... கடும் உழைப்பு.. மற்றும் பேரார்வத்துக்கு.. நெஞ்சு நிறைப் பாராட்டுகளும் வாழ்த்துகளும்

அன்புடன்..
சாந்தா தத், ஹைதராபாத்

●

**கிரேக்க மொழி: கவிஞர் சாஃபோ (கிரேக்க பெண்கவிஞர்)**

**ஆங்கிலம்: வில்லியம் கார்லோஸ் வில்லியம்**

**▸ தமிழில் : ராஜேஸ்வரி.செல்லையா**

## அவன் கடவுளுக்கு நிகரானவன்



அவன் கடவுளுக்கு நிகரானவன்
முக முகமாக அமர்ந்து
என் இனிமையான பேச்சையும்
அழகான சிரிப்பையும்
ரசித்தான்
இதுதான்
என் மார்பைக் கலவரப்படுத்தியது
உன்னைப் பார்த்த மாத்திரத்தில்
என் குரல் குழறியது
என் நாக்கு முறிந்தது

நேரடியாக
ஒரு மென்மையான நெருப்பு
என் கால்களுக்குள் ஓடியது

கண்கள் இருண்டன
காதுக்குள் இடி முழக்கம்

வியர்வை ஆறாய்ப் பெருகி வர
நடுக்கம் என்னைக் கீழே வீழ்த்த
காய்ந்த புல்லைக் காட்டிலும்
நான் வெளிறிப் போக
ஏறத்தாழ
சாவதைப் போல் ஒரு உணர்வு ●

## எல்லாமே அருகில்?

தேவைகள் தேடி
வெளியே ஓடியவர்களை
துரத்தி விரட்டி
வீட்டிற்குள் முடக்கியது
இன்றைய விஞ்ஞானபூதம்

தொலைநீளங்கள் நொடியில்
தொலைந்து போயின
அலைநீளங்களில் மொத்தமாய்
அடங்கிப் போயின
உலகின் நீளஅகலங்கள் ‘ஆறு இன்ச்’ திரையில்
ஒடுங்கிப் போயின

அசாத்தியப்பட்டவைகள்
சாத்தியமாயின
உணவு, உடை வாகனமென
அனைத்தும் வீடு தேடி வாசலில்
அணிவகுத்து நின்றன

மனவிரிகோணப் பார்வைகள்
சூம்பி குறுங்கோணங்களாகின
ஓட்டுக்குள் கூர்மமாய்
ஓரறைக்குள்
ஒடுங்கிப் போனது வாழ்க்கை!

சுமுகமாக உலவ வேண்டிய
சமூக விலங்குகள்
சமூக ஊடகங்களால்
அமிழ்த்தித் தோய்க்கப்படுகிறது

அடர்தனிமை சாயத்தில்
கலிபோர்னியா முகநூல் நண்பனுக்கு
பிறந்த நாள் வாழ்த்திடுபவர்க்கு
அடுத்த வீட்டுக்காரர்
பெயர் கூடத் தெரிவதில்லை

தலைகுனிவு வாழ்க்கையில்
நுணங்கி இருப்பவர்களின்
கண்களுக்கு
நெற்றித்திலகமான
இரத்த உறவுகள்எதுவும்
புலப்படுவதில்லை

வானத்தில் சஞ்சாரிப்பதாக
நினைத்துக்கொண்டு
கருந்துளைக்குள்
தம்மை புதைத்துக் கொள்கிறார்கள்

ஞாபகக்குதிரில்
குதித்துப் பார்த்தால்
தெரியவரும்
இழந்த சொந்தங்களும்..
இழந்த சொர்க்கங்களும்..
இன்றைய உலகில்
எல்லாமே அருகில் இருக்கிறது
மனங்கள் மட்டும்
விலகியே.... இருக்கிறது ●



## மழை

மலரினினும் மெல்லிய
இனிய எழில் மழைச்சாரலாய்
உங்களை மகிழ்விக்க
வரும்போது
எனக்குள் இருந்த வெட்கமெல்லாம்
எங்கோ ஓடிவிடுகிறது.
இதயப்பூர்வமான ஈடுபாட்டுடன்
ஈர்ப்பினால் இறங்கி வருகிறேன்.
ஒவ்வொருவரையும்
தனித்தனியே
மெல்லத் தொட்டு சிலிர்த்திட
வைத்துக்
குளிர்விக்கிறேன்.

நான் வளிமண்டலத்தில்
நீராவி மேகங்களாய்
அலைந்திருந்தேன்,
மாலை வேளையில்
என் விழைவுப் பொழுதுகளில்
பூமியின் மேற்பரப்பை
காதல் மிகுதியால்
என் விழிகள்
கனிவுடன் உற்று நோக்குகின்றன.
உடன் என்மேல் பொறாமை
கொள்ளும் காற்று
வேகமாய் வீசத் தொடங்க,
வானத்தில் இடி மின்னல் வெடிக்க,
புவிப்பெண்ணின்
ஈர்ப்பு விசையில்
நான் நீர்த்துளிகளாய் இறுகி
இறங்கி வருகின்றேன்.

எனக்கு வயதேதுமில்லை
என்னைப் பொருத்தவரை
அது ஓர் இலக்கம் மட்டுமே.
என் எண்ணத்தில்
வயதின் வரையரைகள் இருந்தில்லை.
பெண்மையின் மென்மையும்
ஆண்மையின் வன்மையும்
இணைந்த
அதிசயக் கலவை நான்.

ஒருபோதும் தயக்கமேதுமின்றி மெல்ல
ஸ்பரிசிக்கிறேன்.
வெட்கம் நாணம் எதுவும் என்னைத்
தடுப்பதில்லை.
நீங்கள் புத்துணர்ச்சியுடன் இருப்பதால்
ஸ்பரிசித்தேனா
நான் ஸ்பரிசித்ததால்
புது மலர்ச்சியில் நீங்கள்
பொலிவாகிவிட்டீர்களா
என்றே நினைக்கத் தோன்றுகிறது.

என் வருகைகையை
நீங்கள்
எதிர்பார்த்திருப்பதை நானறிவேன்
ஆனால் அழைப்பேதுமின்றி
நானே வருவேன்.
என்னைப்பற்றி சற்றே புரிதல் இருந்தால்
அதுவே போதும்.
எதிர்பாரத நேரத்திலும்
நான் உங்களைத் தேடி வருவேன்.
நினையாத நேரத்தில்
நான் வரும்போது
என்னை நீங்கள்
எவ்விதத்திலும்
தவிர்த்திட முடியாது.
நீங்கள் விரும்பாத போது
வராதிருக்கவும் எனக்கு வாய்ப்பேதுமில்லை.

நான் காலத்தின் வருகையை எண்ணி
காத்திருப்பதில்லை.
பகல் இரவு என்றும்
நல்ல நேரம் காலம் என்றும்
பார்ப்பதுமில்லை,
எந்த நேரமும்
என் சொந்த நேரமே.
காடு மலை சமவெளி
இந்த இடம்தான் என்றில்லை,
எந்த இடமும்
எனக்கு ஏற்புடையதுதான்.
என் ஸ்பரிசத்துக்காகக்
காத்திருக்கும்
காதலியை
உச்சி முதல் அடியாழம் வரை
ஊடுறுவும் என் முத்த மழையில்
முழுதும் நனைக்கத்
தயங்குவதில்லை.

கொஞ்சி மகிழ்வது
கொஞ்ச நேரம்தான் என்றாலும்
கூடியிருந்த தருணங்களை
அவள் நினைந்து நெகிழ்திட
என் வருகையின் அடையாளங்களைப்
பதிவுசெய்து
பரிசளித்துச் செல்கிறேன்.
இந்த பிரபஞ்சத்தில்
என்னைத் தவிர எவருக்கும் இத்தகைய
வாய்ப்புகள்
இருப்பதாகத் தெரியவில்லை.

என் தனித்தன்மையால் எவரையும்
பிரமிக்க வைப்பதால்
எல்லோருக்கும் என் மீது
கொள்ளைப் பிரியம் இருக்கிறது.
என்னைக் காணும்
தீராக்காதலில் தகித்திடும் ஆதவனின்
உணர்வுகளை தீட்சண்யமாய்
உணர்ந்திருக்கிறேன்.
ஆனால்
அவன் எப்போதும் தாமதமாய்
வருவதையே
வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறான்.
என்றாலும்
வானவில்லை நினைவுப் பரிசாய்

வானில் அவனுக்காகவே
வரைந்து செல்கிறேன்.

நான் அறிவியல் இயற்கை
வியத்தகு இறை ஆசீர்
வரம்புகள் இல்லாத
வரம்பெற்றிருக்கிறேன்.
தடுப்பதற்கும்
தடைகள் எதுவும் எனக்கில்லை.
திசைகளைத் தெரிந்துதான் பயணிக்க
வேண்டும்
என்ற அவசியம் எப்போதுமில்லை.

பெரிதிவ்வுலகில் யாதும் நம்மூர்
பேணுநல் தோழர் பலர் உளர்
என்பதென் எண்ணமும் இயல்பும்.
என்மீதிருக்கும் ஏக்கங்களை
எளிதில் புரிந்திருப்பதால்
நான் அழைப்புகளுக்காகக்
காத்திருப்பதில்லை.

என் வருகைக்கு
விலை குறிப்பதில்
எப்போதும் ஏற்பில்லை.
வெகுமதி எதற்கும் விருப்பமில்லை.
பணிசெய்திருப்பதே
பெரும்பயன் எனும் கொள்கையானதால்
எதிர்பார்ப்புகள் எதுவும் எனக்கில்லை.


நான் வானமும் மேகங்களும் வழங்கும்
அற்புதக் கவிதைச் சிம்பொனி.
தாள லயத்துடன் தவழந்திட வரும்
மெல்லிசை.
இதயம்வரை ஊடுருவி
எப்போதும் சிலிர்த்திட வைக்கும் இனிய
ஆன்ம ராகம்.
துயரத்தில் கலங்கிய கண்களுக்குத்
இறைவனைக் காண்பது
இயலாது என்பதால்
கண்ணீரைத் துடைத்திட
இறங்கிவரும் தேவதை.
வானினின்று இறங்கிவந்து
வழங்குகின்ற தேவதை
வானமிழ்த மாகிவைய வாழ்வளிக்கும்
தேவதை.

அவசியத்தின்
நிரந்தர அபூர்வம்.
அளவைகளால்
அளந்து பார்க்காமல்
தரம் தேர்ந்து கொள்வதே
தனித்துவத்துக்குத் தரும் கௌரவம்.
கடல் நீர்நிலைகள் உட்பட அனைத்து
நீர்நிலைகளும் என்னிலும் எத்தனையோ
பெரியவை.
நான்
இரசாயனங்கள் செயற்கை நச்சுகள்
ஏதுமற்ற
இயற்கை,
நிறைஉயிர்த் திரவம்.

அளவேதுமின்றி என்னைச் சுவைக்கலாம்.
மற்றவர்களுக்காகவும்
மிச்சம் வைத்துச் சேமிக்கலாம்.
கலை நிகழ்ச்சிகளுக்குப் பின்னர்
அத்தனை அரங்கங்களுக்கும்
சுத்தம் செய்வது அவசியம்.
ஆனால்
நான் நர்த்தனம் புரிகையில் ஒவ்வொரு
அங்குலத்தையும் அழகுபடுத்திச்
செல்கிறேன்.
கடந்த காலத்தின் கசப்பான நினைவுகளை
மறந்திட அனைவருக்கும் ஆறுதல்
அளிக்கிறேன்.
எதிர்மறைகளுக்கு நேர்எதிர் நான்
நிகழ்காலத்தின் எதார்த்தம்.

●

▸ தங்கேஸ், தேனி



## கடவுள் தன்மையோ பெரும்பாறையாய் அசைவற்ற பொழுதுகள்

அசைவற்ற பொழுதுகளை
அசைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது
காற்றோடு புணரும்
ஓர் அரசமரத்திலை


எந்த அரூபத்தின் பவனியை தரிசிக்க
திடீரென்று கோடி கண்கள் முளைத்து விடுகின்றனவோ
புழுதி படிந்த. இந்த வீதிக்கு?

நிலவு நதியாகும் தருணம்
உறங்கா மீன்கள் சுவைக்கு
பலியாகின்றது
உடைந்து போன விடியலின் கரு

புதையுண்ட சொல்லொன்று
சுயம்பாக முளைத்தெழ
கனவெங்கும் பறந்து கொண்டிருக்கின்றன
மழைத் தட்டான் பூச்சிகள்

கசாப்பு கடையில் கட்டப்பட்டிருக்கும்
திசையறியா ஆட்டுக்குட்டி
இரவின் திரண்ட சாபத்தை
கத்தி கத்தி தீர்க்கும் போது
நினைவில் வந்து போகிறது
முதுகு வளைந்த கூர்மையான வெட்டுக் கத்தி. ●

பாத்திமா மின்ஹா



## உன்மத்தம்

*தரை மீது விரிந்து பரவும்
நிழலைப்போர்த்திக்கொள்ள விழையும்
பெருவிருட்சம்
தன் கிளைகளைச் சிலிர்க்கின்றது

இறுகப்பற்றியிருந்த வேர்களின்
கனவில் தினம் தளரும் பிடி மணல்
வண்டு ஊர்ந்து புடைத்த
ஈரமணல்க்கோடு
மரத்தடியில் மணியாரமாய்
அநித்திய பொழுதைக் கோர்க்கின்றது


வெம்மை அடரும் உட்கர இரேகையில்
மருதாணிச்சாந்து
செக்கச்சிவந்த ஞாயிறைத்
திரையிடுகின்றது

அந்திக்கும் அதிகாலைக்கும் இடையே
ஊற்றிவைத்து உறையும் கங்குலின்
நிறம்
பச்சோந்திகளை ஆமோதித்து
நிறங்களை நொதுமல் பொழுதுகளில்
கரைக்கின்றது

ஒரு பாடலுக்காகத் தாழ் திறக்கும்
யன்னல்
காற்றை வேலியில் வழியனுப்பி
உலர்நேர மதர்ப்பை
இரவு நட்சத்திரங்களைக் கூட்டமாக்கி
மலைகளிடையே
ஞாயிறையும் நிலவையும் அருகருகே
வரைந்தழிக்கின்றன

●

குமரன்விஜி விஜயகுமார்



## தூரம்

அருகில் வாழ்ந்தவரையிலும்
பறவையின்
றெக்கையளவு
வாலின் நீளம்
அடிபட்ட காயம்
பசி
சோர்வு
இழக்கும் நிறம்
படியும் அழுக்கு
ஒவ்வொன்றையும் சொல்வேன்
பறவை
தண்ணீரில் முங்கிக் குளித்து
இறகுகளைச் சரிசெய்யும்


இப்போது இருவாச்சி
உயரப் பறப்பதாய்ச் சொல்கிறார்கள்.

காண்கிறேன்

ஆகாயத்தில் பறவையொன்று
பறக்கையில்
பட்டாம்பூச்சிபோல்
சின்னஞ்சிறியதாய்ப் போகிறது

என் இருவாச்சியைக் காணவில்லை.

# நீர்கொழும்பிலே....



எம்மவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைப்பது அரிதான ஒன்றாகிப்போன காலமிதில்.. அருளானந்தத்திற்குச் சிறைச்சாலைக் காவலர் உத்தியோகம் கிடைத்தது. பயிற்சிக் கல்லூரியில் நான்கு மாதங்கள் உடலை வருத்தி.. வியர்வைக் குளிப்பில் நனைந்து.. கற்றுமுடித்து.. அவன் நீர்கொழும்புச் சிறைச்சாலையில் சேவையாற்ற அனுப்பப்பட்டான்.

அதே சிறைச்சாலையில் உத்தியோகம் பார்க்கும் அவனின் ஊரவரும் நண்பருமான சிவபாதம் என்பவரைச் சந்தித்துப்பேசி அவர் வாழும் தனியார் விடுதிக்குச் சென்று அங்கு முதல்நாள் தங்கினான். சிவபாதம் அண்ணை! எனது பிரச்சினை இதுதான்.

சிறைச்சாலை விடுதியில் நான் இருக்க விரும்பவில்லை. அங்கை சிங்கள இன உத்தியோஸ்தர்கள் வாழ்வதால்.. அவர்களோடு சிங்கள மொழியில் உரையாடிச் சமாளித்துச் சீவிக்குமளவுக்கு அந்த மொழியறிவு தெளிவாக எனக்கு இல்லை.

பயிற்சிக் கல்லூரியில் நான் இங்கிலீசில் பேசக்கேட்டு..

இவன் வெள்ளைக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன்போலும்..

என்றெல்லாம் வலுகேவலமாகக் கிண்டல்செய்த சகமாணவர்களிடம் எந்தநாளும் நான் திட்டுக்கள் வாங்கிப் பட்டபாடுகள் போதும். இங்குமது மீண்டும் தொடரும். அதுதான் வெளியாலை தங்கியிருக்க விரும்புகிறன்.

என்று சிவபாதத்திடம் அருளானந்தம் விளக்கமளித்தான்.

எடேயப்பா!.. எனக்கும் இதேபிரச்சினைதான் இருந்தது. அதுதான் நானிங்கை வாடகை கொடுத்துத் தங்கிருக்கின்றன்.

அண்ணை! நானும் இங்கை இருக்கத்தான் விரும்பிறன். இடங்கிடைக்குமா..

என்று அருள் கேட்கவும்.. சற்று யோசித்த சிவபாதம்..

இதிலை பெரிய சிக்கலெல்லாம் இருக்குது. என்னைவிட வேறை நாலுபேர்கள் இங்கை தங்கியிருக்கீனம். இதனாலை சிலபல நெருக்கடிகள் உள்ளது.

உனக்கும் இங்கையிருக்க வீட்டுக்காரர் இடம் தருவாரோ தெரியாது.

தண்ணியடித்துப்போட்டு வாறவைக்கு இடங்கொடுக்க மாட்டார். உனக்குத்தான் அந்தப் பழக்கம் இல்லையென்று தெரியும். அவருக்கு என்னிலை நல்லதொரு மதிப்புள்ளது. நான் கேட்டால் சம்மதிப்பார் என்றுதான் நினைக்கிறேன். எதற்கும் அவரோடை ஒருக்கால் நான் கதைச்சுப் போட்டுவாறன். பக்கத்தில் இருப்பதுதான் அவரின்ரை வீடு. என்று சொல்லி அருளானந்தத்தை இருத்திவிட்டுச் சென்ற சிவபாதம் சிறிதுதாமதித்து.. அவரையும் கூட்டிக்கொண்டு வந்தான். தம்பிக்குச் சொந்த ஊரெது. என்று தொடங்கி.. அனைத்தையும் அவர் விசாரித்தார்.

சிவபாத்தின் அயலவன் அவன் என்று அறிந்ததும் அவரின் முகத்தில் திருப்தி தெரிந்தது. இங்கை இருக்கிறது என்றால் சாப்பாட்டோடு சேர்த்துத்தான் வாடகை தரவேண்டும். மூன்று வேளைச் சாப்பாடுகளும் நான்தான் தருவன். அப்பத்தான் எனக்குக் கட்டுப்படியாகும். இந்தப்பெரிய வீட்டை நான் வாடகைக்கு எடுத்துத்தான் விடுதி நடத்துகின்றன். கூட்டிறத்துக்கும் காக்கூசுமுதல் எல்லாத்தையும் கழுவிற வேலைகளுக்கும் கூலியாட்களை வைத்திருக்கிறன்.

இவ்வளவு ஏற்பாடுகளோடை தங்கிறதுக்கு மற்றவர்கள் என்றால் மிச்சம் கூடியதொரு றேற்தான் எடுப்பார்கள். ஆனால்.. நான் குறைஞ்ச வாடகைதான் வாங்கிறனான். இந்த வாசதிகளோடை இப்படி மலிவான இடத்தை நீர்கொழும்பு ரவுணுக்குள்ளை எங்கும் நீங்கள் எடுக்க முடியாது.

பக்கத்து வீட்டில்தான் நான் இருக்கிறன். அங்கிருந்து நேரம் தவறாமல் உருசியான சாப்பாடுகள் இங்கைவரும். சாப்பாட்டின்தரம் குறித்து நீர் சிவபாதத்திடம் கேளும்.

இதற்கெல்லாம் நீர் சம்மதமென்றால் யோசித்து முடிவைச் சொல்லும்.

முற்பணம் எதுவும் தரத்தேவையில்லை. சிவபாதத்திடம் எனக்கு நம்பிகை உள்ளது.

என்றவர்.. அங்கிருந்து அகன்றார்.

என்ன அண்ணை! ஆளைப்பார்த்தால் பயில்வான் போலை இருக்கிறார். பார்வையும் மீசையும் முரட்டுக் குரலும் பயமாயிருக்குது. ஆனால்.. அவரின்ரை திக்குமுக்காடிய இழுவைத் தமிழைக் கேட்கத்தான் சிரிப்பு வருகுது.

என்று அருள் சொல்லவும்

*அவர் வலுநல்லவர். நியாயம் நீதியோடை நடந்து கொள்பவர். அடாத்துப் பேசுபவர்ளை இந்த மத்துமபண்டா மாத்தையாவுக்குப் பிடிக்காது.*

என்று சிவபாதம் கூறியனார்.

*பாரம்பரியமாகத் தமிழை வீட்டுமொழியாகக் கொண்ட சிங்கள இனத்தவர்கள் வாழுகின்ற பிரதேசந்தான் நீர்கொழும்பு.*

*கடலேறிப் பிழைப்பு நடத்தும் மீனவர்கள் நிறைந்து வாழும் இந்த ஊர்களின் பெயர்களைப் பார்த்தால் வியப்பாக இருக்கும்.*

*முனைக்கரை.. குடாப்பாடு.. நுனிவில், கொச்சிக்டை.. ஏத்துக்கால்.. காமாச்சியோடை, பெரியமூலை.. வென்னப்பு என்றுபல தமிழ் பெயர்கள் அமைந்த இடங்கள் இன்றுவரை இங்கை அதேபெயரில்தான் உள்ளன. நகரத்திலுள்ள கடைகள் பலவும் தமிழர்களதும்.. தமிழ்ப்பேசும் முஸ்லீம்களதுமாகும். இவர்களெல்லாம் பரம்பரையாக இங்கேயிருந்து வியாபாரம்செய்து பணமீட்டிச் சம்பாதித்துச் செழித்தவர்கள்.*

*வந்தாரை வாழவைக்கும் சிங்கார நீர்கொழும்பு. என்ற புகழ்மொழியும் இந்த நகருக்குண்டு. இங்குள்ள கத்தோலிக்கக் கிறீஸ்த்தவத் தேவாலயங்கள் பலவற்றில் தமிழிலும் பூசைகள் நடைபெறும். நகரத்திலையே சைவசமயக் கோவில்களும்.. தமிழ் மொழியில் பாடம் நடத்தும் விஜயரெத்தினம் மகாவித்தியாலயமும்.. தமிழ் மொழியையும் ஒரு பாடமாகக் கொண்ட பெரிய கல்லூரிகளுமுண்டு. இங்கே முதன்முதலாக எமக்கு உத்தியோகம் கிடைத்தது பெரும் அதிஸ்டம்தான் என்றுநினைக்கிறன். இங்கையிருப்பது யாழ்ப்பாணத்தில் இருப்பதுபோலை எனக்கு ஒரு நிறைவைத் தருகின்றது.*

குறுக்கிட்டுக் கதைத்த அருளானந்தம்..

*அண்ணை!.. பறங்கிய இனத்தவரான டேக்வெத்யு என்பவர் இங்கை மறியல்வீட்டின் பிரதம ஜெயிலராக இருக்கிறதாலை நாங்கள் ஆங்கிலத்தில் கதைத்தும் எழுதியும் எங்கடை வேலையைப் பார்க்கின்றோம். இதுவுமொரு அதிஸ்டம்தானே..*

*ஓமோம்! தம்பி.. அதுபெரிய அதிஸ்டம்தான்.* என்று சொன்ன சிவபாதம் தொடர்ந்து கதைத்ததார்..

*இந்தவூரிலை வசிக்கிற சனங்கள் ஆதியிலை தமிழர்களாக இருந்து காலப்போக்கிலை சிங்களவர்களாக மாறியவர்கள்.*

என்றெல்லாம் சிவபாதம் தொடரவும்..

*அட! பெரிய ஆய்வாளர் இவர்.*

என்று கேலிசெய்து சிரித்த அருள்.

*அண்ணை! உங்களிட்டை இப்ப நான் உதுகளைப் பற்றிக் கோட்டனானை. அளந்து கொட்டிறியள். நிறுத்துங்க!*

இத்தனையும் தெரிந்த உங்களுக்குப் பொஞ்சாதியை இஞ்சை கூட்டிக்கொண்டுவந்து

இருத்திக் குடும்பம் நடத்த ஒரு வீட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

என்று அருள் அவரைப் பரிகாசம் பண்ணவும் நேருக்குநேர் நிமிர்ந்து பதில்சொல்ல முடியாதவராக வாயடைத்துப்போன சிவபாதம் ஆழ்ந்த கவலையில் மூழ்கியவாராக அமைதியானார். அடுத்தநாள் மத்துமபண்டா இரண்டு கூலியாட்களோடு வந்து அருளுக்கும் சிவபாதத்தின் அறையில் கட்டில் போடவைத்தார்.

என்னதான் வசதிகள் இருந்தாலும் எனக்கு இந்த அயல் துண்டாய்ப் பிடிக்கவில்லை. றோட்டுக்குப் பக்கத்திலை கடலேரி இருக்கிறதாலை காற்றுக் கொஞ்சம் வருகுது. ஆனால்.. சுற்றாடல் படுமோசம். நெருக்கமான வீடுகளும்.. சனஅடர்த்தியினால் இரைச்சல்களையும்.. அவர்கள் வளர்க்கும் பன்றிகள் கடிபட்டுக் கத்துவதையும். கழிவுநீரோடும் வாய்கால்களை அவை கிழறிவிடுவதையும்.. இடையில் புகுந்து உணவுதேடும் தாராக் கூட்டங்கள் கீச்சிட்டுக் கத்தும் குரல்களையும்.. அந்தச் சேற்று வாய்காலின் துர்நாற்றத்தையும்.. நுளம்புக் கடியையும் பொறுக்க முடியவில்லை. நேற்று இரவு வீட்டுவிறாந்தையில் நான் சற்றுநேரம் அமர்ந்திருந்போது கண்டபல காட்காட்சிகள் மனதை உறுதின. குடித்துவிட்டு வருபவர்கள் தள்ளாடித் தடுமாறி ஆளுக்காள் பேச்சுப்படுவதையும்.. அவர்கள் தூசன வார்த்தைகளைக்கூறி.. செய்த அட்டகாசங்களையும்..

தங்களின் வீடுகளுக்குள் அவர்கள்வந்து மனைவி பிள்ளைகளோடு சண்டைபிடித்துத் தர்க்கிப்பதையும்.. அடிபடுவதையும்.. அடிதாங்காத பிள்ளைகள் அலறிக்கொண்டு வீதியால் ஓடுவதையும்.. தாய்மார் அவர்களைத் துரத்திப்பிடிக்க முடியாதவர்களாய் உரத்து அழைத்தபடி தேடித்திரிவதையும் பார்க்கச் சகிக்கவில்லை. எழும்பிவந்து படுத்தன். நள்ளிரவிலும் அவர்களின் முனங்கல் சப்பதங்கள் தொடர்ந்து கேட்டதால் தூக்கங்கெட்டுப் போச்சுது. இவை தினமும் தொடருமானால் மூளைகலங்கிச் செத்துப்போவன் போலைகிடக்குது. நிம்மதியான நித்திரை கொள்ளாததாலை காலையிலை கண்கள் எரிந்தன. குளித்துவிட்டு வேலைக்கு ஓடலாமென்றால்.. இஞ்சை உள்ளது ஒரு குளியலறை. அதிலையும் இங்குள்ளவர்களால் நெருக்கடி..

என்றெல்லாம் கூறியபடி.. முணுமுணுத்த அருளானந்தந்தைப் பார்த்து.

அப்ப என்ன செய்ப்போறாய்..

என்று சிவபாதம் கேட்டார்.

வேறை இடம்பாத்துப் போகப்போறன்.

ஆர்வேணாமெண்டது. போதம்பி போ! எடுக்கிற சம்பளம் இருக்கிற இடத்துக்கும் கடைச் சாப்பாட்டுக்கும் கரைந்து போகும். வீட்டுக்கு என்னத்தை அனுப்பப்போறீர். உமக்குக் குடும்பச்சுமை அதிகமெண்டு அழுதீரே.. நானும் இந்தச் சுற்றாடலை வெறுத்து வேறை இடங்களைப் பார்த்தனான்தான். அங்கெல்லாம் பொல்லாத வாடகை கேட்கீனம். அதிலும் தமிழர்களுக்கு வீட்டில் அறைதருவதற்குப் பெரும்பான்மையினர் விரும்புவது குறைவு. அப்படி அறை கிடைத்தாலும் இங்குள்ளதுபோலை கழிவறை வசதியும் குளிக்குமறையும் சுதந்திரமாய் அமையாது. தம்பி அருள்! கொஞ்சம் யோசியும். இது பிறநகரப்பகுதி. நடுத்தரவகுப்பினரும்.. ஏழைகளும் வசிக்கின்ற சூழல். அப்படியிப்படித்தான் இருக்கும். சாமாழித்துப் போகவேண்டியதுதான்.

என்னாலை இஞ்சையிருக்க முடியாது. என்று அருள் சொல்லவும். சினம்பத்திய சிவபாதம்.. நீயொரு விடுபேயன்! உனக்கு விளங்கப்படுத்த ஏலாது. நான் ஏனிங்கை குடியிருக்க வந்தனான் என்றால்.. காசை மிச்சப்படுத்திச் சிக்னமாய்ச் சீவியம் நடத்தத்தான். இந்த விடுதியை நடத்தும் மத்துமபண்டபோலை ஆட்கள் இங்கினை கிடைப்பது அருமை. என்னில் அவருக்கு மதிப்பும் நட்பும் ஏற்பட்டதால்.. ஒருநாள் தனது மணவாழ்க்கை குறித்து என்னோடு மனந்திறந்து கதைத்தவர். என்ன அப்படிக் கதைத்தவர். என்று அலுத்துக் கொண்டே ஏழனமாகக் கோட்ட அருளானந்தத்திடம்.. அந்நாள் அவரின் மனைவி அக்கினேஸ் அம்மாவைக் காதலித்துத்தான் கலியாணம் செய்தவராம். மத்துமபண்டாவின் சொந்தவூர் கண்டியாம். இவர் ஒரு சினிமாப் படப்பிடிப்புக் குழுவில் பணியாற்றியதால்.. கடற்கரை மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் கதையை வைத்துத் தயாரித்த படமொன்றின் படப்பிடிப்பிற்காக நீர்கொழும்புக்கு வந்தவராம். இங்கை பலநாட்கள் அவர்கள் தங்கவேண்டி வந்தாம்.

படப்பிடிப்பு நடைபெறுவதைக் காணவந்த சனக்கூட்டாத்தோடு அக்கினேஸ்சும் அவரின் தோழிகளும் அடிக்கடி வந்தனராம். அதனால் கிடைத்த சந்திபால் தனக்கும் அவவுக்கும் நட்பு வளர்ந்ததாம். வெகுதுடியாட்டமான அக்கினேஸ் தன்னைக் காதலிப்பதாகக் கூறினாராம். என்றுசொன்ன மத்துமபண்டா நாணத்தோடு சிரித்தார். அது தனது குடும்பத்தினரின் எதிர்ப்பால் தடைப்பட்டபோதும்.. தன்னால் அக்கினேசை மறந்திருக்க முடியததால் தான் ஊரைவிட்டுக் கிழம்பிவந்து அவவைப் பதிவுத் திருமணம் செய்தவராம்.

இதனால்தான் தனது குடும்பத்தாரின் உறவை இழந்துவிட்டேன். என்றார்.

ஏன் எல்லோரும் சிங்களவர்கள்தானே. பிறகேன் பிளவுவந்தது.

என்று அருளானந்தம் கேட்கவும்..

ஓம். நானும் இதைக் கேட்டனான்தான்.

அவர் மேல்நாட்டுச் சிங்களவனாம். இவர்கள் எல்லோரும் கீழ்நாட்டுச் சிங்களவர்களாம். இதனால்.. கலியாணம் செய்முடியாது என்று அவரது குடும்பத்தினர்கள் மறுத்து விட்டார்களாம். இதுநாள்வரை தான் முயன்றபோதும் தனது உறவினர்கள் அவரை மன்னிக்கவில்லையாம்.

என்று சிவபாதம் கூறும்போது..

மத்துமபண்டாலின் வீட்டில் பலத்த அழுகுரல் சப்த்தம் தொடற்சியாகக் கேட்கவே.. என்னவென்று அறியும் ஆவலோடு சிவபாதம் அவரின் வீட்டிற்குச் சென்றார். பெண்பிள்ளைகள் இருவரும் தாயாரைத் தூக்கி அவர்களின் மடியில் வைத்திருந்தபடி அழுதுகொண்டிருந்தார்கள்.

தாயார் மயக்கம் தெளிந்து எழுந்திருக்க முயன்றார்.

இதுவெறும் பித்த மயக்கம்..

என்று வேலைக்காரப் பெண் சொல்லவே.. திருப்தியுறாத சிவபாதம்.. அவரைத் தனியார் மருத்துவ நிலையமொன்றிற்கு அழைத்துப் போகவேண்டுமென்று வற்புறுத்தவே.. அதை ஒப்புக்கொண்ட பிள்ளைகள் வாகன வசதியை ஏற்படுத்துமாறு தந்தையாரைத் தூண்டினர். வாகனம் வந்ததும் மத்துமபண்டா மனைவியாரை அதில் ஏற்றிவிட்டுச் சிவபாதத்தையும்

தனக்குத் துணையாக வருமாறு அழைத்து. அவரையும் ஏற்றிக்கொண்டு போனார்.

அது பலவசதிகள் நிறைந்த பெரியதொரு மருத்துவ நிலையமது.. அங்கு அக்கினேஸ் அம்மாவுக்கு பரிசோனைகள் நடந்தன. அவரின் இருதயத்தில் பாரிய அடைப்புகள் இருப்பதாகவும் உடனடியாக ஒப்பரேசன் செய்யவேண்டும் என்று சொன்ன மருத்தவர்.. அவவின் உடலில் போதிய இரத்தமில்லை. இரத்தம் ஏற்றித்தான் ஒப்பரேசனைத் தாமதமின்றிச் தொடங்கவேண்டும் என்றும் கூறியபோது..

மிரண்ட மத்துமபண்டாவைத் தேற்றிய சிவபாதம்..

எனது பிளட்குறூப் எல்லாருக்கும் பொருந்தும். நான் இரத்தம் தருகிறேன். என்று சொன்னதும்..

சிவபாதத்தின் இரத்தைப் பரிசோதனை செய்தவர்கள்.. குறூப் பொருந்துகின்றது. என்று சொல்லவே..

அவரின் இரத்ததை எடுத்து.. அக்கினேஸ் அம்மாவுக்கு ஏற்றப்பட்டது. அறுவைச் சிகிச்சை நிவுணரும் வரவழைக்கப்பட்டார்.

அம்மாவின் ஓப்பின்சேஸரி ஒப்பிறேசனைத் தொடங்கினார்கள்.

மத்துமபண்டாவோ.. தேகம்நடுங்க அவரின் திரண்ட தோள்களைச் சிவபாதத்தின்மேல் சாய்த்தபடி.. சோகம் தாங்காது புலம்பினார்.

இமைகளால் நீர்வடியத் துடித்துக்கொண்டு இருந்தவரைத் தடவித் தேற்றியவாறு.. வெளியில் அமரவைத்த சிவபாதம் பெருத்த களைப்போடு இரவுமுழுவதும் அவரோடு இருந்தார்.

இருதயத்தில் செய்யப்பட்ட பைபாஸ் ஒப்பிறேசனும் முடிந்தது.

அக்கினேஸ் அம்மாவுக்கு அறிவுவந்தபின்பு வீட்டுக்குக் கிழம்பிய சிவபாதத்தின் கைகள் இரண்டையும் பற்றியவராக மத்துமபண்டா கண்ணீர்வடிய நன்றிசொல்லியவர். வாகனமொன்றை வரவழைத்து அவனை வீடுட்டு;க்கு அனுப்பிவைத்தார். வேலையில் ஓய்வு எடுத்துக்கொண்டு சிவபாதம் யாழ்பாணத்தில் இருக்கும் தனது இல்லத்திற்கு வந்தார். வந்ததிலிருந்து அவருக்கும் மனைவிக்கும் தொடங்கிய நீன்றதொரு வாக்குவாதம் முற்றுப் பெறுவதாயில்லை.

இஞ்சேருங்கோ! என்ரை நிலமையை எத்தினைதரம் சொல்லிப்போட்டன். பேசாமல் இருக்கிறியள். உங்களைத்தான் கேட்கிறன். என்னைக் கூட்டிக்கொண்டு போகிற எண்ணமில்லையோ.

கடைசி ஒரு கிழமைக்கெண்டாலும் ஒரு கோட்டலிலையாவது அறையெடுங்க. நாம் அங்கு தங்கியிருப்பம்.

எனக்கு நீர்கொழும்பைப் பாக்கவேணும். உங்களோடை அங்கை நிரந்தரமாய் இருக்கவேணும் என்று எத்தனை தரம்சொல்லியும் நீங்கள் வீடு எடுப்பதாயில்லை. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளும். ஆர்வத்தோடை நானங்கை வீடுதேடிக்கொண்டு திரிகிறன். வசதியான

இடம் கிடைக்குதிலை. உம்மடை முகத்தை.. புன்னகையை.. உபசரிப்பை எனது மனம் நினைவூட்டிற நேரமெல்லாம் நான் தவித்துப் போகிறன்.

என்று அவர் தழம்பிய குரலில் சொல்லவும்..

மல்லிகா தன் கண்ணை மறைத்த நீர்த்திரையை அவர் பார்த்துவிடப் போகிறாரே என்று தலையைத் தாழ்த்திபடி கையால் துடைத்துக் கொண்டாள். இத்தனை சந்தோசமும் பரவசமும் நிம்மதியும் நித்தியமும் கிடைக்கவேண்டும் என்றுதான் ஆசைப்படுவன். இந்த உணர்வுகளைத் தாண்டி முட்டிக்கொண்டு முன்னால் வருவது ஏமாற்றமும் எரிச்சலும்தான்.

நானோ இரவு வேலைக்கும் போறவன். உனக்குத் தகுந்த பாதுகாப்பு வேணுமல்லவா. அப்படியான நம்பிக்கையான ஒரு குடும்பத்தின் உதவியிருந்தால் அது சாத்தியப்படும்

என்ன செய்வது

என்று சொல்லிப் பெருமூச்சுவிட்ட சிவபாதம் சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்தவர்.. மத்துமபண்டா ஐயாவோடு அலைபேசியில் கதைத்தார்.

அம்மா நலமாக இருக்கின்றாவா?

ஓம் மகன்! நல்லசுகமாக இருக்கின்றா. உமது மனைவி மற்றும் குடும்பத்தினர்கள் சுகமாக உள்ளார்களா..

ஓம் ஐயா! ஆனால்.. அதுவந்து..

என்று தனது குரலை இழுத்த அருளானந்தத்தை நோக்கி.. மத்துமபண்டா..

என்ன ஏதோசொல்லவந்து யோசிக்கிறீர் என்று கேட்கவும்.

சோகமாகச் சிரித்தவாறு.. சற்றுத்தாமதித்துத் தன்னைத் தயார்படுத்திய சிவபாதம்.

ஐயா! எனது மனைவியார் நீர்கொழும்பைப் பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுகின்றா.. அதுதான் ஐயா.. அவவுக்கு ஒருகிழமைக்கு உங்கடை வீட்டிலை தங்கியிருக்க இடமளிக்க முடியுமா என்று கேட்கத்தான்..


சிவபாதம் கூறிமுடிக்குமுன் குறுக்கிட்டுப் பேசிய மத்துமபண்டா..

உம்மை எங்கடை பிள்ளைபோலை நேசிக்கிறோம். நீரும் உமது மவீனியாரும் வந்து எங்களோடையே நிரந்தரமக இருக்கலாம். அது எங்களுக்குத் துணையாகவும் இருக்குமென்று நினைக்கிறன்..

ஐயா! எனக்கு இந்த வார்த்தையை கேட்கப் பெரிய மகிழ்ச்சியாக இருக்கின்றது. மிகவும் நன்றி ஐயா. நாங்கள் நாளைக்கே கிழ்பிவருவம். என்று சிவபாதம் சொல்லவும் சிரித்துக்கொண்டு..

இனிமேல் எங்களோடையே சேர்ந்து வாழப்போறீர்கள். நேரிலை எந்தநாளும் நிறையப் பேசலாம்.. என்ற மத்துமபண்டா விடைபெற்றார். ●

### ச. இராஜ்குமார்



உன்பெயர் எழுதி எழுதி அழித்து
விடுகிறேன் ஆனால் மனதில் ரத்த
நாணங்களில் சேர்ந்துவிட்ட உனது பெயர்
எதை கொண்டும் அழித்துவிடமுடியாது..


உன் நினைவுகள் அவ்வப்போது உதிர்கின்ற
சருகாகவும்
மண்ணை முட்டி முளைக்கும் சிறு
விதையாகவும் என்நெஞ்சில் விடயமாகவே
இருக்கிறது..


மலர்கள் உதிர்ந்த மரங்களை கண்டால்
மனம் அங்கேயே நின்றுவிடுகிறது நாம்
அங்கே கைக்கோர்த்து கதைபேசிய
நாட்களை கடத்தமுடியாமல் மனம்
அங்கேயே நின்றுவிடுகிறது...!!

இடைவெளி என்பது காலத்திற்கு
மட்டுமே காதல் மனதிற்கு இல்லை
விரைந்து வா என்னவளே மூங்கில்
காடு காத்திருக்கு புது ராகம் பாட
மௌன கீதம் பாட என்னை அதற்குள்
புகுத்திவிடாதே கடிந்து வா..!!!

**ப. தாணப்பன்**

கறுப்பு நிறக்கோடுகளை
உற்று நோக்குகிறாள் மகள்.
அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை
அவை விலையினைத் திரையினில்
பிரதிபலிக்குமென்று.
தெரிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.
அந்த வண்ணம் அப்பாவிற்கு வெகு
பொருத்தமாக இருக்கும்.
அதனை அணிந்து வரும் அழகினை
இமை கொட்டாது பார்க்க வேண்டுமென்பதே.
கறுப்பு வெள்ளைக் காலம்
துல்லிய ஒளி நுட்பமாக
சிந்திச் சிதறுகின்ற போது
இது எம்மாத்திரம்?
அணிந்து கொண்டு
காண்பித்த
ஒப்பனையினை மீண்டும் மாட்டியது
அவளுக்குத் தெரியக்கூடாதென்று
தொடுதிரை கதைகளில்
மூழ்க வைக்கிறான்.
பொய்மையின் பிம்பத்தை நிஜமென எண்ணி
பூரிக்கிறாள் மகள்.
அவள் தனக்குள் வருந்திக் கொண்டிருப்பதை
இப்போது
நகர்த்திக் கொண்டிருந்தது
அப்பேசி.





# மாலை

மதுரை மீனாட்சி அம்மன் கோவில். ஆனந்தனும் மல்லிகாவும் முதன்முறை தரிசனத்திற்காக வருகின்றார்கள். அம்மனுக்கு எத்தனை கோபுரங்கள். அவர்களை வசதியாக கோபுர வாசலுக்கு அண்மையில் இறக்கிவிட்டு, "நீங்கள் உள்ளே போய் தரிசனத்தை முடித்துக்கொண்டு வாருங்கள். நான் காரை எங்காவது ஓரிடத்தில் நிற்பாட்டிவிட்டு இந்த இடத்தில் வந்து நிற்கின்றேன்" சாரதி சொல்லிக்கொண்டே காரை வசதியாக நிறுத்துவதற்கான இடம் தேடிப் புறப்பட்டான்.

ஒரே சனக்கூட்டம். எங்கு பார்த்தாலும் மனிதர்கள் ஆரவாரமாகத் தெரிந்தார்கள். கோவிலுக்கு எந்தப் பக்கத்தால் போவது? கோபுரம் இருந்த திசை நோக்கி ஆனந்தனும் மல்லிகாவும் நடந்தார்கள்

"அம்மா... ஒரு முழம் பூ வாங்கிக்கோம்மா... உங்களுக்கு நல்ல அழகாக இருக்கும்" சொல்லிய திசை நோக்கித் திரும்பிப் பார்த்தாள் மல்லிகா. பத்து வயது மதிக்கக்கூடிய சிறுபெண்.

அப்படியே உருக்கி வார்த்த அம்மன் விக்கிரகம் போல அழகாக இருந்தாள். மல்லிகாவின் மனம் ஏக்கம் கொண்டது. ஒரு பிள்ளைக்காக எத்தனை வருடங்கள் காத்திருக்கின்றாள். எத்தனை கோவில்கள் ஏறி இறங்கிவிட்டாள். தமக்கான குறையினை அம்மனிடம் முறையிட வந்தவர்களல்லவா அவர்கள்.

பள்ளிக்குப் போகாமல் மாலை விற்பதற்கு அவளின் வறுமை தான் காரணம் என்பதை அவள் தோற்றம் சொல்லியது. கோவில் சூழல் என்பதால், குளித்து மங்களகரமாக கந்தையானாலும் கசக்கிக் கட்டி நிற்கும் அவளின் நெற்றியில் விபூதி சந்தணம். மனதில் அவளுக்கு ஆபரணங்கள் அணிந்து அழகு பார்த்தாள் மல்லிகா. தேவதைதான் அவள். அவளை நெருங்கினாள்.

"ஒரு முழம் என்ன விலை?"

"நூறு ரூபா தாங்க"

அவளிடமிருந்து ஒரு மாலையை வாங்கிச் சொருகியவாறு கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள். அவள் மல்லிகாவை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையில் ஏதோ தொக்கி நின்றது.

"அம்மா.... இன்னும் ஒரு மாலைதான் இருக்கு. அம்மனுக்குப் போட வாங்கிக்கோம்மா... இதையும் வித்துப்புட்டேன்னா நான் பள்ளிக்குப் போயிடுவேன்"

மல்லிகா அவளைச் சுற்றி வட்டமிட்டாள். ஆனந்தன் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தான். மாலையை வாங்கியபடியே, "பிள்ளைக்கு என்ன பெயர்?" மல்லிகா கேட்டாள்.

"அஞ்சலி"

அஞ்சலி - அம்மனின் பெயரல்லவா! மல்லிகா வியந்தாள்.

"சரி... பின்புறம் திரும்பிக்கோ.."

அஞ்சலி தயங்கியபடியே இருவரையும் பேந்தப் பேந்த முழித்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"திரும்பிக்கோம்மா..." திரும்பவும் மல்லிகா சொன்னாள்.

அவள் மெதுவாகத் திரும்பி மல்லிகாவுடன் ஒட்டி நின்றாள். ஒரு பிள்ளையின் நெருக்கத்தை மல்லிகா உணர்ந்தாள். அவளின் தலையில், ஒரு அம்மாவின் கரிசனையுடன் அந்த மாலையைச் சூட்டினாள்.

"அப்ப சாமிக்கு?" சிறுபெண் கேட்டாள்.

"நீதானடி என்ரை அம்மன்" மல்லிகாவின் கண்களில் இருந்து தாரையாக நீர் வழிந்தது. அஞ்சலியின் கண்களில் இருந்தும்.

●



# அவர்கள் திருந்தவேண்டும்

ஐரோப்பிய நாடுகளில் கொரோனா வைரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கையை எடுத்த நாடு என்றால் அது டென்மார்க் நாடுதான். முன்கூட்டியே முன்பள்ளிகளையும், பாடசாலைகளையும்,

கல்லூரிகளையும் மூடிய நாடு டென்மார்க்.பொதுப் போக்குவரத்தை மட்டுப்படுதியதும்,மக்களை வீட்டில் தனிமைப்படுத்தி வைத்ததும்,தனது எல்லைகளை மூடியதும் இந்த நாடுதான்.வைரசின் தொற்று வீதமும்,இறப்பு வீதமும் குறைந்த நாடாகவே இது இருந்தது.வேலைக்குப் போகாமல் மக்களை வீட்டில் இருக்கச் சொன்னாலும் தனது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளையும் இந்த நாடு செய்யத்தவறியதில்லை.அரசாங்கமும்,அரசியல்வாதிகளும் மனிதநேயம் மிக்கவர்கள்.ஆழும் கட்சி,எதிர்க்கட்சி என்று அடிபிடி படுதலோ,குற்றம் குறை காண்பதோ,திட்டித் தீர்ப்பதோ இந்த நாட்டு அரசியல் வாதிகளிடம் கிடையாது.

"அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்" என்று அன்று பாண்டிய நாட்டை அரசாண்ட மன்னனைப் பார்த்து ஆவேசப் பட்டு சொன்ன வார்த்தைகளை உள்ளபடி இந்த நாட்டு அரசியல்வாதிகள் கருத்தில்கொண்டு, தர்மத்தின் வழியில் அரசியல் செய்கிறார்களோ என்னவோ!

நமது நாட்டில்தான் அது இல்லையே, சரி அது போகட்டும்.

இப்போது இந்த டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன்ஹேகனில் வாழும் கிருபாகரன் என்ன பண்ணுகிறான் என்று பார்ப்போம்.

அட, தனது வீட்டுக்கு பின்புறமுள்ள சிறு நிலத்துண்டில்,தான் ஆசையோடு நட்டு வளர்த்துவரும் பயிர்களுக்கு புதிய மண் உரம் இட்டு கொத்திக் கிளறிக்கொண்டு இருக்கிறான்.

அங்குள்ள ஹோட்டலிலும்,உணவகம் ஒன்றிலும்,வேலை செய்கிறார்.ஆம்,இரண்டு வேலைகள்.

ஒரு வேலை செய்தாலே தனது குடும்பத்தை நன்றாக பார்த்துக்கொள்ள முடியும்.என்ன செய்வது ஊரில் உள்ள உறவுகளுக்கும் திடீர் திடீர் என்று உதவி செய்ய வேண்டி வருகிறதே. அதனால் உடலை வருத்தி இரண்டு வேலைக்குப் போகுறான் கிருபா. இப்போது வீட்டில் இருக்க சொல்லி கொரோனா கொடுத்த வாய்ப்பை தனது தோட்டத்தில் தான் வளர்த்துவரும் பயிர்களுக்கு பராமரிப்பு செய்யலாமே என்று அங்கு நிற்கிறான்.

தக்காளி செடிகள் காயும்,பழமுகாக நின்று காட்சிகொண்டுகின்றன.உருளைக்கிழங்கு, பீட்ரூட்,கரட்,போன்ற நிலத்தில் விளையும் கிழங்கு வகைகள் செழிப்பாக இருக்கின்றன. பீன்ஸ் செடிகள் காய்த்து கிடக்கிறன.ஸ்பினாச் என்ற கீரைவகை மதாளிப்பாக உள்ளன.

கத்தரி செடிகள்,வெண்டி செடிகள் எல்லாம் காய்த்து நிற்கின்றன.இந்த பயிர்முகங்களை பார்த்தாலே பசி பறந்திடும்.கிருபாவுக்கு கிடைத்த இந்த தனிமைப் படுத்தல் தன வீட்டில் பல வேலைகளை செய்வதோடு,தனது காய்கறி தோட்டத்தில் பராமரிப்பு வேலை செய்யவும் உதவுகிறது.

மண்ணை கொத்திக்கொண்டு இருந்த கிருபாவுக்கு நெற்றி ஐ.பி.சி. செய்தியில் கேட்ட செய்தி மீண்டும் நினைவுக்குவர ஆத்திரமாக வந்தது.அதன் நிமித்தம் நிலத்தை ஆக்ரோசமாக கொத்திப் பிரட்டிகொண்டிருந்தான். அந்த செய்தி என்ன? ஊரடங்கு சட்டத்தினால் முடக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் மாவட்டம், நேற்று தளர்த்தப்பட்டு மக்களின் நடமாட்டதிற்கும், அவர்கள் பொருட்கள் கொள்வனவு செய்யவும் வழிவகுத்தது.

ஆனால் ஆண்களில் அதிகமானோர் முதல்வேலையாக முண்டியடித்து சென்றது மதுபான

விற்பனை நிலையங்களுக்கே.வேகா வெயிலில் இவர்கள் நீண்ட வரிசையில் மதுபானம் வாங்க நின்றதை வீடியோ பண்ணி செய்தியில் சேர்த்திருந்தார்கள். உலகமே தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மரணத்தின் பிடியிலிருந்து மனிதர்கள் விடுபட மார்க்கம் எதுவென்று அறியாமல் இருக்கும் இந்த இக்கட்டான நேரத்தில்,அங்குள்ள மக்கள் மதுபானம் வாங்க மதுக்கடைகளுக்கு சென்றதைப் பார்த்து கொதித்துப்போனான் கிருபாகரன்.

போர்சூழலில் ஊரிலிருக்க முடியாமல்,உயிரை காப்பாற்றவே அன்று நாட்டைவிட்டு வெளியேறி பல கஷ்டங்களுக்கு மத்தியில் முன்பின் அறிந்திராத நாடுகளுக்கு வந்து சேர்ந்து,துன்பப்பட்டு அகதிகளாக அல்லாடி,காலப்போக்கில் குடியுரிமை பெற்று விரும்பியோ,விரும்பாமலோ ஏதோ வாழ்ந்துவிட்டு போவோம் என்று வாழும் இந்த புலம்பெயர் மக்கள் பனியிலும்,குளிரிலும் வெயிலிலும்,கஷ்டப்பட்டு வாழ்கிறார்கள். ஊரிலிருந்து உறவுகள் கேட்கும் உதவிகளை மனம் கோணாமல் பலர் செய்கிறார்கள்.

வெளிநாட்டில் பண மரம் காய்க்கிறது என்ற நினைப்பில் பலர் அங்கிருந்துகொண்டு அடிக்கடி இங்குள்ள அண்ணன்,தம்பி,மாமன்,மச்சான்,சித்தி,சித்தப்பு என்று இருக்கிற பல உறவுகளை பாடாய் படுத்தி எடுப்பது, பணம் அனுப்புங்கோ என்று ஒரே நச்சரிப்பது. இதைவிட ஒருபடி மேலே போய் சிலர்,தங்களுக்கு வெளியில்போக ஆட்டோ ஒன்று வேண்டும் வாங்கி தாருங்கோவன்,என்றும் மகனுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வேணும்தம்பி,அவன் உந்த பஸ்ஸில் போய்வாறான் என்றும் சொல்லி, தங்களின் காரியங்களில் கவனமாக இருந்து சாதித்து விடுவார்கள்.

போர் முடிந்து ஒரு தசாப்த காலம் முடிந்தும் இன்னும் தனது மக்கள்,அந்த மண்ணில் பழையபடி வாழ தங்களை தயார் படுத்தவில்லை.வெளிநாட்டில் உள்ள தங்கள் சொந்தங்களையே நம்பி அனேகம்பேர் வாழ்கிறார்கள் என்பதையும் கிருபா அறிவான். பொறுப்பில்லாத இத்தகைய மக்களில் அவனுக்கு வெறுப்பு இருந்தது.தனது சகோதர,சகோதரிகளிலும் அதே வெறுப்பு அவனுக்குண்டு.இன்று இந்த ஐ.பி.சி செய்தியை கேட்டபின் அது அவன் வெறுப்பை இன்னும் அதிகப்படுத்தியது. சினம் கொண்டு இருந்தவனின் சிந்தனையை சிதறடித்தது அவன் மனைவி தங்கேஸ்வரியின் அழைப்பு.

“என்னங்க உங்களுக்கு போன் வந்திருக்கு.கைகால் கழுவிட்டு கெதியில வாங்க “

“போனா யார் பேசுறாங்க கேட்டியா தங்கம்“

“யாரு எல்லாம் உங்களின்ற அக்காதான் பேசுறா “

“என்னவாம்.என்ன விஷயம் எண்டு கேட்டு சொல்லன்.நான் இங்க வேலையா இருக்கிறன்”

“இல்ல அவ உங்களோடதான் கதைக்க வேண்டுமாம் லைன்ல நிற்கிறா.அதப் பேந்து செய்யலாம் வாங்க” என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றாள் தங்கேஸ்வரி.

சரி நாடு இருக்கிற இந்த இக்கட்டான நிலையில் தொலைபேசி அழைப்புகளை அலட்சியப் படுத்தவும் முடியாதுதான் என்று எண்ணியவனாய் கைகால் கழுவிக்கொண்டு ஹாலுக்கு வந்தவனிடம் அவனது ஸ்மார்ட் போனை கொடுத்தாள் தங்கம்.அதை வாங்கி,

“ஹலோ “என்றான்

“ஹலோ தம்பி நான் அக்கா கதைக்கிறான்”

“சொல்லுங்க என்ன விஷயம்“

“என்னதம்பி மொட்டையா பேசுறாய்”

“நான் வெளியில வேலைசெய்துகொண்டு இருக்கிறன் சொல்லுங்கோ”

“அது வந்து,அது வந்து தம்பி”

“என்ன வந்தும் போயும் இங்க கேளுங்கோ நான் தோட்டத்துக்குள்ள வேலை செய்துகொண்டு நின்ற நான்.அப்படியே விட்டுப்போட்டு வந்தனான் சரி என்ன விஷயம்?”

அவனுக்கு அக்காவின் போன் என்றாலே எரிச்சலா வரும்.காரணம் ஏதாவது அவர்களுக்கு கஷ்டம்,பணத்தேவை, கணவர் குடிதுப்போட்டு தன்னோடும்,பிள்ளைகளோடும் சண்டை பிடிக்கிறார்,இப்படியான விடயங்களைத்தான் சொல்லுவா.அதனால் அக்காவின் போன் என்றால் அவனுக்கு அலர்ஜி.

“ஒண்டுமில்ல தம்பி.இங்க ஊரடங்கு சட்டத்தை தளர்த்திடாங்க.கடைகள் எல்லாம் திறந்து வியாபாரம் நடந்தது.மக்கள் மூன்று கிழமையா வீட்டுக்குள் இருந்தவை இன்றுதான் வெளிக்கிட்டு போய் சாமான் சக்கட்டு வாங்கி வந்தவை.நானும் போய் எனக்கு தேவையான சாமான்களை வாங்கி வந்தனான்”

“சரி,சரி நான் எல்லாம் டிவியில் பார்த்தனான் நீங்க எல்லாரும் நலமா இருக்கிறீங்கதானே”

“நாங்க நல்லா இருக்கிறமப்பு நீங்க எப்படி இருக்கிறீங்க”

“ ம் ம். ஏதோ இருக்கிறம் வேலைவட்டி இல்லாமல் வீட்டுக்குள் முடங்கி கிடக்கிறோம் “

சலிப்போடு சொன்னான் கிருபா.

“தம்பி இவர் காலையில பத்துமணிக்கு வெளியில போனவர்.மத்தியானம் வரை ஆளைக்காணயில்லை.என்ன எவடம் என்று பார்க்க தம்பி செந்திலை அனுப்பினேன் அவன் போய் பார்த்துவிட்டு வந்து சொன்னான் உன்ர அத்தார் சாராயக் கடைக்கு நிற்கிற கியூவில வெயிலுக்க நிற்கிறாராம்.கடைக்காரர் ஒருவர் ஒருவராகத்தான் கூப்பிட்டு உள்ளுக்கு எடுக்கிறாங்களாம். இந்த மனுஷன் எப்ப வருமோ தெரியாது”

“இதை சொல்ல உனக்கு வெட்கமா இல்லையா.குடிக்கு அடிமையாகி இருக்கிற உங்கட புருஷன் போல ஆட்களை திருத்தத்தான் இந்த கொரோனா வந்தது என்று பார்த்தால் அதற்கும் சாவால் விடுற மாதிரியல்லோ இருக்கு.காலையில உந்த செய்தியை டிவியில பார்துப்போட்டுதான் கோபத்தோட நான் பின்னால தோட்டத்துக்குள் போனனான் கண்டியோ. சாராயமும்,சாப்பாடும் இருந்தால் இவரைப்போல உள்ளவைக்கு வேற ஒண்டும் தேவையில்லை.கவலையுமில்லை. உலகமே பயந்து நடுங்கிக் கொண்டு இருக்கிறது.நாட்டுக்கு நாடு ஆயிரக்கணக்கில் ஆட்கள் செத்துக்கொண்டு இருகிறாங்க,

இவங்களுக்கு மதுவை விட மற்றொன்றும் பெரிய விசயமே இல்லை.”

“தம்பி கோபிக்காத, இவ்வளவு நாளும் குடிக்காமல்தான் இருந்தவர். இன்றைக்குத்தான் கடை திறந்தவை அதுதான் போய் இருக்கிறார்.நான் நீ சொன்ன விடயம் எல்லாம் அவரிட்ட சொல்லிப்போட்டடன்.அவரும் படிப்படியா உந்த பழக்கத்தை நிறுத்தி போடுவன் என்று சொல்லி உள்ளார்”

“இங்கே அக்கா எனக்கு கேந்திய கிளறாதை கண்டியோ.நானும் பல வருசமா சொல்லி வாறன் இந்த பாழாய்ப்போன குடியை நிப்பாடி ஏதும் உருப்படியா தொழில் செய்து உருப்பட பாருங்கோ என்று.ஓம் ஆம் என்று சொல்லிப்போட்டு,வெளிநாட்டுக் காசிலே வாழ்ந்து பழக்கப்பட்டுப்போயிட்டீங்க. உங்க இருக்கிற உங்கட மூன்று பரப்பு காணியில பயிர் பச்சை செய்தாலே உங்கட வாழ்க்கை நல்லா வந்திடும்.அந்த காலத்தில் அப்பு அதில தோட்டம் செய்துதானே எங்களை வளர்த்தவர்.இப்ப என்ன வந்தது.அது வேற ஒன்றுமில்ல, நாங்க இங்கனைக்க கஷ்டப்பட்டு உடலை வருத்தி ஒன்றுக்கு இரண்டு வேலை செய்து உங்களுக்கு நீங்க கேட்கும்போதெல்லாம் பணம் அனுப்புறம் அல்லவா.

அதுதான் விஷயம்.நமக்கென்ன எல்லாம் கிடைக்குதுதானே,டென்மார்க்கிலும், லண்டனிலும் உள்ள தம்பிமார் கேட்டவுடன் எல்லாம் செய்வார்கள் என்று இருக்கிறீங்க”

“ தம்பி உங்களை கஷ்டப் படுத்தவேண்டும் என்று நான் நினைக்கல்ல. நாட்டில் ஏற்பட்ட போரினால்தான்”

“இஞ்ச பாரக்கா சும்மா போர் அது இது என்று சொல்லி கதைக்கவேண்ட்டம் போர் முடிஞ்சு பதினொரு வருஷமாகிறது.இவ்வளவு காலத்துக்குள் எவ்வளவோ செய்திருக்கலாம். ஆரம்பத்தில் உங்களுக்கு உதவி செய்வது எங்களின் கடமை. அது அவசியமும்தான். ஆனால் இப்போது எங்கட குடும்பங்களும் இங்கே தேவைகளுக்குள் இருக்கிறது. அதனால் முதல்மாதிரி உங்களுக்கு எல்லாம் கேட்டவுடன் பணம் அனுப்ப முடியாது. இந்த கொரோனா பிரச்சினை முடியும்மட்டும் எங்களால் முடிந்ததை செய்வோம்

அதன்பிறகு எல்லாமே மட்டுப்படுத்தி விடுவோம்.அவ்வளவுதான்.”

“ சரி தம்பி வெளியில சத்தம் கேட்குது இவர் வாறார் போல தெரியுது நான் வைக்கிறன்”

என்று பேச்சை துண்டித்துவிட்டா கிருபாவின் அக்கா.

கிருபாகரன் மீண்டும் தான் தோட்டத்தில் விட்ட வேலையை தொடர சென்றான்,இப்போது அவனுடன் மனைவி தங்கேஸ்வரியும் சேர்ந்துகொண்டாள்.கிருபா,பேசியதை கேட்டுக்கொண்டு இருந்தவளுக்கு அவன்மேல் அனுதாபமும்,அன்பும் பிறந்தது.இப்படி கிருபா அவன் அக்காவுடன் பேசியதை முன்பு ஒருநாளும் கேட்கவில்லை.இனியாவது அவர்கள் திருந்த வேண்டும். என்று மனதுக்குள் நினைத்தவளாய், கிருபாவின் கையிலிருந்த கோஸ் பைப்பை வாங்கி காய்கறி செடிகளுக்கு பக்குவமாய் தண்ணீர் ஊற்றினாள்.கிருபாகரன் மண்ணை ஒதுக்கி பாத்தி பிடித்துக்கொண்டிருந்தான்.அடுத்தவாரம் டென்மார்க் இயல்பு நிலைக்கு திரும்பும் என்ற எதிர்பார்ப்புடன்.

●

மணிமாலா மதியழகன்,
சிங்கப்பூர்



# 'ஙகா..'

"கீச்.. வீச்.." என்ற குருவிகளது குலவல் சன்னல் வழியே வந்து என்னிடம் நலம் விசாரித்தன. 'அட.. தேன்சிட்டுகள்!' காக்கைகளின் எண்ணிக்கைக் குறைஞ்சு மைனாக்களும் புறாக்களுமாக ஆதிக்கம் செய்கிற சிங்கப்பூரில் ஆகச் சிறிய பறவையின் வரவு எனக்குப் புதுமையாக இருந்தது. இதுநாள்வரை சாலையோரத்து மரங்களில் குயில்களின் கானம், பெயரறியாப் பறவைகளின் 'பக்.. பக்..'என இலவச இசையைக் கேட்டிருக்கிறேன். இப்போது கொஞ்ச நாட்களாய் வீட்டின் கதவைத் திறக்கும்போதெல்லாம் பறக்கும் தேன்சிட்டுகள் என் கவனத்தை வசப்படுத்தின! கணவரும் பிள்ளைகளும் மாலையில்தான் வீட்டுக்குத் திரும்புவார்கள். அதுவரை 'வானொலி ஒலி *96.8*தான்' என் தனிமைக்குத் துணையாயிருக்கும். இப்போது அந்த இடத்தில் இந்தக்

குருவிகளின் குரல் சேர்ந்துகொண்டதே!

வீட்டுக்கு வெளியே இலையும் கிளையுமா தழைஞ்சிருக்கிற செடியின்மேல என் கவனம் போனது. சூரியன் உருகி வழிவதைப்போல உக்கிரமாகக் காயும் மே மாத வெயிலில் ஒரு நாள் தண்ணீரை ஊற்ற மறந்தால்கூட மறுநாள் சருகாகப் பறக்கிறது. அண்டைவீட்டு சமீரா ஆன்ட்டி உறவினரது திருமணத்திற்காக இந்தியாவிற்குப் போய் இரண்டு மாதங்களாகியிருந்தன. அவரது மகள் தந்த அந்தத் தகவலால் செடியின் கிளைகள் சுதந்திரமாகப் பறவை சிறகை விரித்ததைப்போலப் படர்ந்திருந்தன.

இந்தியாவிலிருந்து நேற்றைக்குத் திரும்பியிருந்த ஆன்ட்டியின் பார்வை என்னைக் கண்டு ஆதவனைக் காட்டிலும் அதிகமாகத் தீய்த்தது. ஒண்ணு ரெண்டு இலைகள் பறந்தால் பிரளயப் பேராபத்து வந்துடப் போகிறதா என்ன? அவர் உமிழும் வன்மத்தின் வீரியத் துளிகள் எதிரிலிருப்பவரைப் பொசுங்க வைக்கிறதே. அழைப்பு மணியை அலறவிட்டுக் காட்டுமளவிற்குக் காய்ந்துபோன இலைகள் என்ன அவ்வளவு அருவருக்கத் தக்கதா? என்ன மாதிரியான மனுசி இவர்? வருத்தத்தை மிகுவிக்கும் அவருடைய பேச்சைக் கேட்க விருப்பமற்றுப் போவதினால் செடியின் கிளைகளை அடிக்கடி வெட்ட வேண்டியது கொடுமையிலும் கொடுமை.

கசந்த நினைவுடன் தண்ணீரை ஊற்றியபோதுதான் கவனித்தேன். சிறு மரத்தைப்போல வளர்ந்திருக்கும் செடியின் கிளையில் என்ன அது? நாரும் பஞ்சுமாக ஏதோ தொங்குகிறதே! யோசனையாகச் சுற்றிலும் பார்வையை ஓடவிட, படிக்கட்டுகளின் பக்கவாட்டுக் கம்பிகளில் தேன்சிட்டு ஒன்று அலகில் நாருடன் அமர்ந்திருந்தது. கொஞ்ச இடைவெளியில் சற்றே அடர் நிறத்திலிருந்த இன்னொரு தேன்சிட்டு 'இங்கே உனக்கென்ன வேலை?' என்பதைப்போல என்னை முறைத்தது.

'அட.. இந்தக் குருவிகள் இங்கே கூடு கட்டுகின்றனவா?' அதுவரை அனலில் ஆட்பட்டிருந்த வெம்மை சட்டென விலகி, மார்கழியின் அதிகாலையைப்போன்ற தண்மையை மனம் அனுபவித்தது!

'குருவிகள் கூடு கட்ட சிங்கப்பூரில் மரங்களுக்குப் பஞ்சமா என்ன? வெயிலை விழுங்கி அன்பின் வெளிப்பாடாய் நிழலைத் தரும் மரங்களையெல்லாம் ஏன் இந்தக் குருவிகள் நிராகரித்தன? சிலர் அசகாயச் சாகசம் புரிய வெவ்வேறு வகைகளில் ஏதேதோ செய்வார்களே, அதைப்போல இவை நினைத்திருக்குமோ? மேலும் இந்தச் செடியில் இவ்வளவு கிளைகள் நெருக்கமாயிருக்க, நுனிக்கிளையில் கூட்டைக் கட்டுதே.. இதனோட பாரத்தை இந்தக் கிளை தாங்குமா? ம்.. கூட்டைக் கட்ட இடத்தைத் தேர்வு செய்தக் குருவிகள் இதை யோசிக்காமலா இருந்திருக்கும்?' என்ற அடுக்கடுக்கான ஐயங்களோடு குருவிகளைச் சுற்றியே என் மனமும் சிறகடித்தது.

உருவாகிக்கொண்டிருந்த கூட்டைப் புகைப்படம் எடுத்து குடும்ப 'வாட்சப்' குழுவில் சேர்த்தேன். உயர்நிலைப்பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகளது ஆச்சரியம் கலந்த உவகை அடுத்தடுத்து பறந்து வந்தன. அவற்றுக்குப் பதிலளிப்பதற்குள் இன்பச்சோர்வுக்கு உள்ளானேன்.

"அது குருவியின் கூடா?" என்ற கேள்வி கணவரிடமிருந்து வழக்கம்போல மிகத் தாமதமாக வந்தது.

'இதிலென்ன சந்தேகம்?'

"ரெண்டு மூணு நாளுக்கு முன்ன இப்படித்தான் அந்தச் செடியில் ஏதோ ஒட்டடைபோலத் தொங்கியதைப் பார்த்தேன். குப்பையோ என்னவோ மேலிருந்து பறந்து விழுந்திருக்குன்னு நினைச்சு எடுத்துப் போட்டுட்டனே."

"அடக்கடவுளே..!"

"அந்தக் குருவியோட எத்தனை நாள் உழைப்பு அதுன்னு தெரியலையே.. இப்படி மடத்தனமா பண்ணிட்டனே..! அவ்ளோ சின்னக்குருவி எவ்வளவு பாடுபட்டு அந்த 'மெட்டீரியலை' எல்லாம் எங்கிருந்தோ கொண்டு வந்து சேர்த்திருக்கும்.." என்றவரது குரலில் அபரிதமான ஆதங்கம் வழிந்தது.

"சரி.. சரி.. விடுங்க. அதான் திரும்பவும் வந்துடிச்சே" என்று அவரைச் சமாதானப் படுத்தினாலும் என் மனம் தாங்கலாகவே இருந்தது.

வீடுகளைச் சீரமைக்கும் பணி, சாலையில் இடைவிடாது உருளும் வாகனங்களின் ஒலி என்று சிங்கப்பூரில் காதுகளுக்குச் சோதனையாகும் வழக்கமானச் சத்தங்களிலிருந்து அன்றைய நாள் மாறுபட்டது. சாளரத்தின் வழியே துள்ளலோடு வரும் தேன்சிட்டுகளின் ஒலி சுவர்ணலதாவின் கீதத்தைப்போல என்னை ஈர்த்தது. வீட்டில் ஓயாமல் ஆட்சிபுரியும் வானொலியும் அன்று சந்தடி காட்டாது விடுப்பு எடுத்துக்கொண்டது. வேறு வேலை எதுவும் செய்ய ஓடவில்லை. சிநேகிதிகளிடமிருந்து அவ்வப்போது வந்த தொலைபேசி அழைப்புகள்கூட அன்றைக்குத் தொல்லையாகவே தெரிந்தது. வீட்டுக்குள்ளிருந்து, கதவின் பார்வைத் துவாரம் வழியே குருவிகளை வேவு பார்த்தேன். அவை சிறகடித்துச் செல்வது மட்டுமே தெரிய, நைசாகக் கதவைத் திறந்து வளரும் கூட்டை எட்டிப் பார்ப்பதுமாகவும் இருந்தேன்.

தேன்சிட்டுகளுக்கு உழைப்பாளிகள் என்றொரு பெயர் இருக்கிறதோ? இருந்தாலும் இருக்கும் என்பதைப்போல அலகில் நாரோ குச்சியோ ஏதோ ஒன்றைக் கவ்வியபடித் தொடர்ச்சியாகப் பறந்துகொண்டே இருந்தன. இவற்றைப் பார்த்தாலே நம் மனத்திலிருக்கும் சோம்பேறித்தனம் இருக்கிற இடம் தெரியாமப் போயிடும் போலிருக்கே! உற்சாகத்துடன் படபடவெனச் சிறகடித்துச் செல்லும் குருவியைப் பார்ப்பதற்கு வசீகரமாக இருந்தாலும், கதவைத் திறக்கும்போது அதைத் தொந்தரவு செய்கிறோமே என்னும் குற்றவுணர்வும் உள்ளத்தின் ஓரத்தில் எழுந்தது.

இனி சாயந்திரம்வரை கதவைத் திறக்கவே கூடாது என்ற உறுதியுடன் இருந்தேன். ஆர்வத்தின் நுனியிலிருந்த என்னைக் கண்டு நேரம் உதிர்வேனா என அடம்பிடித்தது. என் உற்சாகத்தைப் புரிந்துகொள்ளாக் கடிகாரத்தின்மீது எரிச்சலாகவும் வந்தது. நேரமாக ஆகக் குருவிகளைக் காணமுடியாத தாபம் என் நெஞ்சில் கூடிக்கொண்டே போனது!

பிடிவாதத்தில் இருந்த பகல் ஊர்ந்து கடக்க, கட்டுக்கடங்கா ஆவலோடு கதவைத் திறந்து கட்டுமானப் பணியைப் பார்த்தவள் அசந்து போய்விட்டேன்! கட்டடக்கலையின் வித்தகர்கள் எனத் தேன்சிட்டுகளுக்குப் பட்டமே கொடுக்கலாமோ? கொடியில் காய வைத்த புடவையைப்போலக் கூடு நீளமாகத் தொங்கியது! இவ்வளவு விரைவாக இந்தச் சின்னக் குருவிகளால் வேலை செய்ய முடியுமா? சிங்கப்பூரில் உருவாகும் கட்டடங்களைப்போலவே குருவியும் தன் குடிலை விரைந்து முடிக்கிறதோ! இப்படித் தொங்கும் இதை எப்படிக் கூடாக உருவாக்கும் என்னும் ஐயப்பாடும் கூடவே எழுந்தது!

மாலை பிள்ளைகள், கணவர் என வீட்டுக்குத் திரும்பியவர்களது முகத்திலும் புதிய உறவை கண்டதைப்போலக் குதூகலம் நிரம்பி வழிந்தது. உவகை எல்லாரிடமும் பரவியிருக்க, தேன்சிட்டு நாருடன் பறந்து வந்து கூட்டில் வைத்துவிட்டுப் போவதை மகனது கைத்தொலைபேசி மறைந்திருந்து கௌவிக்கொண்டது. அடுத்ததாகக் குடும்பத்தினரின் 'ப்ரோபைல்' படத்தில் தேன்சிட்டு மிடுக்கோடு அமர்ந்திருந்தது!

அன்றைய இரவு, ஆகாயத்திற்கு யார் மீது வன்மமோ? கோபக் கண்களால் அவ்வப்போது முறைத்துப் பார்ப்பதும் அதையடுத்துக் கடும் குரலால் பூமியை அதிர வைப்பதுமாக இருந்தது. அதைக் கண்டு நான் மட்டும் சும்மா இருப்பேனா என்பதைப்போல ஆணவத்தின் உச்சியில் நின்றுகொண்டு காற்றும் தன் பங்குக்கு ஆட்டம் போட்டது. வீராவேசத்தோடு தங்கள் இருப்பை உணர்த்தி ஆர்ப்பரித்திருந்த இருவரும், தொடர்ந்து அடித்துப் பெய்த மழையில் பரிதாபமாய் நமர்த்துப் போயினர்.

கனலி அவன் அன்றைக்குத் தாமதமாக வரலாமென யோசித்துக் கொண்டிருந்தானோ என்னவோ? மலைப்பிரதேசத்தில் இருப்பதைப்போலக் குளிர் போர்வையை அகற்ற வேண்டாமென்றது. மற்ற சமயமென்றால் மனம் அந்த விடியலை இன்னும் நீட்டிக்கச் சொல்லி ஏங்கியிருக்கும். ஆனால் அன்றோ குடிலைப்பற்றிய எண்ணம் படுக்கையிலிருந்த என்னைத் துரத்தியது.

கதவைத் திறந்ததும் செடியின்மீது விழுந்த கண்கள், மின்னலால் தாக்குண்டதைப்போலத் துடித்தன! எங்கே போனது அந்தக் கூடு? செடியின் வெறுமையைத் தாளாது உள்ளத்தில் சூன்யம் கவிந்தது. 'மழை பெய்தால் உடனே வீட்டுக்குள்ளிருக்கும் பிள்ளைகளுக்குப் போர்வையைப் போர்த்தும் நீ, அந்தச் சின்ன உயிரைப்பற்றி எப்படி மறந்தாய்?' என மனம் சூறைக்காற்றாய்ச் சாடியது.

ஆண்டுகளைத் தின்ற மதர்ப்பில் நின்றிருந்த மரங்களை எல்லாம் விட்டுவிட்டு, ஒரு சின்னச்செடியில் தன் தலைமுறையை உருவாக்க நினைத்த குருவியின் எண்ணம் குலைந்ததை எண்ணி உள்ளம் குமுறியது. கொட்டித் தீர்த்த மழையில் குருவிகள் எங்கே சென்றிருக்கும்? ஆங்காரமாய் வீசியக் காற்றில் காணாமல் போய்விட்ட இருப்பிடத்தைக் கண்டு அவை எப்படி நொந்து போயிருக்கும்? இயற்கை ஆடிய தாண்டவத்தில் இடமிழந்த பறவைகளைத் தேடினேன். மருண்டுபோன குருவிகளைக் காண முடியாத ஏமாற்றம் என்னைச் சூழ்ந்தது.

கடவுளே..! இம்முறையும் இப்படியானதே என்று நினைக்க, தாங்கமுடியாத ஆற்றாமை பிறந்தது. காற்றுக்குப் பலியான குருவியின் உழைப்பு காரிடாரில் குச்சிகளும், பஞ்சுமாய்ச் சிதறிக் கிடந்தன. ஒரு நப்பாசையில் அவற்றையெல்லாம் சேர்த்துக் கீழே விழாதபடிக் கிளைகளுக்கிடையில் வைத்தேன். கொஞ்சநேரம் கழித்துப் பார்த்தால் அங்கே ஒரு நாரைக்கூடக் காணோம்! தேன்சிட்டின் அசாத்திய கோபத்தைக் கண்டு ஆடிப்போனேன்!

வார இறுதியான அன்றைய பொழுது புலர்ந்தும், வீட்டில் உள்ளவர்களது மனம் இருளைவிட்டு விலகாது இருந்தது. முன்னதாகக் கூட்டிற்கு ஏற்பாடு செய்தே இருந்திருக்க வேண்டுமென்ற பேச்சு வெவ்வேறு வகைகளில் கசிந்து கொண்டிருந்தது. எவ்வளவு புலம்பியும் தேங்கியிருந்த வருத்தம் கிஞ்சித்தும் குறையாது திண்மையாகவே நின்றது!

அடுத்து வந்த வாரம், "இன்னைக்குக் குருவி வந்ததாம்மா?" என்னும் தளரா நம்பிக்கையுடனான பிள்ளைகளின் கேள்வியிலேயே போனது. தேன்சிட்டுகள் வராத தாழ்வாரம்,

கச்சேரியில்லாத அரங்கத்தைப்போலச் சோபையிழந்தே காணப்பட்டது. அவை பற்றிய எதிர்பார்ப்பு உள்ளூர ஒவ்வொரு நாளும் துளிர்ப்பதும் வாடுவதுமான நிலையிலேயே நானும் இருந்தேன். எப்போதாவது கேட்கும் 'கீச்.. வீச்..' ஆவல் பிரவகிக்க வீட்டுக்கு வெளியே வந்து எட்டிப்பார்க்க வைத்து ஏமாற்றியது.

இந்நிலையில் கூட்டைப்பற்றிய ஆதங்கம் ஏதுமின்றி மதாளித்து வளர்ந்திருக்கும் செடியின் கிளைகளைக் கழித்துவிடவும் மனம் இடங்கொடுக்கவில்லை. ஒன்றிரண்டு இலைகள் உதிர்ந்தாலும் கவனமாக அகற்றினேன். பசுமை கொஞ்சும் சிங்கையில் அதைக் கண்டு காய்பவர்கள் இருப்பதும் விந்தைதான்!

பத்து நாட்களுக்குப் பிறகு அச்செடியின் அதே கிளையில் திரும்பவும் தேன்சிட்டின் முயற்சியைக் கண்டு என் உள்ளத்தில் பூ பூத்தது. இம்முறையாவது அந்தக் காரியம் முழுமையடைய வேண்டுமே என வீட்டில் அதே பேச்சாகவே இருந்தது. கூடு கட்டிக்கொண்டிருக்கும் செடியில் உயரத்திற்காக வைக்கப்பட்டிருந்த 'ஸ்டாண்டை' அகற்றினோம். வெளிக் காற்றினால் பாதிக்கப்படாதவாறு மற்ற செடிகளைக்கொண்டு அரண் அமைக்க, மனம் திருப்தியானது. இம்முறை இரண்டே நாட்களில் கூடு, அழகாய் மடித்து வைத்துத் தைத்த சிறிய பையைப்போலக் காட்சியளித்தது. ஒருநாள் காலையில் கதவைத் திறந்தபோது, ஒரு தேன்சிட்டுக் கூட்டிலிருந்து வட்டமிட்டபடிச் சென்றது! புதிதாய் எங்களது வீட்டிற்குக் குடிவந்தபோதுகூட இந்தளவு மகிழ்ச்சியை நான் அனுபவித்தேனா என்பது சந்தேகமே! ஏதோ பெரிதாக ஒன்றைச் சாதித்த கர்வம் பிள்ளைகளின் முகத்தில் துள்ளியது.

"என்னதான் இந்தச் செடி காரிடாரோட மூலையில் இருந்தாலும் இது மற்றவங்க நடக்கிற இடமாயிருக்கே. அதற்கு ஏதாவது செய்யணும்" அன்று வேலைக்குப் போகும் முன்பாகக் கணவர் கூறினார். அதுவும் சரிதானே!

'இங்கே குருவியின் கூடு உள்ளது. யாரும் தொடாதீர்கள்' என எழுதி வைக்கலாமா? வேண்டாம்... ஆர்வ மிகுதியில் அக்கம்பக்கத்திலிருக்கும் சிறுவர்கள் ஏதாகிலும் செய்துவிட்டால்? 'தயவுசெய்து யாரும் செடிகளைத் தொட வேண்டாம்' என்று ஆங்கிலத்தில் எழுதினேன். கூட்டுக்கு அருகிலிருக்கும் தூணில் இதை ஒட்டிவிட்டால் போதும். ஒருவேளை இதைக் கண்டு அவை அஞ்சுமோ?

'வேறு வழியில்லை, உங்களது பாதுகாப்புக்காகத்தான், என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் தேன்சிட்டுகளே' என்று கலவரப்பட்ட மனத்துக்குச் சமாதானமும் சொன்னேன். பேறுகாலத்தில் இருந்தபோதுகூட இப்படி அடிமேலடி வைத்து நடந்திருப்பேனா என்று தெரியலை!

குருவியின் கூடு இருந்த கிளை, குழந்தையைப் பறிகொடுத்த தொட்டிலைப்போல ஆடியது. தகர முறத்தின் உராய்வுடன் படிக்கட்டுகளில் இறங்கும் துப்புரவுப் பணியாளரின் காலடியோசை என் காதுகளுக்கு முரசு முழக்கத்தைப்போலக் கேட்டது. இதயத்தில் ஏற்பட்ட அதிர்வால் வருத்தத்தின் நெடியைப் பாதத்தின் நுனிவரை உணர்ந்தேன்!

'கடவுளே.. என்ன இது? ஏனிந்தக் கொடுமை? ஒரு சின்ன உயிரைப்போட்டு ஏன் இப்படிச் சித்திரவதைப்படுத்துகிறாய்?'

"என்னாச்சு ஆன்ட்டி?" என்று கேட்டான் எதிர்வீட்டு ஜுன்காய்.

என்னவென்று சொல்வேன்? வாயைத் திறந்தால், உன்னைப் பேச விட்டுவிடுவேனா என்பதைப்போல அழுகை முட்டிக்கொண்டு வந்தது! அன்னியோன்யமான சுற்றத்தினரைக் கொண்டிருப்பதுகூடச் சில சமயத்தில் தர்மசங்கடம்தான்! கண்களைத் துடைத்துக்கொண்டு தேன்சிட்டின் கதையைச் சுருக்கமாகச் சொன்னேன்.

"வருத்தப்படாதீங்க ஆன்ட்டி. அந்தக் குருவி நிச்சயம் திரும்பி வந்து இங்கேயே கூட்டைக் கட்டும்" என்றான்.

'அத்தியாவசியத் தேவை இங்கே அடிபட்டுப் போயிருக்க அந்தக் குருவிகளின் நிலை என்னாகும்?' நினைக்க நினைக்க நோவைத் தாளாத மனம் அல்லாடியது.

'பள்ளி முடிந்து வரும் பிள்ளைகளுக்கு என்னவென்று சொல்வேன்?' கூட்டை இழந்த வலியுடன், இதைப் பிள்ளைகள் எப்படித் தாங்கிக்கொள்வர் என்ற வருத்தமும் விஞ்சியது. என்னைக் கொஞ்சம் கவனி என வயிறு கெஞ்சியும், மனம் அதை நிராகரித்தது. தொலைக்காட்சியில் வழக்கமாகப் பார்க்கும் ஓரிரு சீரியலும் அன்று துச்சமாகின!

முதலில் பள்ளி முடிந்து வந்த மகன் அழைப்பு மணியை அலறவிட்டான். "கூட்டுக்கு என்னாச்சு?" காயம் பட்டதைப்போல அவனது விழிகள் செம்மையைப் பூசிக்கொண்டிருந்தன.

"சுத்தம் பண்றவங்க எடுத்துப் போட்டுட்டாங்கன்னு நினைக்கிறேன்பா."

"அவங்க எப்படி அதைக் கலைக்கலாம்? நீங்க சும்மாவா இருந்தீங்க?"

"நான் பார்க்கலையே.. வேகமா காத்தடிச்சி கீழே விழுந்திடுச்சோ என்னவோ அதனால பெருக்கிட்டும் போயிருக்கலாம்" தேகம் முழுக்கக் கோபத்தின் கூடாரமாய்த் துடித்துக்கொண்டிருப்பவன் எப்படியாவது சமாதானமானால் போதுமே!

"எப்படி அது கீழே விழும்? வேணும்னுதான் பிச்சிப் போட்டிருக்கணும். முட்டாள் கிளீனர்" என்றான். பிறகு வந்த மகளும் அதையே சொல்ல, இருவரது வார்த்தைகளாலும் துப்புரவாளர் காரசாரமாக வறுபட்டார்.

"அது நம்ம தப்புதான். கொஞ்சம் முன்னாடியே நாம அதுக்கான ஏற்பாட்டில் இறங்கியிருக்கணும். அந்தக் குருவிங்க முதல்ல கட்டிய கூட்டை உங்கப்பா கூடுன்னு தெரிஞ்சா பிச்சுப் போட்டார்? அதைப்போலத்தான் அந்தக் கிளீனரும் நினைச்சிருக்கணும்" என்றேன்.

என்ன சொல்லியும் பிள்ளைகளிடம் என் சமாதானங்கள் எதுவும் எடுபடவுமில்லை. சரி.. புலம்பியாவது அவங்க ஓயட்டும் எனக் கண்டுகொள்ளாது விட்டேன். 'சொன்னேனே கேட்டாயா?' என்பதைப்போல உறுத்து விழித்த கணவரது பார்வையில் குற்றவாளியானேன். உலர்ந்த காற்றின் உபயத்தால் வீடு தன்னுடைய உயிர்ப்பை இழந்ததைப்போலானது. அன்றிரவு எதிர்வீட்டினர் அழைத்துக் குருவியைப்பற்றி விசாரித்தது, ஊமைக்காயத்திற்கு ஒத்தடத்தைத் தந்ததைப்போல ஒருவகையில ஆறுதலாகவும் இருந்தது.

இத்தனை முறை தோல்வியைத் தழுவிய குருவிகள் திரும்பவும் இங்கே வருவதற்கான சாத்தியம் இல்லை. முற்றிய கிளைகளை வெட்டினால்தான் செடி சிலிர்ப்புடன் துளிர்க்கும். சரி, இன்னும் ஒருநாள் பார்ப்போம் என எண்ணி நாட்களும் மந்தகதியில் நகர்ந்தன. என் எண்ணம்போலவே காத்திருக்கச் சொல்லும் கணவர், பிள்ளைகளது வார்த்தைக்கு

இனியும் அர்த்தமில்லை என்ற முடிவோடு வெளியே வந்தேன். வாயில் நாரும் கண்களில் நம்பிக்கையுமாகச் செடியில் ஒரு தேன்சிட்டு அமர்ந்திருந்தது! காரிடாரின் கம்பியில் உட்கார்ந்திருந்த அதன் துணையின் பார்வை என்னைச் சுட்டது!

வசந்தத்தின் அறிகுறியைக் கண்டவள் மகிழ்ச்சிக்கான அதிபதியாக ஆனதைப்போல உணர்ந்தேன். 'இப்போதே இதைக் கணவருக்கும், பிள்ளைகளுக்கும் சொல்லலாமா? வேண்டாம்.. நேரில் வந்து பார்த்தால் அவர்கள் இன்னும் மகிழ்ச்சியடைவார்கள்!'

ததும்பும் உவகையை உடனே பகிர முடியாத நிலையில் துடிப்போடு காத்திருந்தேன். மாலை நேரமாகும் தருணம். சந்தடிக் காட்டாது கதவைத் திறந்து பார்த்தேன். ஆளும்பேருமாகக் கூட்டின் நிர்மாணப்பணி களைகட்டியிருந்தது.

'என்னதான் நவீனத் தொழில்நுட்பம் இருந்து என்ன பயன்? எங்களை மிஞ்ச உங்களால் முடியுமா?' என்று கர்வத்தோடு அவை கேள்வி எழுப்புவதைப்போலத் தோன்றியது. அதன் வளர்ச்சியைக் கண்டு மனத்துள் பூரித்தவள், இந்த முறை உங்களைக் கைவிடமாட்டேன் என உள்ளுக்குள் வாக்களித்தேன். அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்ததைப்போல இன்ப நினைவுகள் என்னை ஆக்கிரமித்தன. பறவைகள் குழந்தைகளோடு வாழ்வது சரணாலயத்தைப்போல என் உள்ளத்தில் படமாய் விரிந்தது.

"கீச்.. கீச்.." என்னும் ஒலி திடீரென அதிகமாகக் கேட்கக் கலவரத்தோடு கதவின் பார்வைத் துவாரம் வழியே பார்த்தேன். எங்கள் வீட்டை ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டே சமீரா ஆன்ட்டி வெகு வேகமாகக் கைகளை வீசியபடிக் கடந்து போனார். ஏதோ தப்பாகத் தோன்ற சட்டென வெளியே வந்தேன். என்னைப் பார்த்துப் பழிப்பது மாதிரிக் கூடு பிய்க்கப்பட்டிருக்க, அதன் மிச்சம் காரிடாரில் பந்தைப்போல உருண்டோடியது. ●

**▶ கா.ந.கல்யாணசுந்தரம்**

வெளிச்சக் கீற்றுக்குள்
சிறைபட்டது
காலைநேரத்து கதிரவன்

▶

பாதைகளை மறக்காத
பயணிகள்
கூடு திரும்பும் பறவைகள்

▶

ஒரு புல்லாங்குழலின்
நினைவலைகள்
மூங்கில் காட்டுக்குள்

▶

கொட்டும் அருவிக்குள்
முகம் புதைக்கின்றன
மேகங்கள்

▶


முற்றுப்பெறாத
கவிதை இலக்கியம்
இயற்கையின் பாடங்கள்

▶

படிகள் இல்லாத மலை
மனிதன் ஏற முடியவில்லை
தழைத்திருக்கும் மரங்கள்

▶

இலைகளை உதிர்த்தாலும்
வசந்தத்தை வரவேற்றன
மரங்களின் கிளைகள். ●




## யாத்திரை - ஆர். என். ஜோ.டி குருஸின் நாவல்

*தனது பாட்டி பிரகாசிக்கு சமர்பித்து, செப் 2021 ஆண்டு வெளியான நாவல் ஆர். என். ஜோ.டி குருஸின் யாத்திரை. புத்தகத்தை வாசித்து முடிக்கையில் இது நாவலா என்ற குழப்பத்தில் மறுபடியும் முதல் பக்கம் போய் பார்த்தேன்.*

*இது எழுத்தாளரின் ஆன்ம கத்கதம், விலாபம், குற்ற உணர்வு, குறை காணுதல்! கதாப்பாத்திரம் இல்லை, கதைப்பின்னல் இல்லை, நாவலுக்கான ஒரு தொடர் பின்னல் இல்லை. ஆனால் கதாசிரியர் தன் மனப் போங்கை, மனக்குமுறலை, தம் சமூக அறச்சீற்றத்தை சொல்லிக் கொண்டே போகிறார் தன் பல பல வயதினில்.*

*கல்லூரி பருவம் முடியும் வரை கத்தோலிக்கா பாதிரியார்கள் மேலுள்ள கட்டுக்கடங்கா கோபம். அதற்கான வலுவான காரணம் கதாப்பத்திரங்கள் வழியாக சொல்லி இருக்க வேண்டும். கதை சொல்லி எல்லா இடத்திலும் விதிப்பவரும் அவதானிப்பவரும், கோபம் கொள்கிறவருமாக இருக்கிறார். ஒரு பக்குவமற்ற சிறுவனின் நோவாகவே இருந்தது பல குற்றச் சாட்டுகளும். பாதிரி கதாப்பாத்திரங்கள் இவ்வாற்றாக செயலாற்ற காரணம் என்ன என்று தெளிவில்லை, தெரிவிக்கவும் இல்லை வாசகர்களை. ஒரு கட்டத்தில் சீர் திருத்த பாதிரிகள் கல்யாணம் செய்து கொள்கின்றனர், இவர்கள் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்பது வரை பாகுபடுத்தி குற்றமாக சொல்லப்படுகின்றது. காதாசிரியரின் கடந்த நாவல் கொற்கையிலும் கத்தோலிக்க பாதிரியார்களை பற்றி பல குற்றங்கள் சொல்லப்பட்டிருந்தது. அதே குற்றம் கூறுதல் இங்கும். இந்த தொகுப்பில் கதை ஆசிரியர் இடைப்பட்ட சில காலம் அல்லேலூயா*

*பக்தி மார்க்கத்தில் நாட்டம் கொள்வதும் பின்பு தாய் மதம் மேலுள்ள விருப்பவும் கதையின் ஊடே சொல்லப்பட்டு உள்ளது.*

*கத்தோலிக்க பாதிரியார்கள் ஒரு பெரும் சமூகத்தை பிரதினித்துவ படுத்தும் மதத்தலைமைகள். அவர்களை ஆன்மீகம் சார்ந்த கட்டமைப்பு சார்ந்தா அல்லது அறம் சார்ந்தா கதை ஆசிரியர் முரண்படுகிறார் என்பதை வாசகர்கர்ளிடம் சேர்த்து இருக்க வேண்டும். போகிற போக்கில் மனதில் தோன்றினதை எல்லாம் விதறி விட்டு செல்வது சமூகத்தை ஆளுமை செய்யும் எழுத்தாளர்கள் அறமா என்ற கேள்வி எழாது இல்லை.*

*ஒரு வகையான பதட்டவும், ஒட்டாத ஓட்டமாக இருந்தது கதை சொல்லும் பாணி. பத்து புத்தகத்தில் பகிர வேண்டிய கருத்துக்களை ஒரே புத்தகத்தில் நிரப்பி வழியச் செய்தது மாதிரி இருந்தது. கதை சொல்லி மட்டும் எல்லா இடத்திலும் சிந்தித்து கொண்டு இருந்தார், பேசிக்கொண்டு இருந்தார், மனஸ்தாபத்தில், உளச் சிக்கலில் இருந்தார்.*

*நீ ஆசைப்படாத எழுத்து ஒன்றில் தான் பதற்றமில்லாது இருந்தது. ஆனால் இப்புத்தகத்தில் பெரும் பதற்றம். எல்லாம் சொல்லியே தீர வேண்டும் என்ற நிர்பந்தம் வழிந்தது எல்லா பக்கங்களிலும்.*

*பைபிள் வருகிறது, மோசை வருகிறார், தச்சன் மகன் யேசு பல இடங்களில். பிரான்ஸ் அச்சீசி, போன்ற புனிதர்கள் அத்துடன் கதை சொல்லியின் அக்கா, பெரியவர், இளம் கத்தோலிக்க பாதிரியார். சடங்குகளை முன்னிறுத்தி மெய்யான யேசுவை விட்டு, புனிதர்கள் வணக்கம் செய்கிறதை கேள்வி எழுப்பும் கதை சொல்லிக்கு இதன் காரணம் தெரியாதா?*

*கதை சொல்லி விமர்சிக்கும் கிறிஸ்தவ கத்தோலிக்க பாதிரிகள் இந்திய குடும்பங்களில் இருந்து போய் பணியாற்றுகிறவர்கள் தானே! அவர்கள் அப்படியான மன நிலைக்கு மாற்றப்படும் சமூக சூழல் என்ன, அவர்களை உருவாக்கும் கட்டமைப்பு என்ன என்பதை விடுத்து காரிய காரணங்கள் சொல்லாது ஒரு குழுவின் மேல் சேறை அள்ளி வீசும் மனப் போங்கு தான் என்ன? பாதிரிகளும் இந்த சமூக அமைப்பின் நீட்சிகள் தான். கதை சொல்லியோ வெறும் வார்த்தை மனித தாக்குதலில் கதையை நகத்துகிறார்.*

*சில இடங்களில் கதை சொல்லி; இரவில் குடித்து விட்டு ராப்பாடும் சன்னியாசியை தனது ஆன்மீக குருவாக ஏற்கும் மன நிலையில் உள்ளார்.*

*கதை காட்டாறு வெள்ளம் மாதிரி ஓடுகிறது. அந்த ஓட்டத்தின் வேகத்தில் வாசகர்கள் ஓட வேண்டும் என்றால் கதை சொல்லியின் முன்னைய நாவல்கள், அவர் குறிப்பிட்ட கால அரசியல் எல்லாம் புரிந்து கொள்ளுதல் அவசியம். ஒபீர் துறைமுகம் பற்றி சொல்லியவர், ஒரு தகவலாக பகிர்கிறாரே தவிற ஆழமான உரையாடல்கள் இல்லை.*

*முதுகலையில் படிக்கும் போது சந்தித்த விதவையின் கதை ஊடாக தன்னை நியாஸ்தராக முன் நிறுத்துகிறார். அந்த காதல் நினைவுகள் அவர் சகோதரி மற்றும் பெற்றோர் தடை இடுவதுடன் முடிந்தது.*

*ஊரில் வந்து சேர்ந்த புது இளம் பாதிரியை பற்றி ஒரு கதை! பாதிரியிடம் வந்து சண்டை யிடும் வெளியூர் பெண்கள் கதை; கடற்கரை கிறிஸ்தவ மக்கள் அற வாழ்க்கையும், மாண்பும் அப்படியா கெட்டு சீரழிது போய் விட்டது?அதில் பாதிரியை குறை சொல்லும் நோக்கத்தில்*

தன் இனப் பெண்களின் கொச்சையான உருவம் காலாகாலத்திற்கு பதியப்படும் அவலம்.

இத்தனை குற்றம் குறைகளை போகிற போக்கில் எழுதி விட்டு, பக்கம் பக்கமாக கிறிஸ்தவ ஜெபங்களும் எழுதப்பட்டுள்ளது. கத்தோலிக்கத்திலுள்ள சடங்குகளை எதிர்க்கும் கதை சொல்லிக்கு, தாய் மதத்தில் இருக்கும் மமதையில் அங்குள்ள வணக்கங்கள் எல்லாமே சரியாக மேன்மை பொருந்தியதாக தெரிகிறது.

போகிற போக்கில் அல்லேலூயா கிறித்தவம் செய்யும் ஆட் சேர்ப்பையும் பிஜேபி ஆட் சேர்ப்பு கொள்கையையும் பொருத்தி பார்ப்பதாக தெரிகிறது. அப்படி 12 வது அத்தியாயம் வரை சொல்லிய அத்தனை வசவுகளுக்கும் பிராச்சித்தம் என்பது போல 13 வது அத்தியாயத்தில் லயோலா கல்லூரி அதிபரை புகழ்ந்து, முடித்து உள்ளார் கதை ஆசிரியர்.

கொற்கை புத்தகத்தில் பாதியார்களை பற்றி எதிர்மறையாக எழுதியதில் வருத்தம் இல்லையா என்று லயோலா கல்லூரி பாதியாரிடம், வினவி தனது ஆன்ம திருப்பதிக்குள் நகர்கிறார் கதை சொல்லி.13 ஆம் அத்தியாயத்தில் இருந்து அவன் என்று வளர்ந்த வந்த பிராதன கதாப்பாத்திரம் அவராக மாறுகிறது. தனது மக்களின் வாழ்க்கையை எழுதுவது தனது சமுதாய பணி என்று பெருமைப்பட்டும் கொள்கிறது. கடற்கரை மக்களின் வாழ்க்கையிலுள்ள சுவாரசியம் எதுவும் தெரிந்து கொள்ள இயலாது. கதை சொல்லி கடற்கரை மக்களுக்கு மெசிகாவாக பிறந்து இனி அம்மக்களை உயிர்க்க செய்வது மாதிரியான தொனியில் தான் கதை நகர்கிறது.

பின் எழுத்தாளரின் கோபம், தனது முன்னைய புத்தகங்களை பற்றி விமர்சித்தவர்கள் பக்கம் திரும்புகிறது. அடுத்த அத்தியாயத்தில் கதை சொல்லியின் கோபம் தன் எழுத்தை விமர்சித்த நண்பன் மேல் பாய்கிறது. 1 7 வது அத்தியாயம் முதல் கதை குடும்பம், தனது பெற்றோர் மனைவி குழந்தைகள் என செல்கிறது.

குழந்தைகளை கல்விச் சாலைகளில் சேர்வதற்காக கத்தோலிக்க முறைப்படி ஞானஸ்தானம் கொடுத்ததாக சொல்கிறார் கதை சொல்லி. ஒரு பக்கம் கத்தோலிக்க தலைமையை கத்தோலிக்கத்தை வெறுப்பதும் தன் குழந்தைகள் கல்விக்காக கத்தோலிக்கத்தை சார்ந்து இருப்பதின் தார்மீகம் தெரியவில்லை. இதில் தன் பிழைப்புவாதத்தை தான் முன் வைக்கிறார். அடுத்து மகன் பற்றி கதை செல்கிறது. தனிமை விரும்பியான கதை ஆசிரியர் குடில் வாழ்க்கைக்குள் நுழைகிறார்.

அதன் பின் நண்பனுக்கும் தனக்குமான உறவு, நண்பன் தம்பி தற்கொலை அதை பற்றிய கருத்து, அடுத்து தாயின் பிரிவு, தாய்க்கும் தகப்பனுக்கும் இருந்த உறவு, தாயின் அடக்கத்திற்கு வராத தம்பியை பற்றி. இப்படியாக முழுமையை நோக்கிய முற்று பெறாத சிந்தனையின் தொகுப்பே இப்புத்தகம்.

மறுபடியும் திரும்பி பார்த்தேன் நாவலா? ஆம் நாவல் என்று தான் எழுதி உள்ளது. சுயசரிதம் என்று எழுதியிருந்தால் ஒரு மனிதரின் மன விசாரணையை வாசித்தோம், ஒரு ஆன்மாவின் கேவலை கேட்டோம் என ஆறுதல் கொண்டு இருக்கலாம்.

யாத்திரை என்பதை விட பிரார்த்தனை என்பதே பொருத்தமாக இருந்து இருக்கும். எழுதியவர் தான் எழுதியது நாவல் என்கிற போது வாசிப்பவர் ஏற்காது இருக்க இயலுமா? யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல் சாகித்ய அக்காதமி விருது பெற்ற ஒரு எழுத்தாளரின் சற்று சறுக்கலான நாவலாகவே இதை காண்கிறேன். ●



# செம்மணிக்குப் போன வள்ளியாச்சி

*பறவைகள் இரை தேடப் போவதற்கு முன்னமே தன்ர கடகங்கள அடுக்கி அதுக்குள்ள சின்னஞ் சின்னனா இழைச்சுப் போட்ட நீத்துப் பெட்டிகளையும் போட்டுத் தலையில தூக்கி வச்சாள். சுத்தின ஓலைப்பாய்க் கட்டையும் எடுத்து இடுப்பில சுமந்து கொண்டாள் வள்ளியாச்சி. பொட்டுப் பொட்டாத் தெரியுது மின்மினிப் பூச்சிபோல நிரைச்சியா அரிக்கன் லாம்பு வெளிச்சங்கள். வாசல்தோறும் இன்னமும் எரிஞ்சு கொண்டிருக்கும் ஊரது. அந்த ஊருக்கு வந்து சேர்ந்த சனத்தின்ர பயம் பாம்பு, பூச்சிகள் தீண்டிப் போடுமெண்ட பயத்தில லாம்புகள நல்லா வெளிச்சம் குறைச்சு சிமிள்ள விடிய விடிய எரிய விட்டிருக்குதுகள். கிடைச்ச நிலத்திலயும் உடைஞ்சுபோன திண்ணைகளிலையும் படுத்து உறங்குதுகள் கண்கள முழிச்சபடி. வள்ளியாச்சின்ர கொட்டில வறுமை பாய்விரிச்சுப் படுத்திருக்குது. யாம்போத்தல் விளக்குதான், பாதி தண்ணியும் மீதி எண்ணையுமா கம்பியில நெருப்பு ஊஞ்சலாடுது. பைத்தியக்காரி பேத்தி சோதினைக்குப் படிக்க வேணுமெண்டு ஏத்திவைச்சிட்டு படுத்திட்டா. விடியக்காலம படிச்ச இடத்திலயே பேத்தி சரிஞ்சிட்டா. புள்ள சாந்தி எழும்பண விடிஞ்சுபோச்சு! சோதினைக்குப் போக வேணுமெல்லே? நல்லாச் சோதினை எழுதோணுமெல்லே! தட்டி எழுப்பி விட்டா. இருட்டை விழுங்கிக்கொண்டு கிழக்கும் வெளிக்குது. வள்ளியாச்சி கடகத்தோட தலையில*

*சுமையும் மனசில கவலையுமா ரெண்டு பாரத்தையும் சுமந்து கொண்டு ஆலடிச் சந்தைய நெருங்குறாள். விடியல் காலம சந்தை ஆரவாரம் கொட்டிக் கிடந்தாலும் அங்கின நிக்கிற மரங்களுக்குக் கீழ மறஞ்சுதான் மீனெண்டாலும் மரக்கறியெண்டாலும் வியாபாரம் நடக்குது. உந்த துலைவான் புக்காராவின்ர பயத்தில. வள்ளியாச்சி தானும் புதுசா இடம்பெயர்ந்து வந்த சனத்துக்குத் தன்ர வாடிக்கையான இடத்தக் குடுத்திட்டு ஒரு ஓரமா கடகத்த இறக்கி வைச்சுத் தான் இழைச்ச நீத்துப்பெட்டியும் பாயும் கடகத்தையும் இடியப்பத் தட்டுகளையும் பின்னின பாய்க்கட்டையும் பரத்தி வைச்சுத் தொண்ட கிழியக் கூவி விக்கிறா. நீத்துப்பெட்டி பதினைஞ்சு கடகம் அம்பது ரூவா எழுவத்தைஞ்சு ரூவா. அங்கின சத்தம் போட்டு ஒண்டிரண்டு கடகத்தையும் அஞ்சாறு நீத்துப்பெட்டிகளையும் வித்துப்போட்டா வள்ளியாச்சி. இடம்பேர்ந்து வந்திருந்த சனம் படுக்கிறதுக்கு சமைக்கிறதுக்கு சாமான் சக்கட்டை எடுத்துக் கொண்டு கட்டின துணி மணியும் கையில கிடைச்ச பையளையும் அதுக்குள்ள போடுறதுக்கு துணியளையு அடஞ்சு வந்ததால சமைக்கிறதுக்கு நீத்துப் பெட்டியும் படுக்கிறதுக்கு பாயும் சிலசனம் வாங்குதுகள். சூரியன் உச்சிய பிளக்கிறமாரி வெயிலடிச்சாலும் அங்கின வயலுக்கிள்ளால் வந்த காத்து வீடுகள்ள பட்டு அரைகுறையா வள்ளியாச்சியின் நரச்ச முடிய லேசா அசைக்கிறமாரி விழுகிறதால் வெக்கை தெரியாமல் போகுது. காத்துப் பட்ட சுகத்தில கிழவி பெருமூச்சு விட்டுக்கொண்டு மடியில முடிஞ்ச காச எடுத்து எண்ணிப் பாத்திட்டு பேத்திக்கு கட்ட வேண்டிய காசு காணாதெண்டு தன்ர மனசுக்குள்ள சொல்லிப்போட்டுத் தன்னையே தேத்திக்கிறா. சரி சரி நாளைக்குப் பாப்போம் என்றபடி கிடந்த மிச்ச பாயையும் நீத்துப் பெட்டிகளையும் சுத்திக் கட்டிக்கொள்கிறாள் தலையில் சுமந்து கொள்ள.*

*ஆச்சீச்சீ..வள்ளியாச்சீ..*

*மிகவும் அவசரமான குரல்!*

*அந்தக் குரல் மிகவும் பழக்கப்பட்ட குரல். சுந்தரத்தின் குரல். தடக்கி விழாத குறையா தலையில வெயில் படாமக் கட்டிக் கிடந்த துண்டைக் காற்றில் பறக்கும்படி கையில் சுழற்றி வீசிக்கொண்டு முழங்காலளவு சேத்தில கால் புதைஞ்சு சேட்டுப் போடாத வெற்றுடம்பில சேறு பிரண்டபடி மடிச்சுக் கட்டின சாறம் துடைக்குமேல பறக்க வயலுக்குள்ளால தவண்டு புரண்டு ஓடிவாறான். அவன் யாருமில்ல, **1992** இல தாவடியில புக்காரா குண்டு போட்டதில வீட்டுக்குள்ள படுத்திருந்தவன தூக்கியெறிஞ்சு கிணத்துக்குள்ள விழுந்து மூடிவிட மூன்று நாட்கள் கழிந்தபின் தண்ணியில்லாமல் கிடந்த கிணற்றுக்குள் இடையில குறுக்க கிடந்த கப்பில தொங்கினபடி கிடந்து, ஆளக் காணவில்லை என்று கிணற்றுக்குள் இறங்கித் தேடும்போது மூச்சில்லாமல் கிடக்க பெரியாஸ்பத்திரியில வைத்தியம் பாத்து உசிரு மட்டும் வந்திருச்சு. மனுசன்ர நினைவெல்லாம் திரும்பேல்ல. மூன்று பிள்ளையளப் பறிகுடுத்த கவலையில புத்தி பேதலிச்சுப் போச்சு. ஆனால் மனிதர்களுக்கான சுபாவம் மட்டும் போகேல்ல. அவன்தான் சனத்தோட சனம் இடம்பெயர்ந்து வந்து வள்ளியாச்சியின்ர காணிக்குள் ஒரு மூலையில கொட்டில் போட்டு அங்ககிடக்கிற சின்னச் சின்ன வேலையளைச் செய்து கொண்டு காலத்தைக் கழிக்கிறான் சுந்தரம். கால்ல ஒட்டிய சேறு அவனுக்கு முன்னால பறக்க ஓடியாறான். எணேய்.. எணேய்.. வள்ளியாச்சி சோதின எழுதப்போன பள்ளிக்கூடப் பிள்ளையள வாற வழியில கிடக்கிற அவங்கட சென்றியில மறிச்சு விசாரிக்கவெண்டு பொலிஸ் ஸ்ரேசனுக்கு ஏத்திக்கொண்டு போறாங்களண என்ர கண்ணுக்கு முன்னால. அங்க நிண்ட சனமெல்லாம் ஓடிவந்து தடுத்தார்கள் ஏனெண்டும் சொல்லாம விசாரிக்கவெண்டு ஐஞ்சாறு பெடியளையும் சாந்தியோட படிக்கிற வகுப்புப் பிள்ளையளையும் ஏத்திக்கொண்டு*

போறாங்கள். என்னத்த செய்யப் போறாங்களோ தெரியேல்லயண. சந்தையில் பரபரப்பாக வியாபாரம் செய்துகொண்டிருந்த வள்ளியாச்சியின் தலையில இடி வந்து விழுந்தது.

என்னடா சொல்லுறாய். சின்னப் பிள்ளையள் குண்டு வைச்சுப் போட்டாங்களோடா. சோதினைக்குத் தானே போனதுகள். பச்சைப் பாலனுகளை என்ன விசாரிக்கப் போறாங்களாம். கையில் இருந்த காசை வானம் பாக்க வீசி எறிந்துவிட்டுத் தலை அடிச்சபடி ஓடுறா வள்ளியாச்சி. பின் தொடர்கிறான் சுந்தரம். இரைதேடிப் போன பறவைகள் வீடுதிரும்பி ஆலமரத்தை நிறைக்கிற நேரம் மனிசியின் கூச்சலில் பறவைகள் மொத்தமாக கூடு கலைந்து பறக்கின்றன எட்டுத் திக்கிலும். இடிவிழுந்த சத்தம் சந்தையில். அங்கு நின்ற ஒன்றிரண்டு கடைக்காரர்களும் பூட்டின கடைகளை விட்டோடிப் பரபரப்புடன் ஒன்று கூடிக் கதைப்பதற்காகச் சேர்ந்துவிட்டார்கள். என்னப்பா இங்கயும் தொடங்கிவிட்டாங்களே பள்ளிகூடப் பிள்ளையள விசாரணையெண்டு கொண்டு போறதுக்கு. இவங்களுக்கு ஆம்பிளப் பிள்ளையண்டாலும் சரி பொம்பிளப் பிள்ளையெண்டாலும் சரி எல்லாரும் இயக்கமெண்டே நினைக்கிறது. அது சரி எங்கட பிள்ளையள் ஆண் பெண் வித்தியாசமில்லாம சமமா சண்டை பிடிக்கப் போராட்டத்தில இணைஞ்சா பிறகு உலக நாடுகளே அப்பிடித்தானே கதைக்கிறாங்கள். அத வைச்சுத்தானே இந்த பாள்படுவானுகள் இப்பிடிச் செய்யிறானுகள். இப்பிடியே போனா வருங் காலத்தில எங்கட பிள்ளையள் பள்ளிக்கூடமே போகேலாது போல இருக்கு. ஆலடியில் ஒன்று கூடிய கடைக்காரர்களுக்கு மனஞ் சலிச்சுப்போச்சு. வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து ஒரு கோடிக்கு வந்து போற வழி தெரியாமல் சனமெல்லாம் தவிச்சுப்போய் கிடக்கிற காணிக்குள்ள கொட்டில் போட்டு நிம்மதியா இருக்கவே இல்ல. கைதடியில் இருந்த சனத்தோட வந்த சனமும் சேர்ந்து பள்ளிக்கூடந் தவிர வாசியசால, கோயில், சந்தையெண்டு கிடந்த பொதுவிடமெல்லாம் ஒரே சனக்கூட்டம். இந்தக் கேட்டுக்குள்ள துலைவானுகளோட காம்ப் இதுக்குள்ள கிடந்து தொல்லையா கிடக்குது. ஆலடியில் நின்றவர்களின் பேச்சில் பரபரப்பு மட்டுமே குடிகொண்டுவிட்டது.

வீட்டுக்கு வந்த வள்ளியாச்சி ராசம்மாவும் பேரனும் இல்லாததை உணர்ந்தாள். சுந்தரத்திடம் அவர்களைக் கேட்டறிய சுந்தரத்திடம் அவர்கள் எங்கு சென்றார்கள் என்ற தகவல் தெரியவில்லை. ராசம்மா கைதடிப் பள்ளித் துணை அதிபர் என்பதால் காலையில்தான் பள்ளி வேலைகளைப் பார்த்துவிட்டுச் சனிக்கிழமை என்பதனால் கோவிலுக்குச் செல்வதாக முன்னர் கூறியிருந்தாள். அப்படித்தான் நடந்திருக்கும் எனவெண்ணிச் சுந்தரத்தின் சைக்கிளில் ஏறிச் செம்மணிப் பொலிஸ் ஸ்ரேசனுக்கு பறந்தாள் அவள். சுந்தரத்தின் பதட்டம் அவனது உடலைத் தாண்டி அவன் மிதிக்கும் சைக்கிளின் உலாஞ்சலில் தெரிகிறது. என்னதான் வள்ளியாச்சி பிள்ளைகளைப் பட்டதாரியாக்கிப் பார்த்தாலும் கடைசிக் காலத்தில் தான் யாருக்கும் பாரமாக இருந்துவிடக் கூடாது என்பதில் மனவுறுதியுடன் இருப்பதனால் என்னவோ தன் வருமானத்திற்கு இந்தக் கடக வியாபாரம். மற்றப்படி மகளின் வருமானத்தில் சாப்பிடக் கூடாது என்ற பிடிவாதக் குணம் தள்ளாடும் வயதிலும். சொல்லப்போனால் பரந்து விரிந்த வயல்களினதும் தென்னந் தோப்புகளினதும் கங்காணிதான் வள்ளியாச்சி. கங்காணிக்குத் துணை சுந்தரம். செம்மணிப் பொலிஸ் ஸ்ரேசன் வந்தடைந்தவர்கள் அவசரமாக உள் நுழைந்தும் இன்ஸ்பெக்டர் வருகைக்காகக் காத்துக் கிடக்க வேண்டியதாகி விட்டது. வள்ளியாச்சியை பொலிஸ் ஸ்ரேசன் வாசலில் அமர வைத்திருந்தார் துணைக் காவலர். சுந்தரம் பதட்டத்துடன் காணப்பட்டாலும் பொலிஸ் ஸ்ரேசனில் எந்தவித பதட்டமும் தோன்றவில்லை. வள்ளியாச்சியின் பார்வை தளர்வுற்றுப்போய் முன்னே தெரிந்த வராண்டாவின் மேசைகளினதும் நாற்காலிகளினதும் இடைவெளிகளை ஊடுருவி மண்டிய இருள் சூழ்ந்த அந்தக் கம்பிகளின் உள் நுழைந்து வெறும்

சீமெண்டுத் தரையை வெறிக்கப் பார்த்தவாறு சாய்ந்திருந்தாள். பூட்டப்பட்டிருந்த செல்களில் ஒன்று திறக்கும் சத்தம், இரும்புப் புட்டினுள் சாவிப்போட்டுத் திறக்கும் சத்தம் செவிப்பறையைக் கிழித்தது. காக்கி ஜீன்சும் சிவப்புச் சப்பாத்துகளும் அணிந்த கால்கள் தடதடவென செல்லின் உள்ளே நுழைந்தன. என்னதான் மின்விளக்குகள் ஒன்றிரண்டு கண்சிமிட்டிக் கொண்டிருந்தாலும் சூரியனின் கதிர் பொலிஸ் ஸ்ரேசனின் மேற்கூரையில் இட்ட கண்ணாடி ஓட்டயினூடே தனது கதிர்களை வீச மெல்லிய ஒளிமட்டும் சிறிய வெளிச்சத்தை வழங்கிக் கொடிருந்தது. ஒளிர்ந்து கொண்டிருந்த ஓரிரு மின்விளக்குகள் தம் ஆயுள் முடியுந்தருவாயில் விட்டு விட்டு மின்னிக் கொண்டிருந்தன. அவ்வப்போது காவலர் ஒருவர் மட்டும் மணிக்கு ஒருமுறை அனைத்துச் செல்களின் கதவுக் கம்பிகளில் லத்தியால் மற்றச் செல்களில் அடைக்கப் பட்டிருந்த அரசியற் கைதிகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். பொலிஸ் நிலையத்தின் ஓதுக்குப் புறமாய்க் கடைசியாக இருந்த அந்தச் செல்லில் நுழைந்த காவல் நாய்களில் ஒன்று மின்னி மின்னி ஒளிர்ந்த வெளிச்சத்தை அணைத்தபடி உள்ளே சென்றான். சூரியனின் ஒற்றைக் கதிரினால் அந்தச் செல்லில் நிழல் அசைவது மட்டும் தெரிந்தது. பள்ளிச் சீருடையில் குப்பறக் கிடந்த சாந்தியை இரு கால்களிலும் பிடித்து இழுத்துச் செல்லின் நடுவில் போட்டான் ஒருத்தன். தகுந்த காரணமில்லாச் சித்திரவதையினால் அடிதாங்க இயலாத நிலையில் மயங்கிக் கிடந்த அவளின் பள்ளிச் சீருடையைக் களைந்து செல்லின் கதவுக் கம்பிகளில் எறிந்தான் இன்னொருவன். காக்கி உடைகளும் பூட்சுகளும் களையப்பட்ட நிலையில் இருவர் சிகரெட்டுகளை மூட்டி அந்த செல்முழுவதும் புகை பரப்பிக் கொண்டிருந்தார்கள். புகை மூட்டத்தினால் இருமுடன் கூடி மண்டிக் கிடக்கிறது. புகை மண்டிக் கிடந்தான் நடுவில் வெற்று மேனியாய்க் கிடந்த அவளின் மேலே ஒருவன் பின் ஒருவராக அறிவற்றுக் கிடந்த உடலை மேய்ந்து கொண்டிருந்தன கொடிய விலங்குகள். அரை மயக்கத்தில் உயிருக்குப் போராடிய அவள் முழுநினைவு திரும்பிச் சத்தமிட முயன்றாள். கண்களும் வாயும் கட்டப்பட்ட நிலையில் தன்மீது விலங்குகள் தம் பசியைத் தீர்ப்பதை உணர்ந்து தடுக்க முடியாமல் திணறினாள். வாயற்ற பொலிஸ் நிலையமும் வாய் கட்டப்பட அவளும் முனகிய படியே மணித்தியாலங்கள் கழிந்தன. பள்ளிச் சீருடை தன் வெண்மையிழந்து குருதி தோய்ந்துகொண்டிருந்தது. விலங்குகள் பசி தீர்ந்ததும் மல்லாந்து கிடந்தவளின் கால்களை இறுகக் கட்டி இரு கைகளையும் தரையில் வைத்து அங்கொருவர் இங்கொருவராக மிதித்தபடி ஆசுவாசப் போதையில் தள்ளாட இருவர் அவளின் கழுத்தில் லத்தியை போட்டு அழுத்தி மிதித்தனர். சூரியன் மெல்ல மெல்ல மேற்கு நோக்கி நகர்ந்து செல்ல, உட்புகுந்த ஒளிக்கதிர் தன் வலுவிழந்து இருளை உமிழ்கிறது. அவளின் உயிர் நாடியும் ஒளியுடன் சேர்ந்து மெல்ல மெல்ல மேலே சென்று அடங்கியது.

இரண்டு நாட்கள் வீடுதிரும்பாத சாந்தியைத் தேடி அலைகின்றனர் தம்பியும் ராசம்மாவும். இறுதியாக பொலிஸ் ஸ்ரேசன் வந்தவர்கள் தன் பிள்ளைக்கு என்ன நடந்திருக்குமோ என்ற அச்சத்தில் நீங்கள் தான் பிள்ளைகளைப் பிடிச்சு வந்தனீங்கள். ஊர்ச் சனமெல்லாம் கண்டிருக்குதுகள். அதில என்ர பிள்ளையும் இருந்திருக்கிறாள். எல்லாப் பிள்ளையளும் வீட்டுக்கு வந்திட்டுதுகள். என்ர பிள்ளைய மட்டும் எங்கயடா அடைச்சு வைச்சு சித்திரவதை செய்யிறியள். உங்களுக்கு புண்ணியமமா போகுமடா, என்ர பிள்ளைய குடுத்திடுங்கோடா. தாயின் கதறலை சகித்துக் கொள்ள முடியாமல் மகனும் ஓவெனக் கண்களில் நீர்வடிய ஒவ்வொரு செல்களையும் நோட்டமிடுகிறான். மேசையில் அமர்திருந்த அதிகாரி இருவரையும் அதட்டி உங்க பில்லைங்கல நாங்க ஒன்னும் பிடிக்கல. போமா உன்னோட பில்லைய கூட்டிக்கிட்டு இடத்த காலிபண்றது. அவனது கடுமையான குரல் தொனியில் நிலைகுலைந்து போகிறாள் ராசம்மா. இந்த ஸ்ரேசன்ல அப்டி யாரும் இல்ல. உங்க பில்லையோட பெயர் விபரத்த அங்க சொல்லிட்டு போறது. கிடைச்சா தகவல் சொல்லி அனுப்பிறோம் உங்களுக்கு.

*சற்றும் தாமதிக்காமல் ராசம்மா இல்ல இல்ல தெருவில நிண்ட சனமெல்லாம் பாத்ததுகளாம். நீங்கள்தான் இங்க கொண்டு வந்தனிங்களெண்டு சொல்லுதுகள். மறைக்காதையுங்கோ, நான் மேலிடத்துக்குப் போவேன். என்ர பிள்ளைய என்ன செய்தனியள்? சொல்லுங்கோடா துலைஞ்சு போவாரே.. என்றபடி மண்ணை வாரி இறைப்பது போல கைகளை அசைத்துச் சாபமிட்டுக் கொண்டாள். போலிஸ் ஸ்ரேசன் நிசப்தமாகிக் கொண்டது. சிறிது நேரத்தில் ராசம்மாவும் மகனும் தனித் தனிச் செல்களில் மயக்கமுற்ற நிலையில் அடைக்கப் பட்டிருந்தனர். இரவு 1:30 மணியிருக்கும், இரு செல்களிலும் புகுந்த நான்கு காவலர்கள் இரண்டு சாக்கு மூட்டைகளைப் போலிஸ் ஸ்ரேசனுக்கு வெளியே நின்றுகொண்டிருந்த கைதிகளின் வாகனத்தில் ஏற்றுகின்றனர். கைதிகளின் வாகனம் சிறிது நேரத்தில் அந்த இடத்தை விட்டு மறைகிறது.*

*நண்பகல் வெய்யில் சற்றுத் தணிய மெல்லிய காற்று வீசி வெப்பத்தைத் தணிக்கிறது. பள்ளி வாகனங்களும் பணி முடிந்து வீடு திரும்புபவர்களுமாக சாலை ஆரவாரப்படுகிறது. சாலையெங்கும் போக்குவரத்து நெரிசலாகிவிட்டது. வெளியே சென்றிருந்த இன்ஸ்பெக்டரின் வாகனம் போலிஸ் ஸ்ரேசன் காம்பவுண்டுக்குள் நுழைகிறது. அதைப் பார்த்த சுந்தரம் பதட்டமாகிறான். வாசற் படியில் சரிந்து கிடந்த வள்ளியாச்சி வெய்யில் கொடுமையாலும் உடற் சோர்வினாலும் தளர்ந்துபோய் அயர்ந்துவிட்டாள். வண்டியை விட்டிறங்கிய இன்ஸ்பெக்டர், என்ன சுந்தரம் இந்தக் கிழவி யாரோ பண்ணின தப்புக்கு என்னைய இந்த தண்ணியில்லாக் காட்டுக்கு மாத்தி விட்இருக்காங்க. இங்க வந்தா எவனோ செஞ்ச தப்புக்கு என்னைய பாடாப்ப்படுத்துறா இந்த கிழவி. கொஞ்சம் நீயே எடுத்துச் சொல்லுப்பா. இந்தக் கொடுமையெல்லாம் பண்ணினது நானில்ல அது வேற அதிகரின்னு. என்ன செய்யிறது சார்? மனிசிக்கு பேத்தியையும் பேரனையும் மகளையும் பறிகொடுத்த் கவலையில இந்த நிலைக்கு வந்திட்டா, இன்னும் கொஞ்சநாள் விட்டா இங்கேயே செத்திடும் மனிசி. நான் என்ன செய்ய்யிறது சுந்தரம்? மேலிடத்தில இருந்து நேத்தைக்குதான் ஓடர் வந்தது. வக்கீல் முன்னாடி அந்த இடத்தத் தோண்ட வேணுமாம். எல்லாத்துக்கும் ஒரு பார்மாலிட்டி இருக்கெல்லோ? அதத்தான் என்னால செய்ய முடியும். இதில நான் தனியாப் பண்றதுக்கு ஒண்டுமில்ல. இப்ப நேரமாகிட்டு, நாளைக்குதான் வங்கீலுங்க வார்றாங்க. இண்டைக்கு வேற கேஸ் விசயமா போன இடத்திலதான் மனிசின்ர கேஸ் முடிவுக்கு வந்திருக்கு. அதில இந்த கேஸ்ல முக்கியனான சில பொலிசையும் அரஸ்ட் பண்ண ஓடரும் வந்திருக்கு. அதனால இந்த கிழவிட பிரச்சனை நாளைக்கு முடிஞ்சிடும். இப்ப கூட்டிட்டு போய்ட்டு நாளைக்கு விடிய ஓம்பது மணிக்கு இங்க வந்திடுப்பா. எல்லோரும் வந்தபிறகுதான் பார்மாலிட்டி செய்ய வேணும். சரியா நான் சொன்னது விலங்கிட்டுதானே? அப்ப சரி நீ போய்ட்டு நாளைக்கு வாறது. என்ன?*

.........


*தன் தலையைச் சொறிந்தபடி அங்கிருந்து போக மனமில்லாத வள்ளியாச்சியைக் கையைப் பிடித்து தூக்கி விட்டபடி நடக்கிறான் சுந்தரம். மறுநாள் ஆளரவமற்ற செம்மணி வயல்கள் ஆரவாரப்படுகிறது. குறிப்பிட்ட இடத்தில் பரந்த வட்ட வடிவமாக கம்பிகள் மண்ணில் புதைக்கப்பட்டு சிவப்பு வெள்ளை நாடாவினைத் தாங்கி நிற்கின்றன. காக்கி உடைகளும் ஒரு சில வெள்ளை நிற உடைகளும் இன்னும் சில இராணுவச் சீருடைகளும் கருப்பு அங்கிகளை கையில் தாங்கிப் பிடித்தபடி சிலரும் கூடிநிற்க புதைகுழிகள் சில தோண்டப்படுகின்றன. மீட்கப்பட்ட பல உடல்களுக்கு மத்தியில் மூவரின் உடல்கள் தனியாக்கப்பட்டு அடையாளம் காணும் பணியில் உறுதிப்படுத்தப் படுகிறது. இதையறிந்த இன்ஸ்பெக்டர் சுந்தரத்திடம் தனிமையில் அழத்துச் சொல்கிறான் அந்த கிழவியோட குடும்பந்தாய்யா அந்த மூண்டு*

பொடியும். கிழவிய ஏதாச்சும் சொல்லி கூட்டிக்கொண்டு போ, இனிமே கொஸ்பிடல் பார்மாலிட்டி முடிசுதான் பொடி குடுப்பாங்கள். அதுவும் எத்தினை நாளாகுமெண்டு தெரியாது. பரபரப்பை ஏற்படுத்திய இச்செயலால் மக்கள் கட்டுக்கடங்காமல் கூடுகின்றனர் செம்மணியில். அதனால் பொலிசாரும் இராணுவத்தினரும் கனரக வாகனங்களில் குவிக்கப்பட்டு மக்களைக் கட்டுக்குள் கொண்டுவரும் பணி நிகழ்கிறது. புதைகுழியில் மேலும் உடல்கள் பல அடையாளம் காணும் பணியில் தாமதப்படுகின்றது. திடீரென மூடிய கருமுகில் கூட்டம் சோவெனப் பெருமழை பொழியத் தொடங்கியது. சுந்தரம் பதட்டத்தை ஒருமூலையில் தள்ளி வைத்துவிட்டு, எணேய் ஆச்சி மழை பிலக்கிறதால இங்க யாரையும் நிக்க வேண்டாமெண்டு பொலிஸ்காரங்கள் சொல்லுறாங்களணை. நீ என்ன செய்யப் போறாய்? என்னடா மோன இத்தின உசிரப் புதைச்சிருக்கிறாங்கள் படுபாவியள். இதுக்குள எங்க மாட்டுப்பட்டுதுகளோ என்ர பிள்ளயள். யாரையாச்சும் கண்டு பிடிச்சாங்களோடா இந்த துலைவார். இல்லையண இன்னும் இனங் காணேல்ல ஒருத்தரையும். ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய்தான் கண்டு பிடிப்பாங்களாம். நீ வாண நாங்கள் நிக்கேலாது போவம். ஒருவழியா மனிசிய இழுக்காத குறையாக் கூட்டிக்கொண்டு பதட்டத்துடன் சைக்கிள் மிதிக்கிறான் சுந்தரம். மழை இருட்டினதால நேரம் போனதைக் கவனித்தானில்லை சுந்தரம். மணி ஒன்பதைத் தாண்டியிருந்தது. வேகமாகப் பெய்த மழையால் ரோட்டில் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்துகொண்டே செல்கின்றன. பேருந்து நிறுத்தமொன்றில் சுந்தரமும் வள்ளியாச்சியும் அடைந்து விடுகின்றனர். மழையில் நிறைந்து ஓடும் நீரைவிடப் பேருந்து நிறுத்தக் கட்டிடத்தில் சனங்களின் நெரிசல் நிறைந்து வழிகிறது. மேலும் செல்லமுடியாத வாகனங்களும் ரோட்டின் இரு கரைகளிலும் நிரை கட்டி நிற்கின்றன. இடிந்துபோன பேருந்து நிறுத்தம். பாதி நனைந்தவரும் பாதி நனையாதவர்களும் முண்டியடித்து கொண்டு நிற்கின்றனர். இருபது நிமிடங்கள் பெய்திருக்கும் மழை. எங்கும் ஒரே இருட்டு. வாகனங்களின் போக்குவரத்து அதிகரிக்கின்றது. பேருந்து நிறுத்தத்தில் நின்றவர்களும் மெதுவாகக் கலைகின்றனர். வள்ளியாச்சி செம்மணி வயலில் எடுக்கப்பட்ட உடல்களைப் பார்த்ததிலிருந்து பேச்சுமூச்சின்றி மௌனமாகவே வந்ததைக் கவனித்திருந்தான் சுந்தரம். பேருந்து நிறுத்ததிலிருந்தும் எதுவும் பேசாமல் மெள்ள நகர்ந்து நடக்கிறாள் வீட்டை நோக்கி. சுந்தரம் அந்தக் கூட்டத்தில் சைக்கிளை எடுத்துக்கொண்டு வள்ளியாச்சி நடந்த திசையில் ஓடுகின்றான். ஏணேய் நில்லண ஆச்சி. நானும் வாரேன், சைக்கிள்ள ஏத்திக்கொண்டு போறேன்.

"........."

எதிர்த் திசையிலும் வாகனங்களும் சைக்கிள்களும் கடந்து செல்கின்றன. எங்கிருந்தோ கொண்டுவரப்படும் சவப்பெட்டிகள் தாங்கிய இரண்டு டிரைக்டர்கள் கண்ணில் தென்படுகின்றன. மழையின் வேகம் மிதமாகிச் சாரல் பெய்துகொண்டிருந்தது வானம். சுந்தரமும் வள்ளியாச்சியை நெருங்குகிறான். எதிரே வந்த டிரைக்டரில் இருந்த சவப்பெட்டிகளில் ஒன்றின் மூடி லேசாக மேலே தூக்கப்பட்டு உள்ளிருந்து ஒரு கை பக்கவாட்டில் நீட்டப்படுகிறது. இருளில் சவப் பெட்டிகளில் இருந்து கைநீள்வதைக் கண்ட வள்ளியாச்சி பதட்டத்தில் நெஞ்சை ஒருகையால் பிடித்தபடி பெருமூச்சொன்றை விடுவதற்கு முயற்சி செய்துகொண்டே பாதையின் நடுவே சாய்ந்து விழுகிறாள். எதிரில் வந்த இரண்டாவது டிரைக்டர் சில்லுகள் வள்ளியாச்சி மீது ஏறிவிடுகின்றன. ஐயோஞ் என்ற கூச்சலோடு சுந்தரம் சைக்கிளில் இருந்து பாய்ந்து ஓடிவந்து பார்க்கிறான் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் மிதந்தாள் வள்ளியாச்சி.

●




## "கொங்குதேன்"
## நூல் எனது பார்வையில்

*கோவை மண்ணின் மணத்தை, நல் மனங்களை, பேரன்பு விதைகளை, உணர்வுகளின் பிழம்புகளாக இதயத்தில் உலவி கொண்டிருந்த நிஜங்களை இறக்கி வைத்திருக்கும் புத்தகம் தான் கொங்குதேன். அடர்த்தியான கருமேகமும், பேயறையுற மழையும், கன்னத்தை கிழித்திடும்*

காற்றும், மண்வாசமும் நிறைந்த இயற்கை சூழல்களை மணம் மாறாது சொல்லிருக்கும் வாழ்வியலே கொங்குதேன். ஒரு எழுபது ஆண்டு வாழ்வியலை எந்த கற்பனையும் இல்லாதது எதார்த்த மொழியில் காவியமாக்கி இருக்கிறார்.

கடந்து வந்த பாதையை நின்று அசைபோட்டு, அதை எழுத்துக்களாக மாற்றியதை படிக்கும் போதே வந்த கண்ணீர் நிஜம் என்றால், இதை எழுதியவரின் கண்ணீரின் அளவீட்டை எந்த அளவுகோலால் அளப்பது. கண்டிப்பாக இறந்து போன பெரியவர்களின், உறவுகளின் ஆசியால், வழிந்த கண்ணீர் துடைக்க பட்டிருக்கும்.

நடிகர் சிவகுமாராய் அறியப்பட்டவர்கள் பின்னாளில் பேச்சாளராக பார்த்தனர். பிறகு மிகச் சிறந்த ஓவியர் என்பதை கேள்வி பட்டதும் கண்கள் விரிந்தன. அடுத்து கொங்குதேனை அவர் தொடராக எழுதி புத்தகமாக வந்துள்ளதை பார்க்கும் போது, திரையுலகில் இத்தனை திறமைகள் கொண்டவராக, மனிதம் நிறைந்த மனிதனாக இருப்பதற்கு காரணமாக இருந்தது யாராக இருக்கும் என்று யோசிக்கையில், விரல் பிடித்து அழைத்து சென்ற இறை ஆன்மாக்கள் தான் என்று புரிந்து கொள்ள முடிந்தது.

இந்த கொங்குதேனுக்கு எப்படி மதிப்புரை எழுதுவது. அத்தனையும் நல்ல செய்திகள். உணர்வுகள் நிறைந்த பகுதிகளை சொல்லாமல் கடப்பது என்ற குழப்பத்தோடும், நடுக்கத்தோடும் எழுதுகிறேன். இந்த புத்தகத்தை எடுத்து கீழே வைக்காமல் 24 மணி நேரத்தில் படித்த ஒரே புத்தகம் என்றே சொல்ல வேண்டும். அம்மா, அக்கா, தாய்மாமன், பெரியம்மா, சின்னம்மா, ஜானகி, குமரேசன் அண்ணா, ஜி டி நாயுடு, சின்னப்பா தேவர், கிட்டு அண்ணா, வேலுமணி அம்மா, மாதம்பட்டி சிவகுமார் என்ற நீண்ட பட்டியலில் ஓரிரண்டை சொல்லி இந்த கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

கோவை மாநகரின் வழக்கு சொற்களான போசி (சட்டி), தவசமா (தானியமா), வங்கு (பொந்து), மொடக்கடி (சேட்டை). தொருசுக (கெட்ட பசங்க), வகுறு (வயிறு), தரம்பின (தேய்ந்த). சேகு (உரம்), செகை (நீர்க்கடுப்பு), வேசகை (வெயில்), மொகட்டு (விட்டம்) என்று புத்தகம் முழுவதும் பரவி கிடந்த வார்த்தைகள் இன்னும் சுவாரசியத்தை தந்தது என்றே சொல்ல வேண்டும்.

▸ கோசாணம் என்ற தண்டனையை அனுபவிக்க பயந்து பள்ளிக்கு போகாமல் ஓடி ஒளிந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றும் கண்களில் காட்சிகளாக விரிகிறது. இன்று சிவகுமார் அவர்களுக்கு இருக்கும் புகழுக்கும், மதிப்பிற்கும் காரணம் அன்று கல்வி முறையில் இருந்த அக்கறையும், கண்டிப்பும் என்று பதிவு செய்து இருப்பது வருங்கால சந்ததிக்கு பாடமாகவே இருக்கும்.

▸ பிளேக் நோய்க்கு பலியான மூத்த அண்ணன் சண்முகம் இறப்பும், அவரை எரியூட்ட பட்ட பாடும் நடுக்கம் தந்த பயமும், பெரும் துயரமாக தான் இருந்து இருக்கும். அதன் பிறகு நண்பன் உத்தமனின் இறப்பு. விளையாடி கொண்டிருந்தவன் பருத்தி கிடங்கில் மாட்டி, மூச்சு முட்டி இறந்த செய்தி ஒரு சில நிமிடத்தில் கேட்டால் எப்படி இருக்கும் அதே உணர்வு எனக்கும் இருந்தது. மனம் கனம் கூடி தான் போயிருந்தன.

▸ ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு ரூபாய் கட்டணம் ஏற, தனது அக்காவின் படிப்பை நிறுத்துகிறார் அம்மா. அக்காவின் படிப்பு தடைபட்டு போன வலி உயர்ந்த நிலையை அடைந்த பிறகும் உதிராமல் நிற்கிறது. பாப்பா (அக்காவை அப்படியே அழைத்து இருக்கிறார்) ஆசைப்பட்ட வத்தக்கறவை மாடை வாங்கி தருவது ஒரு பக்கம், அந்த ஒன்றை தவிர வேறு

எதையுமே அக்கா இது வரை வாய் விட்டு கேட்டதில்லை என்ற இயல்பு நம் சகோதரிகளை நினைவு படுத்திடும். அதோடு விலங்குகளில் ஆண்கள் எல்லாம் கம்பீரம். ஆனால் மனித ஜாதியில் பெண்களே அழகு என்ற நிதர்சனம் உண்மை தான் என உரைக்க வைத்தது.

▸ சாட்டு கவல கொண்டு மாடுகள் பூட்டி தண்ணி இறைத்து விவசாயம் பார்த்து இருப்பதையும், சாட்டு கவல எப்படி இயங்குகிறது என்பதையும் பதிவு செய்து இருப்பது சுவாரசியம்.

□ மாட்டை சினைக்கு விடுவதும், அப்படி விடும் போது அந்த மாடு எடை தாளாமல் இருக்க கம்பு வைத்து தடுப்பதையும், அதன் பிறகு அந்த மாட்டை சில மணி நேரத்திற்கு தூங்க விடாமல் வைத்து இருப்பதும் என்னை போன்று நகரத்தில் வளர்ந்தவனுக்கு புதிய செய்தி.

▸ அருகு தோண்டும் போது ஆண்கள் களியோடு தயிர் சேர்த்து பிசைஞ்சு சின்ன வெங்காயம் சாப்பிட்டு இறங்குவதையும், அப்போது வெடி வச்சு 200 அடி தூர திரியில் தீ வைத்து பிளக்கும் இடங்கள் நிறைய வாகனத்தை பதம் பார்த்ததும், அதே வெடியால் எதிர்பாராமல் தாத்தா இறப்பதும் விதியின் படி தான் எல்லாம் நடக்குதோ என்பதை உணர வைத்தது.

▸ பள்ளி படிக்கும் வரை செருப்பில்லாமல் நடந்ததும், கல்லூரி போகும் போது சைக்கிள் கிடைத்ததும், அந்த “ஓட்ட” சைக்கிள் வைத்து கொண்டு சிட்டாய் பறந்ததும் புத்தகம் வாசிக்கையில் என்னையும் சேர்த்தே பறக்க வைத்தது.

▸ பள்ளி கடைசி வருடம். புகைப்படம் எடுக்க ஐந்து ரூபாய் இல்லாது நினைவுகளை பதிவு செய்யாமல் போன வலி, 4 கோடி ரீலில் நடித்த பின்பும் அடங்காத வேதனை என்னையும் உரசி பார்த்தது. அதே ஆசை பல வருடங்களுக்கு பிறகு நிறைவேறியதை படிக்கும் போது எனது ஏக்கமும் தீர்ந்ததாய் உணர்ந்தேன் என்றே சொல்ல வேண்டும்.

▸ முதன் முதலாக சினிமா பார்த்த அனுபவம். எப்படி எல்லாம் காட்ட பட்டது. ஒவ்வொரு ரீலுக்கும் ஐந்து நிமிட இடைவெளி விடப்பட்ட காலகட்டத்தையும், எச்சில் துப்ப வைத்திருக்கும் டப்பா போடும் ஆட்டம் மற்றும் நாற்றம். அப்பப்பாஞ். அழகான வாழ்வியலை யதார்த்தமாய் தந்து இருப்பது இன்றைய தலைமுறைக்கு வரலாறு இது.

▸ அம்மாவை கற்பகம் படம் பார்க்க வைத்து அழகு பார்த்த மகனை கொஞ்சி தீர்க்க ஆசைப்பட்டது மனசு.

▸ வகை வகையா போட்டோ எடுத்து வெறுப்பை சம்பாதித்த கிருஷ்ணசுவாமியின் பந்தா அந்த காலத்து தற்பெருமையை அழகாய் சித்தரித்தது.

▸ முருக பெருமானாக கந்தன் கருணையில் நடிக்கும் வாய்ப்பை பார்க்கும் போது, சிவகுமார் அவர்களின் அய்யன் சீதக்காதி போல வந்து ஆசிர்வதித்தாரோ என்று எண்ணத் தோன்றியது.

▸ ஏழு வயதில் கல்யாணமாகி வெள்ளைச்சீலை குழந்தை 13வது வயதில் வயசுக்கு வந்து இயற்கையின் மரபை மீறிய சடங்குகள் கண்களை பதம் பார்த்தன. தனது சகோதரி அடுத்தவர் நிலத்தில் வேலை செய்ய விரும்பாத சகோதரன் 15 ஏக்கரா வாங்கி அதில் வேலை செய்ய

வைத்தது பாசம் பாத்தி கட்டி அந்த ஆன்மாவிற்கு நீர்பாய்ச்சி கொண்டிருந்தது.

▸ படிப்பு வரலேன்னு படிக்க அழைத்து வரப்பட்ட அக்கா மகள் ஜானகிக்கு தீப்பிடிச்சு மருத்துவமனையில் சேர்க்கும் செய்தி கிடைக்கிறது. ஓடுகிறார். கரிக்கட்டையாய் இருக்கிறாள் ஜானகி. "தோளுல போட்டு வளர்த்த பொண்ணு, போயிருச்சேய்யா" என்ற போதும்,

சின்ன மகளை நீ இங்க விடாத என்று சிவகுமார் சார் சொல்ல,

"சின்ன மகளுக்கு ஆயுசு கட்டையா இருந்தா செத்துட்டு போகட்டும், உனக்கில்லாத புள்ள எனக்கு வேண்டாம்" என்று மச்சான், அக்கா பதில் தர, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்த நிகழ்வு வாசிக்கும் போது உதட்டை சுளித்து அழ வைத்தது.

▸ விட்டத்தில் இருந்து தொங்க விடப்பட்ட இரு கயிறை வலது கையில் ஒன்றும், இடது கையில் ஒன்றும் பிடித்து கொண்டு, மண்டி போட்டு கொண்டு முக்கி குழந்தை பிறப்பு நிகழ்ந்து இருக்கிறது என்பதை வரிகளால் கூட படிக்க முடியவில்லை. ஆம் பெண்கள் நடமாடும் தெய்வங்கள் தான் என்று சொல்ல வைத்த நிகழ்வு இது.

▸ ஓவியம் வரைய காரணமாக இருந்த வாத்தியார் விஜய ராகவன் சார் வரைந்த தனது ஓவியத்தை தனது உருவத்தை பார்த்து பிரமித்து இருக்கிறார். இன்று இவர் வரையும் ஓவியத்தில் எல்லாம் விஜயராகவன் அய்யாவின் முகம் ஓவியத்தில் மூலையில் எங்கோ தெரிவதாக உணர்ந்தேன்.

▸ வேலுமணி அம்மாவின் தாய்மை, மாதம்பட்டி சிவகுமார் அவர்களின் பேரன்பு, எப்போதும் என் பேச்சை கேட்க முன்வரிசையில் அமர்ந்திருக்கும் முத்துமாணிக்கம் அண்ணன், வீர சாகசம் செய்யும் கிட்டு அண்ணா, என்று நீண்டு கொண்டே சென்றாலும் குமரேசன் அவர்களின் பாசம் என்னை உடைத்து அழ வைத்தது.

▸ குமரேசன் அண்ணன் முறை. எப்போதும் ரயில் நிலையத்திலும், விமான நிலையத்திலும் வழி அனுப்ப வரும் பாசக்காரன். கிட்னில இருக்கும் கல்லை மருந்தால கரைக்கலாம் என்று சொன்ன பிறகும், அந்த செய்தி குமரேசன் காதை எட்டுகிறது. பதறி அடித்து ஓடுகிறார். உதடு துடிக்க ஒரு கவரை தருகிறார். அதில் "தன் இரண்டு கிட்னியும் தானம் செய்கிறேன்" என்று எழுதியுள்ள பத்திரத்தை சிவகுமார் சார் படித்து விட்டு திட்டுவதை பாசமாகவே பார்க்க முடிகிறது. மனிதம் படிப்பில் அல்ல என்பதை உணர்த்திய குமரேசன் என் நெஞ்சில் தனி இடம் பிடித்து விட்டார். அவரோடு சிவகுமார் சார் பல மடங்கு மரியாதையை என் இதயத்தில் ஏற்றி பறக்க விட்டு கொண்டு இருக்கிறார். இந்த கொங்குதேன், என் இதயத்தை கரைத்த பாசம் பொங்கும் தேன்.

ஆசிரியர்: நடிகர் சிவகுமார்

பதிப்பகம்: தமிழ் திசை

விலை: 225 ரூ

●

